வெளியீடு 10-5-2006 Issued 10-5-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, ஜனவரி 23, 2006—தொகுதி 89 — எண் 2**

**Monday the 23rd January, 2006 —Volume 89 — No. 2**


*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

[Price Rs. 3.00

924
21.9.06

23–1–2006

# உள்ளடக்கம்

பக்கங்கள்


1. வினாக்கள்–விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 121-155

2. தகவல் கோரல்—

(அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள் 156

(ஆ) தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி மேதகு ஆளுநரைச் சந்தித்ததாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி 156-162

3. உரிமை மீறல் பிரச்சினை—

சட்டமுன்வடிவு பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பே ஆளுநரிடம், அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டாமென திரு. மு. கருணாநிதி சொல்லியிருப்பதாக வந்துள்ள செய்தி 162-166

4. அறிக்கைகள் அளித்தல்—

பொதுக் கணக்குக் குழு 166

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, *2006* 167

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, *2006* 168

| | பக்கங்கள் |
|---|---|
| **6. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2006-2007, பொது விவாதம்**-தொடர்ச்சி | |
| * திருமதி வளர்மதி ஜெபராஜ் | 169-183 |
| திரு. சி. ஞானசேகரன் | 183-191, 193-203 |
| திரு. ஐ. கணேசன் | 204-207, 210-215 |
| செல்வி க. பாலபாரதி | 215-226 |
| திரு. ஏ.எஸ். கண்ணன் | 226-230, 233-236 |
| **7. அரசினர் தீர்மானம்—** | |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 236-237 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 237-238 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**தை 10, பார்த்திப — திருவள்ளுவர் ஆண்டு 2037**

**2006 ஜனவரி 23, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு".

தமக்குக் கடமையானவை இவையிவை என்று அறிந்து, சான்றாண்மையை மேற்கொண்டு நடப்பவர்களுக்கு, நல்லவையெல்லாம் இயல்பான கடமையாகவே அமையும் என்று, அறிவுடையோர்கள் கூறுவார்கள்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 81, திரு. டி.கே. இராஜா, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**81—**

**புறவழிச் சாலை**

*** 52255—திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 23

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் விபத்து ஏற்படுவதைத் தவிர்க்க புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலே இருக்கின்ற என்னுடைய திருப்பத்தூரில் மக்கள்தொகை அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், தினசரி பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் திருப்பத்தூர் நகரைக் கடந்து செல்கின்ற காரணத்தினாலும் அதிகப்படியான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. நாளொன்றுக்கு 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் திருப்பத்தூரைக் கடந்து செல்ல வேண்டும். கடந்த ஆண்டுகூட 27 விபத்துக்கள் திருப்பத்தூர் நகரிலே குறிப்பிட்ட ஒரு கிலோ மீட்டர் தூரத்திலே நடந்திருக்கின்றன. அதிலே 4 உயிர்ப் பலிகள் நடந்திருக்கின்றன. கை, கால் ஊனங்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது. இப்படித் தொடர்ந்து விபத்துக்கள் நடந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், மக்கள்தொகை பெருகி, வாகனங்கள் பெருகிக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலும் புறவழிச் சாலை வேண்டுமென்று நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கின்றோம். அமைச்சர் அவர்கள், சாத்தியம் இல்லை என்று சொல்கிறார்கள். மறுபரிசீலனை செய்து புறவழிச் சாலை ஏற்படுத்தித் தருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக, சாலையில் 5 ஆயிரம் போக்குவரத்துக் குறியீட்டு எண்ணுக்கு மிகுதியாகவும், சாலையினை அகலப்படுத்த வாய்ப்பில்லாத நிலையிலும் உள்ள இடங்களில் புறவழிச் சாலையை அமைப்பது தேவையாகிறது. சேலம்–திருப்பத்தூர்–வாணியம்பாடி சாலை மாநிலச் சாலையாகும். இதில் கிலோ மீட்டர் 104/0 முதல் 107/0 வரை திருப்பத்தூர் நகரம் அமைந்துள்ளது. திருப்பத்தூர் நகரத்திற்குப் புறவழிச் சாலை அமைப்பதற்கு அண்ணா பல்கலைக்கழகம் 11–7–2002 அன்று நடத்திய ஆய்வின்படி, சாத்தியத்த[illegible] என்று அண்ணா பல்கலைக்கழகம்

ஆவணக் காப்பகம்
227006



2006 ஜனவரி 23]

தெரிவித்துள்ளது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நடப்பு நிதியாண்டில் மீண்டும் ஆய்வு நடத்தி தற்போதைய போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டு, புறவழிச் சாலை அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதெல்லாம் ஏரிகள்மீது பாலங்கள் கட்டி, மேம்பாலங்களைக் கட்டி வாகனப் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்கின்றார்கள். அதேபோல நெருக்கடியான நகரங்களில்கூட மேம்பாலங்களைக் கட்டி போக்குவரத்தைச் சரிசெய்கின்ற அளவிலே, மிக முக்கிய நகரங்களில் எல்லாம் இன்றைக்குப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையிலே மேம்பாலங்களைக் கட்டியாவது அந்த இட நெரிசலைத் தவிர்க்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலைச் சந்திப்புகளில் போக்குவரத்து நெரிசல் மிகுதியாகக் காணப்படும்போது நெரிசல் மிகுந்த ஒரு மணி நேரத்தில் ஒரு வழியில் 10 ஆயிரம் வாகனக் குறியீட்டிற்கு மிகுதியாக இருக்குமாயின் அச்சந்திப்புச் சாலை மேம்பாலம் அமைக்கத் தகுதி வாய்ந்ததாகும். அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் திருப்பத்தூரில் போக்குவரத்து நெரிசலின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, சாலை மேம்பாலம் தேவையா, அல்லது புறவழிச் சாலை தேவையா என்பதற்கு, ஆய்வுகளை நடத்தி முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி தி. மைதிலி.

**திருமதி தி. மைதிலி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் காஞ்சிபுரம் தொகுதியில் இருக்கும் பல்வேறு சாலைகளைப் புத்தம் புதிய சாலைகளாகப் போடுவதற்கு ஆணை பிறப்பித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் அருகிலுள்ள பாலாற்றிலிருந்து தினமும் பல

[2006 ஜனவரி 23

ஆயிரம் லாரிகள் மணல் ஏற்றிக் கொண்டு காஞ்சிபுரம் நகரத்திற்கு வந்துதான் சென்னைக்குப் போக வேண்டியுள்ளது. அப்படிப் போகும்போது, நகரத்தில் இருக்கும் மக்களுக்கும், பள்ளிக்கூடம் செல்லும் மாணவர்களுக்கும் அது இடைஞ்சலாக உள்ளது. இதனால் நெரிசலும், விபத்துக்களும் ஏற்படுகின்றன. இதைத் தவிர்ப்பதற்கு, காஞ்சிபுரம் நகருக்கு ஒரு புறவழிச் சாலை அமைப்பதை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு நிறைவேற்றித் தருமா என்று தங்களின்மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சியில், தமிழகத்தில் இதுவரை கண்டிராத அளவில், 52 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் தரமான தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில், பெரிய அளவிலுள்ள ஈரோடு நகரத்தில் ஒரு புறவழிச் சாலை அமைக்கின்ற திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறது. அது சம்பந்தமாக நிலத்தைக்கூட அளந்து இருக்கின்றார்கள். உடனடியாக நிலத்தைக் கையகப்படுத்தி, அந்தப் புறவழிச் சாலையை அமைத்துக் கொடுக்கின்ற திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம், அரசின தீவிர ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். ரமணீதரன்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு,



2006 ஜனவரி 23]

தமிழ்நாட்டிலே எல்லாச் சாலைகளையும் மேம்பாடு செய்து வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோபிச்செட்டிப்பாளையம் நகரப் பகுதியானது வளர்ந்து வரும் பகுதியாகும். இந்நகரின் மத்தியிலுள்ள மெயின் சாலையில் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், நூற்பாலைகள் இந்தப் பகுதியில் அமைந்துள்ளதால், லாரிகள் போக்குவரத்து அதிகமாக உள்ளது. எனவே, இப்பகுதியில் ஒரு புறவழிச் சாலை அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, போக்குவரத்தினுடைய நெரிசலைக் கருத்தில் கொண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தினுடைய பெரிய நகரங்களிலெல்லாம், இன்று போக்குவரத்து நெருக்கடி என்பது ஒரு சர்வ சாதாரணமான நிகழ்ச்சியாக இருக்கின்றது. எனவே, இதைக் கருத்தில்கொண்டு, நம்முடைய மாநிலத்தினுடைய பெரிய நகரப் பகுதிகளிலெல்லாம் புறவழிச் சாலைகள் அமைப்பதன்மூலமாகத்தான் இதற்கு ஏதாவது ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அந்த வகையிலே, நாகர்கோவிலிலேயிருந்து களியக்காவிளை வரையிலும் பார்த்தால், சமீப காலத்திலே அங்கே ஒரு சர்வே நடத்தினார்கள். புறவழிச் சாலைக்கான சர்வே நடத்தி, அது அதோடு நின்றிருக்கின்றது. எந்த வழிகளும் காணப்படவில்லை. குழித்துறை பகுதியை எடுத்துக்கொண்டாலும், இதே நிலைதான். அதுபோன்று, நாகர்கோவிலை எடுத்துக்கொண்டாலும் இந்த நிலைதான். இதைப் போக்குவதற்காக, எல்லாப் பெரிய நகரங்களிலும் புறவழிச் சாலைகள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

[2006 ஜனவரி 23

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பதினெட்டாம்படியான். (குறுக்கீடு) மைக், மைக்.

**திரு. க. பதினெட்டாம்படியான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், என் குல தெய்வம், தங்கத் தாரகை, தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களுடைய கடந்த நான்கரை ஆண்டு பொற்கால ஆட்சியில், இராமநாதபுரம் மாவட்டம், குறிப்பாக, முதுகுளத்தூர் தொகுதியில் பல நலத் திட்டங்களைச் செயல்படுத்தி, அதிலும் குறிப்பாக, மலட்டாறு கட்டுமானத் திட்டம், பள்ளி மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு, அதிகப்படியான Hostel-கள், இவற்றையெல்லாம் கட்டித் தந்து, சாலைகளை மராமத்துச் செய்து, ஏரி, குளங்களை நல்லபடியாக மராமத்துச் செய்து, இன்று அனைத்து ஏரிகளும் நிரம்பி நிற்கக்கூடிய அளவிற்குச் செய்தமைக்கு அந்தப் பகுதி மக்கள் நன்றி பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, அந்தத் தொகுதியில் தெய்வீகத் திருமகனார் தேவர் அவர்களுடைய பிறப்பிடம் இருப்பதனால், ஆண்டுதோறும் அங்கு வந்து, குறிப்பாகக் கடந்த 30–10–2005 அன்று அங்கு வந்து அனைத்து மக்களுக்கும் காட்சி தந்து, அந்தக் குரு பூஜையை சிறப்புச் செய்தமைக்கு, அந்தப் பகுதி மக்கள் நன்றி உள்ளவர்களாக இந்த அரசுக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கும் வகையில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

முதுகுளத்தூரிலிருந்து கடலாடி செல்ல வேண்டுமானால் ஒரு குறிப்பிட்ட தூரம், ஏறக்குறைய ஒரு ஃபர்லாங் தூரம் வரைக்கும் எதிரே வரக்கூடிய வண்டிகளை நிறுத்திவிட்டு, அந்த வண்டி வந்ததற்குப் பின்னர்தான் மறு வண்டி செல்ல வேண்டிய செயல்பாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. இதை நீண்ட நாள் கோரிக்கையாகக் கூறியும் அங்கே புறவழிச் சாலை ஏற்படவில்லை. புறவழிச் சாலை ஏற்படுவதற்கான பேச்சுக்கள் எல்லாம் அடிபட்டன. நிலங்கள் எல்லாம் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்றெல்லாம் பேச்சு அடிபட்டது. ஆனால், நான் எம்.எல்.ஏ., ஆன உடனேயே ஏறக்குறைய இரண்டு, மூன்று தடவை இதை எழுத்துமூலமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தபின், சமீப காலத்தில் பொதுப் பணித் துறையிலிருந்து ஒரு தபால் கிடைத்திருக்கிறது. நிதிநிலைக்கேற்ப அது சரி செய்யப்படும் என்று. ஆனால், ஏறக்குறைய நூறு ஆண்டுகளாக அதே நிலைதான் இருந்து



2006 ஜனவரி 23]

வருகின்றது. அந்தப் பகுதியில் பல accidents நடந்து, பல உயிர்ப் பலிகள் எல்லாம் ஆகியிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) இந்த நிதியாண்டில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலமாக இந்த அரசால் செய்து கொடுக்கப்படுமா என்பதை உங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புறவழிச் சாலை அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருக்கின்ற நகரங்களைத் தேர்வு செய்து அரசால் பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் முதுகுளத்தூரும் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராசிபுரம் நகரம் நெரிசல் மிகுந்த பகுதி. அங்கே ஒரு புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று மக்கள் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். TUFIDCO நிறுவனம்கூட 50 இலட்சம் ரூபாய் அந்தப் பாதை அமைப்பதற்காக நிதி ஒதுக்குவதாகக் கூறியிருக்கிறது. அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. நிலத்தினுடைய உரிமையாளர்கள் அந்த நிலத்தைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதிலே நிலத்தை வாங்குவதற்குப் பணம் கொடுப்பதற்கு சட்டத்திலே இடமில்லை என்கிற காரணத்தினால் அது நின்றுகொண்டிருக்கிறது. TUFIDCO அதற்குப் பணம் கொடுப்பதற்கு முன்வந்திருக்கிறது. மாவட்ட நிருவாகம் அந்த நிலத்தைக் கையகப்படுத்தி அந்த நிலத்திற்கு மதிப்புக் கொடுப்பதில் சில தாமதங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் தவிர்த்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ராசிபுரம் நகரிலே புறவழிச் சாலை அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 82, திரு. டி.பி. பொன்னம்பலம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

[2006 ஜனவரி 23

**82—**

## வாய்க்கால் வெட்டுதல்

*** 72826—திரு. டி.பி. பொன்னம்பலம்:**

*மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சமயநல்லூர் தொகுதியில் திருவேடகம், தேனூர், சமயநல்லூர், பரவை ஆகிய ஊர்களிலுள்ள விவசாயிகள் பயனடையும் வகையில் சோழவந்தான் வழியாக வரும் வைகை ஆற்றிலிருந்து வாய்க்கால் வெட்ட அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆம். மாண்புமிகு அம்மாவின் அரசு உடனடி நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வைகை ஆற்றிலிருந்து சோழவந்தான் முதல் தேனூர் வரை வாய்க்கால் தூர் வாரப்படும் என்று அமைச்சர் அவர்கள் பதில் அளித்ததற்கு தேனூர், திருவேடகம், தோடநேரி, நெடுங்குளம், சமயநல்லூர், பரவை, தபேதார்சந்தை, கட்டபுல்நகர் ஆகிய ஊர்களின் விவசாய மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும், அள்ளிக் கொடுக்கும் கொடை வள்ளல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். மேலும், நிலையூர் கால்வாய் செல்லும் இடத்தில் தடுப்பணை இருக்கிறது. அதே இடத்திலேயிருந்து வைகை வடகரைப் பக்கமாக மேற்படி ஊர்களுக்கு, விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் போக வேண்டியுள்ளதால் அதே இடத்தில் தடுப்புச் சுவர் கட்டிக் கொடுத்தால் சுமார் 3,500 ஏக்கர் விளை நிலங்கள் பயன்படும். மேலும், 5 மடைகள் உள்ளன. அதற்கும் shutter-- தடுப்புச் சுவர் இந்த ஆண்டிலாவது கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமயநல்லூர் கால்வாய் 5.2 கிலோ மீட்டர் நீளத்திற்கு 10 இலட்சம் ரூபாய் செலவில் வெட்டி, தூர்வாரி சீரமைக்கப்பட்டுள்ளது. தேனூர் கால்வாய் 6 கிலோ மீட்டர் நீளத்திற்கு



2006 ஜனவரி 23]

10 இலட்சம் ரூபாய் செலவில் வெட்டி, தூர்வாரி சீரமைக்கப்பட்டுள்ளது. திருவேடகம் கால்வாய் 2.87 கிலோ மீட்டர் நீளத்திற்கு 5 இலட்சம் ரூபாய் செலவில் தூர்வாரி சீரமைக்கப்பட்டுள்ளது. சமயநல்லூர் கால்வாயினையும், பரவை கால்வாயினையும் இணைக்கும் தேனூர், சமயநல்லூர் ஊர்கள் வழியாகச் செல்லும் ஊற்றுக் கால்வாய் 4.1 கிலோ மீட்டர் நீளத்திற்கு 7.7 இலட்சம் ரூபாய் செலவில் தூர்வாரி சீரமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்டுள்ள பணிகள் சமீபத்திய வெள்ளப் பெருக்கினை வடிக்கப் பேருதவியாக இருந்தன. தற்போது வரும் ஊற்று நீரினைக் கொண்டு பாசனம் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. மேற்கூறிய கால்வாய்களிலுள்ள shutter–கள் நடப்பு நிதியாண்டின் பராமரிப்பு நிதியிலேயே சீர் செய்து தரப்படும். மேலும், சோழவந்தான் அருகில், வைகை ஆற்றிலிருந்து பிரியும் தேனூர் வாய்க்கால் தலைமதகின் அருகில், ஆற்றின் குறுக்கே சுமார் 260 மீட்டர் நீளத்திற்குத் தலைமதகின் அடிமட்டத்திலே ஒரு படுகைச் சுவற்றினைக் கீழே உள்ள பாசனதாரர்களின் பாசன உரிமை பாதிக்கப்படாதவண்ணம் கட்டி, தேனூர் வாய்க்கால்மூலம் தேனூர் கண்மாய்க்கும், அதே தேனூர் வாய்க்காலின் குறுக்கே திருவேடகம் அருகில் தடுப்பு அமைத்து. திருவேடகம் வாய்க்காலுக்கும், திருவேடகம் வாய்க்காலின் குறுக்கே தச்சம்பத்து அருகில் தடுப்பு அமைத்து சமயநல்லூர் வாய்க்காலுக்கும், அதிலிருந்து பரவை கண்மாய்க்கும் வைகைப் பாசன நீர் செல்லும் வகையில் உத்தேசமாக ரூபாய் 7.6 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. உலக வங்கியின் நிதியுதவியின்மூலம் நீர் வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டம், பகுதி–2–ல் இப்பணிகளைச் சேர்ப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பொன்னம்பலம்.

**திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேற்படி கிராமங்களில் உள்ள விவசாய மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, முல்லைப் பெரியாறு கால்வாய் மடை எண் 6–ல் பூலாம்பட்டு பிரிவில் கடைமடைப் பாசனத்திற்குத் தண்ணீர் செல்வதற்கு மிகச் சிரமமாக உள்ளது. எனவே, கால்வாயின் முகப்பிலிருந்து கடைமடை வரையிலும் மடைகளைச் (shutters) சீர் செய்து, கீழே உள்ள கருவனூர்,

[2006 ஜனவரி 23

தவிட்டாம்பட்டி, பெத்தாம்பட்டி, மந்திகுளம் ஆகிய ஊர்களுக்கு நேரடிப் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீர்படுத்திக் கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ராஜாங்கம்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சோழவந்தான் பகுதியில் தடுப்பணை கட்ட வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கை. அந்தக் கோரிக்கை வைத்த பொது மக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரிலே வந்து சந்தித்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவோம் என்று—புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றித் தரும் என்று, அன்று வாக்குறுதி அளித்திருந்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் தடுப்பணை கட்டி, அந்தப் பகுதியில் இருக்கின்ற கண்மாய்களுக்கு நீர் செல்வதற்கான வழிவகை செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழகத்தினுடைய நிரந்தர முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எங்கள் தொகுதி மக்களின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தில் நிரந்தரமாகத் தண்ணீரைத் தேக்குவதற்கு தியாகராசர் கல்லூரி பின்புறம் உள்ள பகுதியில் இதுபோன்ற ஒரு தடுப்பணை கட்டித் தந்து உதவ அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல யோசனை. அரசின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். நன்மாறன்:** அமைச்சரின் அறிவிப்புக்கு மக்களின் சார்பில் மிகுந்த நன்றி.



2006 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கவிவாணர் பேராசிரியர் கு. அன்பழகன்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒப்பற்ற தலைவி, உன்னதத் தலைவி, உலகம் போற்றும் உத்தமத் தலைவி, உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்த தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், வைகை ஆறும், பெரியாறும் பெருகி, வைகை அணையாகத் தேங்கி என்னுடைய நிலக்கோட்டை தொகுதியிலே சுமார் 20 கிலோ மீட்டர் பயணம் செய்கிறது. அந்த வைகை ஆற்றிலே, கொடைக்கானல் மலையிலே உருவாகி வருகின்ற மஞ்சளாறும், மருதா நதியும் சேர்ந்து, தென் திருவேணி சங்கமம் என்று சொல்லக்கூடிய என்னுடைய தொகுதியிலே சங்கமிக்கின்றன. இதற்கிடையிலே காட்டாற்று வெள்ளமும் கடைமடை திறந்தாற்போன்று பெருக்கெடுத்து என்னுடைய தொகுதியிலே சேர்ந்து, மதுரை பகுதி, திருமங்கலம் பகுதி, மேலூர் பகுதி, திருப்பத்தூர் பகுதி, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு எல்லாம் செல்லக்கூடிய பேரணை என்னுடைய தொகுதியிலேதான் இருக்கிறது. Seventh Channel என்று சொல்லக்கூடிய அந்தப் பெரியாற்றினுடைய கால்வாயிலே சுமார் 12 சிறு மடைகளை என்னுடைய தொகுதியிலே அமைத்திருக்கிறார்கள். நம்முடைய ஒப்புயர்வற்ற தலைவி, உன்னதத் தலைவி காலத்திலே கொடுத்த அந்தத் திட்டம் நிறைவேறி, அந்த வேலைகள் எல்லாம் முடிந்து இன்னும்கூட வெள்ளோட்டம் விடப்படாமல் இருக்கிறது. தண்ணீர் நிறைய இருக்கிறது. நிறைந்த உள்ளத்தோடு நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்—அந்த 12 சேனல்களிலே ஒரு சேனல் பெரியகுளம் தொகுதிக்கும், ஒரு சேனல் ஆண்டிப்பட்டி தொகுதிக்கும், மீதியிருக்கக்கூடிய 10 சேனல்களும் நிலக்கோட்டை தொகுதிக்கும் பாய்கின்ற தருவாயிலே இருக்கின்றன. இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, வெள்ளோட்டமாக விட்டு, அந்தப் பகுதிக்கு அந்த supply channel போடுவதற்காக நிலம் கொடுத்த விவசாயிகள் வாழ்விலே ஒளியேற்ற நம்முடைய தங்கத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்லாட்சியிலே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதைச் செய்து கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2006 ஜனவரி 23

முற்பகல் 10–20

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை உடன் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.கே. பெருமாள்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கி வரும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இருக்கன்குடி நீர்த்தேக்கத் திட்டத்தை 62 கோடி ரூபாயில், விளாத்திகுளம் தொகுதி, புதூர் ஊராட்சி ஒன்றியத்திலே 9,000 ஏக்கர் தரிசு நிலங்கள் பயன்படும் வகையிலே கொண்டு வந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு விளாத்திகுளம் தொகுதி மக்களின் சார்பாக வணக்கத்தையும், நன்றியையும் சொல்லிக்கொள்கின்றேன். மேலும், விளாத்திகுளம் ஒன்றியத்திலே ஆத்தங்கரை, மேல்மாங்கை, கீழ்ஏலாவேளூர், தத்தநதி, பல்லாகுளம் போன்ற பகுதிகளுக்கு மேலும் கால்வாய் வசதியை நீட்டித்துத் தருவாரா என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய கோரிக்கையினுடைய அடிப்படையில் சாத்தியக்கூறுகள் ஆராயப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மக்களுக்காக எதைக் கேட்டாலும் உடனுக்குடனே செய்து கொடுக்கின்ற அரசாகத் திகழ்ந்து வருகின்றது. அந்த அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கால்வாய்கள் வெட்டித் தரப்படும் என்று



2006 ஜனவரி 23]

சொல்லியிருக்கின்றார்கள். அதேபோல, வைகை அணையிலிருந்து பிரிந்து, மேலூர் பகுதிக்கு வருகின்ற வாய்க்காலிலிருந்து பெரியாறு தண்ணீர் வந்து அதிகமான விவசாய நிலங்கள் பாசனம் அடைந்து விளைந்து வருகின்றன. மேலூர் தொகுதி மக்கள் முழுவதும் விவசாயத்தையே நம்பியிருக்கின்றார்கள். அதிலே ஒரு பகுதியில் மட்டும், 6 பஞ்சாயத்துக்களில் மட்டும் அந்தத் தண்ணீர் போகாத காரணத்தினால் விளைச்சல் கொஞ்சம் கம்மியாக இருக்கின்றது. நீண்ட நாட்களாக ஒரு பேச்சு பேசப்படுகின்றது. அதாவது, வருகின்ற பெரியாறு அணையின் வாய்க்காலிலிருந்து, புலிப்பட்டியிலிருந்து ஒரு புதிய கால்வாயை வெட்டி, கேசவம்பட்டி, பட்டூர், சேக்கிப்பட்டி, குன்னாரம்பட்டி, கம்பூர், வளப்பச்சேரி போன்ற பஞ்சாயத்துக்களுக்கு ஒரு வாய்க்கால் வெட்டுவதாக நீண்ட நாட்களாக அந்தப் பகுதி மக்கள் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அதிலே வருகின்ற உபரி நீர், மழைக் காலங்களில் நீர் வருகின்றபோது, extension கால்வாயை வெட்டி அமைத்துக் கொடுத்தால், 100-க்கும் மேற்பட்ட கண்மாய்களை நம்பி அந்தப் பகுதியிலே, அந்த 6 பஞ்சாயத்துக்களிலும் பல ஆயிரக்கணக்காக உள்ள ஏழை, எளிய விவசாய மக்கள் பயன்பட முடியும். நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதை ஆராய்ந்து, நடப்பாண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு நீர்ப் பங்கீட்டிலிருந்து மேலூரினுடைய பகுதிகளுக்கு உபரி நீர்க் கால்வாய் தேவை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்றார்கள். சாத்தியக்கூறுகள் பற்றி அரசின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 83, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**83—**

**துணை நீதிமன்றம்**

*** 28025—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் துணை நீதிமன்றம் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடை : (அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் ரூபாய் 32,82,000 செலவில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்பெற்று, அந்நீதிமன்றம் 8-10-2005 முதல் செயல்பட்டு வருகின்றது.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், செஞ்சி சிறப்பு ஊராட்சியில் ரூபாய் 33 இலட்சத்திலே சார்பு நீதிமன்றம் அமைத்துத் தந்தமைக்கு அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவிப்பதோடு, கடந்த நான்கே முக்கால் ஆண்டுகளில் 24,000 மக்கள் தொகையையும், 19,800 வாக்காளர்களையும் கொண்ட அந்தச் சிறப்பு ஊராட்சியில் மக்களுடைய நீண்ட நாள் பிரச்சினையாக இருந்த குடிநீர்ப் பிரச்சினைக்கு ரூபாய் 55 இலட்சத்தை ஒதுக்கி, கூடுதல் குடிநீர் வழங்கியவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். செஞ்சி நகரைப் பாரம்பரிய நகரமாக அறிவித்து, செஞ்சி சிறப்பு ஊராட்சியை ரூபாய் 50 இலட்சத்திலே அழகுபடுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா. செஞ்சி மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடமும், விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடமும், முகப்புத் தோற்றமும் அமைத்து செஞ்சியைப் பராமரிப்பதற்காக ரூபாய் 52 இலட்சத்தை ஒதுக்கித் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா. புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள், தலா 1 கோடியிலே செஞ்சி இராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 24 வகுப்பறைகளுக்குக் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி செய்து கொடுத்தவர் -- புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா. அதோடு அல்லாமல் பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 18 இலட்சத்திலே தீயணைப்பு நிலையமும், பால் குளிரூட்டும் நிலையமும், கால்நடைகளுக்கு உள்நோய்ப் பிரிவுக் கட்டடமும்,...

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.





**திரு. வெ. ஏழுமலை:** 100 ஆண்டு காலமாக முஸ்லீம்களுக்கு இருந்த ஒரே துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தித் தந்த புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியை அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பித்து, புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நீதித் துறையிலே ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கி, வழக்கறிஞர்களுடைய நலனிலே அக்கறை கொண்டு Bar Council of India-விற்கு வழக்கறிஞர்களுக்கு நல உதவிகளைச் செய்திட 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிய புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு வழக்கறிஞர்கள் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவினுடைய அரசு புதியதாக எந்தெந்த இடங்களில் நீதிமன்றங்கள் அமைக்க, புதிய கட்டடங்கள் கட்ட, மத்திய அரசிற்குக் கருத்துரு அனுப்பியது என்பதையும், அதோடு, விழுப்புரம் மாவட்டத்தில் எத்தனை இடங்களில் கட்டடங்கள் கட்ட வகை செய்யப்பட்டுள்ளது என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர் சேம நல நிதிக்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1 கோடி ரூபாயைத் தாயுள்ளத்தோடு அளித்தது மட்டுமல்லாமல், நீதித் துறைக்குக் கிட்டத்தட்ட நிதி ஒதுக்கீடு என்று சொல்லும்போது, 2001-2002 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையிலே, ரூ. 141 கோடியாக அளித்து, 2006-2007 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையிலே 205 கோடியே 37 இலட்சம் ரூபாய் நீதித் துறைக்கு எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். கடந்த நான்கரை ஆண்டுகளில் மட்டும் ரூ. 100 கோடிக்கும் அதிகமான செலவில் நீதிமன்றங்களுக்குப் புதியதாகக் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிலே சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை ரூ. 65 கோடி, விழுப்புரம் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் ரூ. 9 கோடியே 62 இலட்சம், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் ரூ. 9 கோடியே 82 இலட்சம், வேலூர் – திருப்பத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் ரூ. 4 கோடியே 97 இலட்சம், தேனியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் ரூ. 3 கோடியே 90 இலட்சம், Judicial Academy ரூ. 4 கோடியே 50 இலட்சம்,

தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றக் கட்டடங்களின் பராமரிப்புச் செலவிற்கு ரூ. 7 கோடியே 57 இலட்சம், நீதித் துறைக்கு இரண்டு ஆண்டுகளில் கட்டடம் கட்டுவதற்கு உடனடித் தேவைக்காக, 61 திட்டங்களுக்கு ரூபாய் 206 கோடி ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய மாவட்டத்திலே எத்தனை கட்டடங்கள் வருங்காலத்திலே கட்டப்படவிருக்கின்றன என்கின்ற கருத்தினைக் கேட்டார்கள். திண்டிவனத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் 5 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவிலும், கள்ளக்குறிச்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் 5 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவிலும், உளுந்தூர்ப்பேட்டையிலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் 4 கோடியே 38 இலட்சம் ரூபாயிலும், மொத்தம் அவருடைய மாவட்டத்திலே 14 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட வேண்டும் என்று, 50 சதவிகிதம் அளவிற்கு நிதி உதவி கோரி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மேலும், புதிய நீதிமன்றங்கள் constitute செய்து அமைக்கப்படும்பொழுது, எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நீதிமன்றங்கள் constitute செய்யப்பட வேண்டும் என்கின்ற ஒரு முனைப்போடு மாண்புமிகு அம்மா அவர்கள், எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்குப் புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்கு உத்தரவிட்டு, அந்த அடிப்படையிலே தமிழ்நாடு முழுவதும் பல புதிய நீதிமன்றங்கள், வரலாற்றிலே இல்லாத அளவிற்கு அமைக்கப்பட்டு வருகின்றன.

6 மகளிர் நீதிமன்றங்கள் ரூபாய் 82 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டிருக்கின்றன. சென்னை மாநகராட்சி–சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, சேலம் உட்பட. தற்போது மேலும், கடலூர் மற்றும் பெரம்பலூரில் மகளிர் நீதிமன்றங்கள் அமைக்க அம்மா அவர்கள் ஆணை வெளியிட்டுள்ளார்கள். அதுவும் 14 இலட்சம் ரூபாய் செலவில் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றது. 49 விரைவு நீதிமன்றங்கள் கிட்டத்தட்ட ரூபாய் 14 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் மத்திய அரசினுடைய நிதியுதவியோடு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. உத்தமபாளையத்திலே ஒரு சார்பு நீதிமன்றம் 33 இலட்சம் ரூபாயிலே அமைக்கப்பட்டுள்ளது. விழுப்புரத்திலே, செஞ்சியில் ஒரு சார்பு நீதிமன்றம் ரூபாய் 33 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டிருக்கின்றது. கடலூரில் கூடுதல் சார்பு நீதிமன்றம் ரூபாய் 33 இலட்சத்திலே அமைக்கப்பட்டிருக்கின்றது. சிதம்பரம்





மற்றும் விருத்தாச்சலத்தில் தலா ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 55 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கின்றன. திண்டுக்கல், நத்தத்தில் District Munsiff-*cum*-Judicial Magistrate நீதிமன்றம் ரூபாய் 40 இலட்சத்திலே அமைப்பதற்கு அம்மா அவர்களால் உத்தரவிடப்பட்டு, விரைவிலேயே அங்கு அமைக்கப்பட உள்ளது. திருவள்ளூரிலே மாவட்ட நீதிமன்றம் மற்றும் தலைமைக் குற்றவியல் நீதிமன்றம் ரூபாய் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவிலே அமைக்கப்பட்டிருக்கின்றது. தேனியில் மாவட்ட நீதிமன்றம் மற்றும் தலைமைக் குற்றவியல் நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கு அம்மா அவர்கள் உத்தரவிட்டு, ரூபாய் ஒரு கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ளது.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி நகரில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், தனித்தனியாக வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் இடைவெளி ஏறக்குறைய ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கின்றது. அம்மா அவர்களுடைய அரசு இந்த நீதிமன்றங்களை எல்லாம் ஒருங்கிணைத்து ஒரு கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டது. அந்த இடத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நீதிமன்ற வளாகம் கட்டித்தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலில் குறிப்பிட்டதுபோல, ஏற்கெனவே 61 திட்டங்களுக்கு 206 கோடி ரூபாய் செலவிலே 50 சதவீதம் அளவுக்கு நிதி உதவி கோரி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கு அந்தத் திட்ட அறிக்கையைப் பெற்று, அதுவும் மத்திய அரசாங்கத்திற்கு 50 சதவீதம் நிதி உதவி கோரி அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நீதிமன்றங்கள் தொடங்குவது குறித்து அமைச்சர்

அவர்கள் அறிவிப்புகளைச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். தொடர்ந்து இந்த அவையிலே மன்னார்குடியிலே சார்பு நீதிமன்றம் அமைக்கப்படுவதற்கான முயற்சிகளைப் பற்றிக் கேள்வி எழுப்பி, இந்த நிதி ஆண்டிலேயே அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் இடையிலே ஒரு தடவை வாக்குறுதி அளித்திருக்கிறீர்கள். ஆகவே, இந்த நிதி ஆண்டிலேயே அதை அமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் தொடங்கப்பட வேண்டுமென்றால், தொடுக்கப்படுகின்ற வழக்குகள், தற்போது உள்ள நீதிமன்றம் மற்றும் புதியதாக எந்த இடத்தில் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்கின்ற அந்த இடம், இதற்கிடையே உள்ள தூரம், நிதி வசதி மற்றும் வாதிகளினுடைய பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு உயர் நீதிமன்றப் பரிந்துரை அனுப்பப்படும்பொழுதுதான் அரசு அதனைக் கருத்தில் கொண்டு ஆவன செய்யும். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கை, நிச்சயமாக இந்த ஒரு சூழ்நிலை இருந்தால் உயர் நீதிமன்றத்தினுடைய கருத்துகள் பெற்று நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் 2001–2002 ஆம் ஆண்டே ஏற்கெனவே முன்மொழிவுகள் எல்லாம் அனுப்பப்பட்டு, உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்து, அங்கே ஒரு sub–court அமைக்க வேண்டும் என்று ஏற்கெனவே கருத்துரு தந்திருக்கிறது. இந்த அரசும் அதற்கான உறுதியையும் அவையிலே அளித்திருக்கிறது. கடந்த 42 நாட்களாக வாணியம்பாடியினுடைய வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டில் அந்த sub–court–ஐக் கட்டிக் கொடுப்பதற்கு மாநில அரசினுடைய பணத்தை மட்டும்—பொதுவாக, மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறீர்கள். அது வரும் வரை காத்திராமல் 42 நாட்களாகப் போராடி வருகிற வழக்கறிஞர்களுக்கு ஒரு தீர்வு கொடுக்கக்கூடிய வகையிலே மாநில நிதியையே ஒதுக்கி, உடனடியாக ரூ.33 இலட்சத்தை ஒதுக்கீடு செய்து, அங்கே ஒரு sub–court அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் முழுமையான அளவிற்குக் கட்டப்பட வேண்டும் என்ற ஒரு கருத்தின் அடிப்படையில்தான் 206 கோடி ரூபாய் செலவில் 50 சதவீத உதவி கோரி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம்கூட அவர்களுடைய தொகுதிகளிலே பல கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்ற ஒரு கருத்தைப் பல தடவை இங்கே வலியுறுத்தினார்கள். எனவே, தொடர்ந்து வலியுறுத்தப்படும்பொழுது ஒரு தொலைநோக்குப் பார்வையோடு மாண்புமிகு அம்மா அவர்கள், கிட்டத்தட்ட 10 ஆண்டு காலத்திலே இந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கக் கூடாது, அதுவும் ஓராண்டு காலத்திலேயே எல்லாக் கட்டடங்களும் கட்டப்பட வேண்டும் என்கின்ற அந்த நிலையை அடைய வேண்டுமென்றால், 50 சதவீத அளவிற்கு மாநில அரசு தயாராக இருக்கும்பொழுது, ஏன் 50 சதவீத அளவிற்கு மத்திய அரசிலே இருக்கின்ற நீங்கள் பெற்றுத்தர முயற்சி எடுக்கக் கூடாது? அதுதான் இப்பொழுது எங்களுடைய கேள்வியாக இருக்கின்றது. எனவே, இருக்கின்ற அந்தச் சூழ்நிலையை, அந்தப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு, எந்த அளவிற்கு அதிலே உதவி செய்ய முடியும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் முடிவு செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதெல்லாம் கொடுக்கிற தங்கத் தாரகை தமிழக முதல்வர் அம்மாவின் நல்லாட்சியில், எது கேட்டாலும் அம்மா உடனடியாக வழங்குகிற இந்த நேரத்தில், ஆரணி தொகுதி நீதிமன்றங்களையெல்லாம் ஒருங்கிணைத்து, அங்கே ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் வேண்டும் என்று—வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த குதிரை லாயத்தில் செயல்பட்டு வருகிற அந்த நீதிமன்றம் எந்த நேரத்தில் விழுமோ என்ற அச்சம் இருக்கிறது–வழக்கறிஞர்கள் எல்லாம் நேரில் வந்து, அமைச்சரைச் சந்தித்துக்கூட அதைச் சொல்லியிருக்கிறார்கள்; மனுத் தந்திருக்கிறார்கள். இப்போது நம்முடைய அம்மாவின் நல்லாட்சியிலே அந்த நீதிமன்றக் கட்டடத்தை உடனடியாகக் கட்டித்தர அம்மாவின் ஆட்சி முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசினுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்தபோது, இந்தத் திட்டமும் 206 கோடி ரூபாயிலே சேர்க்கப்பட்டு, அந்த எண்ணும் அவருக்குக் கொடுக்கப்பட்டது, எந்தக் கடித எண்ணிலே அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை. எனவே 7½ கோடி ரூபாய் அளவிற்கு அதை repair செய்து maintain செய்வதற்கு அம்மா அவர்கள் நிதியொதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதிலே தற்போது இடைக்காலமாக, பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வசதியாக, ஏதாவது பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, வசதி செய்துதர முடியுமா என்பது குறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல திருவாடனையில் இருக்கக்கூடிய நீதிமன்றக் கட்டடம் மிகப் பழமையான கட்டடம், சிறிய கட்டடம். அதைப் புதிதாகக் கட்டித்தர வேண்டுமென்று நமது அரசிடம் பல தடவை கோரியிருக்கிறோம். செய்து தருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இன்னும் செய்யவில்லை. அங்கே புதிய கட்டடம் விரைவிலே கட்டித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கோரிக்கைகள் எல்லாச் சட்டமன்றத் தொகுதிகளிலும், மாவட்டங்களிலும் இருக்கின்ற ஒரு சூழ்நிலையைக் கருத்தில் கொண்டுதான், 10 ஆண்டுகளிலே செய்து முடிக்கப்பட வேண்டியதை ஓராண்டு காலத்திலே செய்து முடிக்க வேண்டுமென்று சொல்லி, ஒரு concrete proposal, 206 கோடி ரூபாய்க்கு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. எனவே, 50 சதவீத அளவிற்கு நாங்கள் அதற்குத் தயாராக இருக்கும்போது, உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, நீங்கள் 50 சதவீதம் வாங்கிக் கொடுத்தால், அதை ஓராண்டு காலத்திலே நிச்சயமாகச் செய்யலாம். இருக்கின்ற நிதிப் பற்றாக்குறையிலே ஒரே பணிக்கு எல்லா நிதியையும் நாம் ஒதுக்கிவிட முடியாது. எனவே, இதில் வரலாறு என்று சொல்லும்போது, எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்த 1½ ஆண்டு காலத்தில் கட்டடம் கட்டுவதற்காக, மாநில அரசு



தன்னுடைய சொந்த நிதியிலிருந்து 100 கோடி ரூபாய்க்கு மேலே செலவு செய்திருக்கின்றது என்றால், இது ஒரு வரலாறு. அந்த வரலாற்றை உருவாக்கியவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், உங்களுடைய கடமை என்ன? ஒவ்வொரு தடவையும் இதேபோன்று கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். கேட்பதோடு சரி. மத்திய அரசிலிருந்து ஏதோ நாம் வாதிட்டு, போராடி, அந்த நிதியைப் பெற்றுத்தர வேண்டும் என்ற எண்ணம் இருக்கின்றதா என்றால், இல்லை. நாளைக்கேகூட நீங்கள் டெல்லியிலே பேசி 50 சதவீதம் வாங்கிக் கொடுத்தால், நிச்சயமாக 61 திட்டங்கள் இந்த ஓராண்டு காலத்திலே நிறைவேற்றப்பெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் உருவாக்கப்பட வேண்டுமென்று பல முறை மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்து, மனுத் தந்திருக்கின்றேன். சமீபத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டு, அந்த நீதிமன்றங்கள் எல்லாம் வெள்ளத்தால் சூழப்பட்டு, நீதிபதிகளும், ஏனைய வழக்கறிஞர்களும் உள்ளே செல்ல முடியாத ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல. அங்கே பணிபுரிகின்ற ஊழியர்களும், பெண்களும், நீதிபதிகளும் ஒதுங்குவதற்குக்கூட இடமில்லாமல், சிறுநீர் கழிப்பறை வசதிகூட இல்லாமல் இரண்டு நீதிமன்றங்களும் பாழ்பட்டுக் கிடக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தின் நிதியைப் பெற்றுக் கட்டித் தருவதற்கு முன்பாக, நம்முடைய பொதுப் பணித் துறையின்மூலமாக அந்த நீதிமன்றங்களைச் செப்பனிட்டு, அவை சீராக இயங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொல்லிய அந்த பதில் அவருக்கும் பொருந்தும். இருந்தாலும், அவர்களுடைய reference–க்காக, இந்தக் கோப்பின் எண்ணைக்கூட நான் கொடுக்கின்றேன். அவர் டெல்லியிலே இருக்கின்ற செல்வாக்கைப் பயன்படுத்தி, atleast அவருடைய தொகுதிக்காவது, அதாவது 1833/86–D2 & 725/A/98/ D5 – Construction of buildings for the District Munsiff Court and Quarters for the Subordinate Judge at Panruti, Cuddalore District. ரூ. 2 கோடியே 23 இலட்சத்து 39 ஆயிரம். இந்த proposal அனுப்பப்பட்டிருக்கின்றது. உங்களுடைய

[2006 ஜனவரி 23

செல்வாக்கைப் பயன்படுத்தி, 50 சதவீத அளவிற்கு, 1½ கோடி ரூபாய் அளவிற்குப் பெற்றுத் தந்தால், அங்கே உடனடியாக வேலைகளை ஆரம்பித்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 84, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**84—**

**விரைவு நீதிமன்றங்கள்**

*** 30066—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் எத்தனை விரைவு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன ?

(ஆ) அவற்றின்மூலம் எத்தனை வழக்குகள் முடித்து வைக்கப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடை : (அ) மாநிலத்தில் 49 விரைவு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. (ஆ) இந்நீதிமன்றங்கள் 2005 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை 1,83,374 வழக்குகளை முடித்து வைத்துள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் தொடங்கப்பட்டிருக்கிற 49 விரைவு நீதிமன்றங்களுடைய காலவரையறை முடிய இருக்கக்கூடிய சூழலிலே, அதை மீண்டும் புதுப்பித்து, தொடர்ந்து அதுபோன்ற நீதிமன்றங்கள் தமிழகத்திலே இயங்குவதற்கு அரசு முன்மொழிவினை அனுப்பியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 49 விரைவு நீதிமன்றங்கள் மத்திய அரசினுடைய



2006 ஜனவரி 23]

நிதியுதவியோடு செயல்பட்டு வருகின்றன என்பது உண்மைதான். ஆனால், விரைந்து தீர்ப்பு வழங்கக்கூடிய நிலையில், இந்த நீதிமன்றங்கள் தொடரப்பட வேண்டுமென்ற ஒரு கருத்து வந்தபொழுது, மத்திய அரசில் எந்தவித நடவடிக்கையும் இல்லை. ஆனால், இந்தியாவிலேயே இந்த விரைவு நீதிமன்றங்களில் வழக்காடுபவர்கள் மற்றும் வழக்கினுடைய தீர்ப்பு விரைவிலே சென்று, அதாவது, judgement விரைவிலே சென்றடைய வேண்டுமென்ற அந்தக் கருத்தோடு குரல் கொடுத்த ஒரு முதலமைச்சர், ஒரு மாபெரும் தலைவர் என்று சொன்னால், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த மாநிலமும் குரல் கொடுக்கவில்லை. மத்திய அரசாங்கம் இதை extend செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், அம்மா அவர்கள், நீங்கள் உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, நாங்கள் அவற்றைத் தொடர விரும்புகிறோம் என்று சொல்லி தன்னுடைய மாநில அரசின் நிதியிலிருந்து முதலிலே நிதியை ஒதுக்கியவர் நம்முடைய அம்மா அவர்கள். எனவே, எங்களுடைய கருத்து, இந்த நீதிமன்றங்கள் தொடரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இளவழகன்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தில் மகளிர் நீதிமன்றம் அமைக்க ஆணை வழங்கிய இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் பெரம்பலூர் மாவட்டத்து மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விரைந்து தீர்ப்புகளை வழங்கி, வழக்குகளை முடித்து வெற்றி கண்டு வரக்கூடிய இந்த விரைவு நீதிமன்றங்களுக்கு ஜாமீன் மற்றும் முன் ஜாமீன் வழங்கக்கூடிய அதிகாரம் வழங்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு முடிவு செய்ய முடியாது. நீதிமன்றங்கள்தான் முடிவு செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரிமோகன்.

**திரு. வி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்கு என இருந்த மாவட்ட அமர்வு நீதிமன்றம்

[2006 ஜனவரி 23

கிருஷ்ணகிரியிலிருந்தது. கிருஷ்ணகிரி மாவட்டம் பிரிக்கப்பட்டுவிட்டது. அது கடந்த ஓராண்டு காலமாகிவிட்டது. அதற்கு முன்னாலிருந்தே எங்கள் மாவட்டத்திற்குக் கூடுதல் அமர்வு நீதிமன்றம் ஒன்று அமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருந்து வந்தது. அதற்காக நம்முடைய நிதி அமைச்சர்கூட இந்த அவையிலே, அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படுமென்று கடந்த காலத்தில் உறுதிமொழி அளித்தார். தற்போது அந்த ஒட்டுமொத்த மாவட்டத்திற்குமே மாவட்ட மக்களுக்கு மாவட்ட அமர்வு நீதிமன்றம் இல்லாமல் இருப்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இதுகுறித்து எங்களுடைய மாவட்ட அமைச்சராக இருக்கின்ற உள்ளாட்சித் துறை அமைச்சர்கூட அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் கேள்விப்படுகின்றேன். ஆகவே, அந்த வகையிலே இது மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால், அந்த மாவட்டத்தினுடைய ஒட்டுமொத்த மக்களுடைய நலன் கருதி நம்முடைய முதலமைச்சர் அவர்களும், சட்ட அமைச்சர் அவர்களும் உடனடியாக அந்த மாவட்ட அமர்வு நீதிமன்றத்தை அமைப்பதற்கு உயர் நீதிமன்றம் ஏற்கெனவே பரிந்துரை செய்து இருப்பதை ஏற்று, அதை அமைப்பதற்கு இந்த நிதியாண்டிலேயே நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன். (குறுக்கீடு) திரு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திலே இருக்கின்ற நீதி தேவதையினுடைய சிலையானது நுழைவு வாயிலிலே மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் இருக்கின்ற அந்தத் தராசினை, இயற்கைக்கு மாறாக அதிலே மாற்றி, தவறாக சிலையை அமைத்து இருக்கிறார்கள். சேலம் மாவட்டத்திலே அத்தனை பத்திரிகைகளிலும் அதை எடுத்துக் கூறியும்கூட அந்தச் சிலையில் இருக்கின்ற அந்தத் தராசு இதுவரை மாற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே, அதைக் கவனத்தில் கொண்டு உடனடியாக, இயற்கைக்கு எதிராக இருக்கின்ற அந்தத் தராசை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



2006 ஜனவரி 23]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்ற வளாகத்தில் இருக்கின்ற சிலை குறித்து அரசு எந்த முடிவும் எடுக்க முடியாது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 85, திரு. வேல் முருகன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**85—**

**நியாய விலைக் கடை**

***35150—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, 1—வது வார்டில் ஒரு நியாய விலைக் கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, 1—வது வார்டில் 284 குடும்ப அட்டைகள் உள்ளன. இவை பி.சி.எம்.எஸ். 8 மற்றும் பி.சி.எம்.எஸ். 9 என்ற கடைகளில் இணைக்கப்பட்டுள்ளன. இந்தக் கடைகள் பண்ருட்டி தொகுதி 1—வது வார்டிலிருந்து ½ கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ளதால் இந்த வார்டில் தனிக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி நகரில் சுமார் 85,340 பொது மக்கள் வாழ்கின்றார்கள். 1—வது வார்டில் 1,187 ரேஷன் அட்டைகள் இருக்கின்றன. பக்கத்து வார்டுகளில் சென்று அந்த மக்கள் ரேஷன் பொருட்களை வாங்குவதற்கு மிகச் சிரமப்படுகின்றார்கள். அங்கு பெரும்பான்மையாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற காரணத்தினால், கிராமப்புறங்களில் இருப்பதுபோல நகர்ப்புறங்களிலும் 250 கார்டுகள் உள்ளவர்களுக்குத் தனிக் கடையாகப் பிரித்துத் தருவதற்கும், அல்லது ஆயிரம் கார்டுகளுக்கு மேல் இருக்கின்ற காரணத்தினால் ஒரு முழு

நேரக் கடை வழங்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல் முருகன் அவர்கள் சொல்லுகிற 1—வது வார்டில் 284 குடும்ப அட்டைகள்தான் உள்ளன. அந்த 284 குடும்ப அட்டைகளும் அரை கிலோ மீட்டர் தூரத்திலுள்ள இரண்டு கடைகளுக்குத் தனியாகப் பிரித்து உணவுப் பொருட்கள் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியக்கூறுடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகப்பன் தெரு, ஜாகீர் உசேன் தெரு, சிவன்கொடை தெரு, மாரியம்மன் கோயில் தெரு, பிள்ளையார் கோயில் தெரு ஆகிய ஐந்து தெருக்களில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். அந்த மக்கள் தங்கள் குழந்தைகளைக் கல்விக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லும்போது அல்லது தங்களுடைய வேலைகளுக்குச் செல்லும்போது அவர்கள் அந்த ரேஷன் கார்டுகள்மூலம் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட கடையில்தான் வாங்க வேண்டும் என்று அங்கு அறிவுறுத்தப்படுகிறது. ஆதலால், அந்தப் பகுதி மக்களுக்குத் தமிழக அரசினுடைய ரேஷன் கடைகள்மூலம் வழங்கப்படுகின்ற அனைத்து உதவிகளையும் easy—யாகப் பெறுகின்ற வகையில் அந்த மக்களுக்கு ஏற்படுத்தித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதத்தில் வெள்ளிக்கிழமை தவிர, அனைத்து நாட்களும் கடைகள் திறந்திருக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதன்படி, வெள்ளிக்கிழமை தவிர, அனைத்து நாட்களிலும் அந்தந்தப் பகுதிகளில் இணைக்கப்பட்டிருக்கிற குடும்ப அட்டைகளைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ்.



**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேரக் கடைகளைத் திறப்பதற்கான உரிய தகுதிகள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். ஏன் என்று சொன்னால், என்னுடைய தொகுதியிலே கொண்டாபுரம், சக்கரமல்லூர் என்கின்ற இரண்டு கிராமங்களிலே பகுதிநேரக் கடைகள் திறக்கப்பட வேண்டும் என்று கடந்த நான்கே முக்கால் ஆண்டு காலம் நான் முயற்சித்தும், இதுவரையிலே அவை திறக்கப்படவில்லை. தற்போதுதான் அரசு அதிகாரிகள், அரசுச் செயலாளருக்குக் கடிதம் எழுதி இருப்பதாகவும், அதிலே அரசு விதிகளைத் தளர்த்தி கடையைத் திறக்க ஆவன செய்யப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். எனவே, அரசினுடைய விதிமுறைகளை மிக விளக்கமாக இங்கே அவையிலே அறிவிக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நியாய விலைக் கடைகள் நடத்துவதற்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகள் பின்பற்றப்படுகின்றன:

இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் இடையே உள்ள தூரம் குறைந்தது இரண்டு கிலோ மீட்டர் இருக்க வேண்டும். பகுதிநேர அங்காடி அமைவதற்கு வாடகை இல்லாமல் இலவசமாகக் கட்டட வசதி செய்து தரப்பட வேண்டும். தாய் அங்காடியின் விற்பனையாளரே பகுதிநேர நியாய விலைக் கடையையும், வாரத்தில் குறைந்தது 3 நாட்களாவது கவனித்துக்கொள்ள வேண்டும். பகுதிநேரக் கடைக்கு அரசு மானியம் எதுவும் வழங்காது. பகுதிநேரக் கடையில் குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகளாவது இணைக்கப்பட்டிருக்க வேண்டும். பகுதிநேர நியாய விலைக் கடையை நடத்தும் கூட்டுறவுச் சங்கம் எந்தவிதமான செலவினத்தையும் பகுதிநேர நியாய விலைக் கடை நடத்துவதற்காகக் கோரக் கூடாது. மேற்கண்ட வரையறைகளுக்குட்பட்டு, கோரப்படுகிற பகுதிநேர நியாய விலைக் கடைகள் வழங்கப்படுகின்றன. இதிலிருந்து விலக்குப் பெறவேண்டும் என்றால், அரசுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுப்பி, விலக்குப் பெற்றும் பகுதிநேரக் கடைகளைத் திறந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிநேரக் கடைகள் -- இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கும் அதிகமாக இருக்கிற கடைகளை அந்தந்த மாவட்ட ஆட்சித்

[2006 ஜனவரி 23

தலைவர்களே அவர்களின் நேரடிப் பார்வையிலே செய்துகொள்ளலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கூறியிருக்கிறார்கள். அது தற்போது நடைமுறையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குரிய சிறப்பு ஆணையை வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்ற தகவலைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 86, திரு. எம். சக்திவேல் முருகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**86—**

### நவீனக் கழிப்பறைகள்

*** 5580—திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், முண்டந்துறை ரேஞ்சு பகுதி அருள்மிகு சொரிமுத்தையனார் கோயிலுக்கு நவீனக் கழிப்பறைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதியில் புதிய கட்டடங்கள் கட்ட உச்ச நீதிமன்றத்தின் முன்னனுமதியுடன் இந்திய அரசின் அனுமதி பெற வேண்டும் என்பதால், திருநெல்வேலி மாவட்டம், முண்டந்துறை ரேஞ்சு பகுதி அருள்மிகு சொரிமுத்தையனார் கோயிலுக்கு நவீனக் கழிப்பறைகள் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் எழுத்துக்களின் முதல் எழுத்தான 'அ' கரத்தையும், கடைசி எழுத்தான 'ன' கரத்தையும் தன் பெயரில் கொண்ட தமிழ்க் கடவுள் அகத்தியன் (ர்) வாழ்ந்த பொதிகை மலையில், காரையார் அணைக்குக்கீழ், தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ள மிகவும்



2006 ஜனவரி 23]

சக்தி வாய்ந்த, கேட்ட வரம் கொடுக்கும் கோயில் அருள்மிகு சொரிமுத்தையனார் கோயில். அந்தக் காலத்தில் திருவாங்கூர் மன்னரால் எங்கள் சிங்கம்பட்டி ராஜாவிற்கு இனாமாகக் கொடுத்த 74 ஏக்கரில், 19 ஏக்கர் 59 சென்ட்டில் உள்ளது இந்தக் கோயில். இந்தக் கோயிலுக்கு எங்கள் பகுதி மட்டுமல்லாமல், மூன்று மாவட்டங்களிலிருந்தும் வெள்ளி, ஞாயிறுதோறும், அமாவாசைதோறும் ஆயிரக்கணக்கான பக்தர்களும், ஆடி அமாவாசை விழாவிற்கு இலட்சக்கணக்கான பக்தர்களும் வந்து, ஒரு வார காலம் தங்கியும் தரிசனம் செய்து வருகிறார்கள். இப்படி இந்தக் கோயிலின் மகிமையை எடுத்துச் சொல்லி, எங்கள் அம்மாவிடம் கோரிக்கையை வைத்தபோது எங்கள் கோரிக்கையை ஏற்று, 50 ஆண்டு காலமாக செக் போஸ்டில் வசூலித்து வந்த நுழைவுக் கட்டணத்தை— எங்கள் அம்மா அவர்கள் இந்த 50 ஆண்டு காலக் கோரிக்கையை ஏற்று, செக் போஸ்டில் நுழைவுக் கட்டணத்தை ரத்துச் செய்தார்கள். அதற்கு எங்களுடைய அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியைத் தொகுதி மக்கள் சார்பில் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியில் உள்ள அம்பாசமுத்திரம் அகத்தியர் கோயிலுக்கும், கடையம் வில்வநாதசுவாமி கோயிலுக்கும், தற்போது பொங்கல் அன்று அன்னதானத் திட்டத்தை அறிவித்தார்கள். அதற்கும் எனது அன்னைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி இந்த அளவிற்கு அதிக அளவில் பக்தர்கள் இந்தக் கோயிலுக்கு வரும் சூழ்நிலையில், நவீனக் கழிப்பிட வசதி எதுவும் இல்லாததால், இதன் அருகிலுள்ள தாமிரபரணி ஆறு மாசுபடுகின்ற ஒரு வாய்ப்புக்கூட ஏற்படுகின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்புகூட, இதே கோயிலில் நம்முடைய அறநிலையத் துறைமூலம் சுமார் மூன்று இலட்சம் செலவில் அங்கு ஒரு தியான மண்டபம்கூட கட்டப்பட்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, எங்களுடைய அம்மா அவர்கள்— எங்களுடைய பகுதி மக்களுடைய இந்த நீண்ட காலக் கோரிக்கையான நவீனக் கழிப்பிடம் கட்டும் வசதியை அறநிலையத் துறைமூலமோ, அல்லது அதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னால், வனத் துறையில் இருக்கின்ற நிதிமூலமோ நிதியை ஒதுக்கி, அருள்மிகு சொரிமுத்தையனார் கோயிலினுடைய இந்த நீண்ட கால அத்தியாவசியப் பிரச்சினையான நவீனக் கழிப்பிடத்தைக் கட்டுவதற்கு எங்களுடைய அம்மாவினுடைய அரசும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் ஆவன செய்வார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

[2006 ஜனவரி 23

முற்பகல் 10–50

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், முண்டந்துறை அருள்மிகு சொரிமுத்தையனார் கோயில், சட்டப் பிரிவு 46(2)—ன்கீழ் விளம்பரம் செய்யப்பட்டு பட்டியலில் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் பசலி 1414, உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ.14,74,572/— ஆகும். இத்திருக்கோயிலுக்குச் செயல் அலுவலர் மற்றும் பரம்பரை அறங்காவலர் உள்ளனர். இத்திருக்கோயிலுக்கு நஞ்சை 126.72 ஏக்கர் நிலமும், புஞ்சை 116.59 ஏக்கர் நிலமும் உள்ளது. இத்திருக்கோயிலுக்குப் பசலி 1414, உபரி நிதி முதலியவை ரூ.2,17,000/— ஆகும். பசலி 1414, உண்டியல் வருமானம் ரூ.7,71,810/— ஆகும். இத்திருக்கோயிலில் ஆடி அமாவாசை, பங்குனி உத்திரம் மற்றும் தை அமாவாசை போன்ற திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இத்திருக்கோயில் மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரில், பொதிகை மலையில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு ரூ.19,50,000/— செலவில் 100 கழிப்பறைகள் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசினால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. முதற்கட்டமாக, 50 கழிப்பறைகள் கட்டுவதற்கு ரூ.9,50,000/—க்கு விரிவான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பரம்பரை அறங்காவலர் தீர்மானத்துடன், நிதியாதாரமாக சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.2,37,500/—ம், சுற்றுலாத் துறையிலிருந்து ரூ.7,12,500/—ம், ஆக மொத்தம் ரூ.9,50,000/—க்கான மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டது. கழிப்பறை கட்ட வனத் துறையின் அனுமதி கேட்டு 18–5–2004 அன்று வனப் பாதுகாவலருக்கு விண்ணப்பிக்கப்பட்டது.

வனம் என அறிவிக்கப்பட்ட பகுதியில் புதிய கட்டடங்கள் கட்டப்பட வேண்டுமெனில், உச்ச நீதிமன்றத்தின் முன்னனுமதியுடன், இந்திய அரசின் அனுமதியைப் பெற்ற பின்னரே கட்ட முடியும் எனத் தெரிவித்துள்ளார்கள். மேலும், வனத் துறையே மேற்குறித்த பணிகளை மேற்கொள்ளும்வண்ணம், அதற்கான நிதியை வனத் துறையிடம் அறநிலையத் துறை அளித்து இப்பணியைச் செய்யலாமா என வனத் துறையிடம் கேட்டதற்கு, மத்திய அரசின் அனுமதி, மற்றும் உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றால்தான் கட்ட இயலும் என்று சொல்லி, 10–8–2005 நாளிட்ட கடிதத்தில் வனத் துறை தெரிவித்திருக்கிறது. வனத் துறை, ஆலயத்திற்கு மட்டுமல்ல,—மத்திய அரசாங்கம் எந்தத் துறையிலும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி கேட்டாலும், தற்சமயம் மறுத்துக் கொண்டிருக்கிறது.



2006 ஜனவரி 23]

இருந்தாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, உச்ச நீதிமன்றத்தின்மூலமாக, இந்தத் துறையின்மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அங்கே கழிப்பிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 87, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**87—**

## தங்கத் தேர்

*** 71218—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் முதற்படை வீடான திருப்பரங்குன்றம் அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குத் தங்கத் தேர் செய்திட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையைத் தங்கள் அனுமதியுடன் பேரவைக்கு அளிக்கிறேன். மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குன்றில் அமைந்த குடவறைத் திருக்கோயிலாகும். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, இத்திருக்கோயிலுக்கு ரூ.77,17,000/— செலவில் புதிய தங்கத் தேர் ஒன்று செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள்மூலம் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வருபவரும், இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கக்கூடிய அரசியல் தலைவர்களுக்கெல்லாம் அரசியல் வழிகாட்டியாக விளங்கக்கூடிய எங்களுடைய அன்புத் தெய்வம், எங்களுடைய குடும்பத்தின் குல விளக்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகின்றேன். அம்மா அவர்கள் பல்லாயிரம் ஆண்டுகள், பல்லாயிரம் கோடி ஆண்டுகள் இந்த

[2006 ஜனவரி 23

நாட்டு மக்களுக்காக வாழவேண்டும் என்று வாழ்த்த வயதில்லை தாயே! வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரத்தை வெட்டுகின்றவன்கூட களைத்துப் போனால், ஒய்வெடுப்பதற்கு இன்னொரு மரத்தின் நிழலடியில்தான் அமருவான். அம்மரம் தம்மையும் இவன் வெட்டுவானே என்று நினைக்காமல் நிழல் தரும். அதுபோல, பொது வாழ்வில் நம்மைத் தாக்குவோர் இடத்திலிருந்து, நிழல் தரும் மரம்போல, 1989 மார்ச் 25—ஐயும் மறந்து, எதிர் அணியில் இருக்கக்கூடிய தொகுதிகளுக்கெல்லாம் நல்ல திட்டங்களை வாரி, வாரி வழங்கும் வள்ளலுக்கெல்லாம் வள்ளலாக விளங்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய அன்புத் தெய்வத்தினுடைய பாதங்களைத் தொட்டு மீண்டும், மீண்டும் வணங்குகிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறுபடை வீடுகளில் முதற்படை வீடாகிய திருப்பரங்குன்றம் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆண்டவர் திருக்கோயிலுக்குத் தங்கத் தேர் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதனை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சீனிவேல், தங்கத் தேர் செய்யும் என்று சொல்லிவிட்டார்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆண்டுக்கு முன்பாகப் போடப்பட்ட கேள்வி. தங்கத் தேர் செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் தீர்மானிக்கப்பட்டுள்ளதற்கு என்னுடைய பணிவான நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், கடந்த நாலே முக்கால் ஆண்டு காலத்தில், மாண்புமிகு தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள், கேளுங்கள் கொடுக்கப்படும் என்றில்லாமல், கேட்காமலேயே கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய வள்ளல் தெய்வம், ரூபாய் 120 கோடிக்கு என்னுடைய திருப்பரங்குன்றம் தொகுதிக்கு வாரி, வாரி வழங்கியிருக்கக்கூடிய வள்ளலை வாழ்த்த வயதில்லை, வணங்குகிறேன் தாயே! வணங்குகிறேன் தாயே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சிவபெருமாள்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எங்கெல்லாம் தேர்கள் பழுதடைந்து உள்ளனவோ,



2006 ஜனவரி 23]

அவற்றையெல்லாம் புதுப்பித்துத்தர ஆணை பிறப்பித்து, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் வழிபடும் கிராமக் கோயில்களுக்கெல்லாம் 25,000 ரூபாயை வாரி வழங்கி, கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள் என்கிற வித்தியாசம் இல்லாமல், அனைத்துப் பகுதிகளுக்கும் அன்னதானத் திட்டத்தை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி வழிபட்டு, அம்மா, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலே ஒட்டப்பிடாரத்திலே ஸ்ரீ காசி விசுவநாதர் திருக்கோயிலிலே உள்ள தேர் சென்ற ஐந்து ஆண்டு காலத்திலே நடந்த சாதிக் கலவரம், மதக் கலவரம், இனக் கலவரத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே, 2001—லே அந்தத் தேர் ஓடுவதற்கு ஆணை பிறப்பித்தார்கள். அது இன்னும் சிறப்பாக ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால், அந்தத் தேரினுடைய நான்கு சக்கரங்களும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. ஆகையினால் அந்த நான்கு சக்கரங்களையும் இரும்புச் சக்கரங்களாக அமைத்துத் தருவதற்கு, திருச்செந்தூர் கோயிலிலுள்ள நிதியிலிருந்தாவது அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உடனடியாகத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்துத் தேர்களையும் புதுப்பிக்க வேண்டும் என்பதற்காக, நிதி வசதி படைத்த ஆலயங்களிலிருந்து 18 கோடி ரூபாயை ஒதுக்கி, இப்போது திருப்பணிகள் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மொத்தத் திருத்தேர்கள் 830; நல்ல முறையில் உள்ள திருத்தேர்கள் 438; மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பழுது நீக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்ட தேர்கள் 151; தற்போது அந்தந்தத் திருக்கோயில் நிதி ஆதாரங்களைக் கொண்டு மராமத்துச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளவை 16 திருத்தேர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலே இருக்கின்ற எந்த ஆலயத்திலே இருக்கின்ற தேர்கள் பழுதுபட்டிருந்தாலும் அவற்றை உடனடியாகப் பழுதுபார்க்க வேண்டும் என்பதற்காக 18 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்து, அறநிலையத் துறையிலே வசதி படைத்த ஆலயங்களிலே இருக்கின்ற நிதியைக் கொண்டு, எந்த ஆலயத்திலே இருக்கின்ற தேரும் ஓடாமல் இருக்கக் கூடாது என்று ஆணையிட்டிருக்கிறார்கள். தாங்கள் கேட்டு இருக்கின்ற அந்தத் தேரையும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய

[2006 ஜனவரி 23

அனுமதியோடு உடனடியாகப் புதுப்பித்துத் தேர் ஓட்டப்படும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** (குறுக்கீடு) நன்றி சொல்கிறார்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. ராமராஜ்.

**திரு. ச. ராமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் உத்தமபாளையத்தில் உள்ள திருகாளவஸ்தீஸ்வரர் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. அந்தக் கோயிலில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று, அந்தப் பழுதடைந்த கோயிலைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையின்படி ஐந்து இலட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்து, அந்தத் திருக்கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெற்ற இந்த நல்ல தருணத்தில், அந்தக் கோயிலில் உள்ள தேர் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் இருப்பதால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அமைச்சர்மூலமாக அந்தத் தேரைப் பழுதுபார்த்து, அதைப் புதுப்பித்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கெல்லாம் தேர்கள் பழுதுபட்டு இருக்கின்றனவோ, அனைத்துத் தேர்களையும் புதுப்பிக்க வேண்டும் என்று சொல்லித்தான் 18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். எனவே, அனைத்து ஆலயங்களிலும், எங்கெல்லாம் தேர்கள் பழுதுபட்டு இருக்கின்றன என்று சொல்கிறீர்களோ, அனைத்துத் தேர்களும் புதுப்பிக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. இளவழகன்.



2006 ஜனவரி 23]

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள தசாவதார மண்டபங்களில்...

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கான அமைச்சரின் விடை முடிகிற வரை வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள தசாவதார மண்டபங்களில் அரியலூர் நகரில் உள்ள அருள்மிகு கோதண்ட ராமசாமி பெருமாள் திருக்கோயிலினுடைய தசாவதார மண்டபம் மிகப் பெரிய தசாவதார மண்டபமாகும். இத்திருக்கோயிலினுடைய மரத் தேர் சிதிலமடைந்து கடந்த எழுபது ஆண்டு காலமாகத் தேரோட்டம் நின்று போய் இருக்கிறது. ஆலயங்கள்தோறும் அன்னதானத் திட்டம் படைத்து வரும் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் தேரோட்டம் மிக விமரிசையாக அரியலூரில் நடக்கும் என்று மக்கள் நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள். இப்படிப் பழுதுபட்ட தேர்கள் அனைத்தும் புதுப்பித்துத் தரப்படும் என்று இதய தெய்வம் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளதற்கு என்னுடைய அரியலூர் நகர மக்கள் சார்பாக அம்மா அவர்களுடைய காலடியில் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்தத் திருத்தேர்களைச் செப்பனிடும் பட்டியலில், அரியலூர் கோதண்டராமசாமி திருக்கோயிலினுடைய மரத் தேர் புதியதாகச் செய்து கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள்-- அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கோயில்களிலும் என்று அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்கெல்லாம் பழுதுபட்டிருக்கின்றனவோ அவையெல்லாம் கண்டறியப்பட்டு, அறநிலையத் துறையினுடைய அதிகாரிகள்மூலம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2006 ஜனவரி 23

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் என்னுடைய அறைக்கு வந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அதெல்லாம், அதன் உள்ளே போகக் கூடாது. என்னுடைய அறைக்கு வந்து பேசுங்கள். எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) என்னுடைய அறைக்கு வந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சேகர்பாபு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

### (ஆ) தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி மேதகு ஆளுநரைச் சந்தித்ததாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமை, அதாவது 21-1-2006 அன்று சட்டமன்ற பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க.வின் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள், இச்சட்டமன்றத்தில் 21-1-2006 அன்று அறிமுகம் செய்யப்பட்ட கேபிள் டி.வி. சட்டமுன்வடிவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டாம் என்று கூறி ஆளுநரைச் சந்தித்ததாகப் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. இது குறித்து அரசின் நிலைப்பாடு என்ன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் கேள்விக்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) அவர் ஒரு கேள்வி கேட்கிறார். அதற்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கிறார். (குறுக்கீடுகள்) உறுப்பினர் விளக்கமே கேட்கக் கூடாது என்பது அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு விளக்கத்தைக் கேட்கிறார். விளக்கத்திற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்.

**திரு. துரைமுருகன்:** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், தாங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். சேகர்பாபு ஒரு விளக்கம் கேட்கிறார். விளக்கத்திற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். பதில் முடிந்ததற்குப் பிறகு எழுந்து கேளுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் விஞ்ஞான வளர்ச்சியின் ஓர் அங்கமாக, இன்று தமிழகத்தில் ஒவ்வொரு இல்லத்திலும், கேபிள் டி.வி. என்னும் கம்பிவட இணைப்புத் தொலைக்காட்சி இன்றியமையாத ஓர் இடத்தைப் பெற்றுள்ளது. ஒன்று அல்லது இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகள் இருந்த நிலை மாறி, இன்றைக்கு நூற்றுக்கணக்கான தொலைக்காட்சி அலைவரிசைகளின் வாயிலாக உலகத்தின் எந்த ஒரு மூலையில் நடக்கின்ற செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் உடனுக்குடன் நமது இல்லத்திற்கே கொண்டு வந்து நம் கண் முன்னே காட்டுவதில் இத்தொலைக்காட்சி இணைப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. இதுவன்றி, பொது அறிவை வளர்க்கின்ற அறிவுபூர்வமான நிகழ்ச்சிகள், திரைப்படம் முதலான பொழுதுபோக்கு அம்சங்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற பல்வேறு அம்சங்களை வழங்கும் இத்தொலைக்காட்சி இணைப்புகள், மக்களின் அன்றாட வாழ்க்கையின் ஓர் அங்கமாகவே மாறிவிட்டது என்று சொன்னால், அது மிகையாகாது.

கம்பிவட இணைப்பமைவு நிறுவனங்கள் வணிக ரீதியாகச் செயல்படும் நிறுவனங்கள் என்றாலும், அவை மக்கள் கண்ணோட்டத்துடன் செயல்பட வேண்டியது அவசியம் ஆகும். ஆனால், இத்தகைய கம்பிவட இணைப்பமைவு நிறுவனத்தார்களின் செயல்பாடுகள் குறித்து தமிழக அரசுக்கு எண்ணற்ற புகார்கள் வரப் பெற்றுள்ளன. பொது மக்களுக்கு வழங்கப்படும் வசதிகளில் குறைபாடு, அதிக அளவுக் கட்டணங்கள் வசூல் செய்தல், தொகுப்பு வாயில்கள், அதாவது, Package of Channels அடிப்படையில் அதிகக் கட்டணங்கள் வசூலித்தல், மக்கள் பார்ப்பதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகவே ஒரு சில தொலைக்காட்சி அலைவரிசைகளைத் தெளிவில்லாமல் ஒளிபரப்புச் செய்தல், கம்பிவட இணைப்பமைவு நிறுவனத்தார் மற்றும் விநியோகிப்பாளர்கள் அச்சுறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய புகார்கள் அரசால் பெறப்பட்ட காரணத்தால், பொது மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, கம்பிவட இணைப்பமைவு நிறுவனத்தார் இந்த இணைப்புப் பரிமாற்றத்தில் ஏற்படுத்தியுள்ள மன நிறைவற்ற, தற்போதைய சூழ்நிலைக்குத் தீர்வு காணும் வகையில், தமிழக அரசு

*21–1–2006* அன்று இதற்கான ஒரு சட்டமுன்வடிவைத் தமிழக சட்டப் பேரவையில் தாக்கல் செய்தது. இந்தச் சட்டமுன்வடிவைத் தமிழக அரசு சட்டப் பேரவையில் தாக்கல் செய்தபோது, வழக்கம்போலவே, தி.மு.க.வினர் சட்டப் பேரவையில் இல்லை. எனினும், இந்தச் சட்டமுன்வடிவு தாக்கல் செய்யப்பட்ட அரை மணி நேரத்திலேயே, தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி, மத்திய அமைச்சர் திரு. தயாநிதி மாறனுடன் ராஜ் பவனுக்குச் சென்று, மேதகு ஆளுநர் அவர்களை இது தொடர்பாக நேரில் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பின்போது, இந்தத் தமிழ்நாடு கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு தொடர்பான சட்டத்திற்கு ஆட்சேபணை தெரிவித்து, அதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளிக்கக் கூடாது என்று தெரிவித்ததாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

*முற்பகல் 11–05*

மக்களின் நலன் கருதி, கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு நிறுவனங்களின் மேலாண்மையைக் கையகப்படுத்துதல், அதன் சொத்துரிமை மாற்றம், மற்றும் அதனை மேற்கொள்வதற்கான சட்டமுன்வடிவு சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட அரை மணி நேரத்திலேயே தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி, எதற்காக மேதகு ஆளுநர் அவர்களை இது தொடர்பாகச் சந்திக்கிறார்? இந்தக் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு, திரு. கருணாநிதி குடும்பத்தினரின் ஏகபோக அனுபவத்தில் உள்ளதை அனைவரும் அறிவர். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் காரணமாக, பொது மக்களுக்கு ஏற்படும் அளவிட இயலாத துன்பமும் அனைவரும் அறிந்ததே. தற்போது சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவு சட்டமாக்கப்பட்டால், தனது குடும்பத்தினரிடம் உள்ள இந்த ஏகபோக உரிமை பறிபோய்விடுமே என்று திரு. கருணாநிதி பதறுகிறார். அதனால்தான் அங்கமெல்லாம் பதைபதைக்க, ஐம்புலனும் துடிதுடிக்க, அலறி அடித்துக்கொண்டு, ராஜ் பவன் நோக்கி ஓடியுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் பிரச்சினைகளில் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி இதுபோன்று பதறி அடித்துக்கொண்டு செயல்பட்டதுண்டா? இல்லையே! (மேசையைத் தட்டும் ஒலி) சுனாமி என்னும் ஆழிப் பேரலை தமிழகக் கடற்கரை மக்களைச் சின்னாபின்னம் செய்தபோது, இதுபோன்ற பதற்றம் அவருக்கு ஏற்பட்டதா? (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்–குழப்பம்) சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை... (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். விளக்கம் சொன்னதற்குப் பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) விளக்கம் சொன்னதற்குப் பிறகு கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** திரு. சேகர்பாபு கேட்டதற்கு நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். முதலமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு விளக்கம் ஏதாவது இருந்தால், அதற்குப் பிறகு பேசுங்கள். (குறுக்கீடுகள்) முதலமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு விளக்கம் ஏதாவது இருந்தால் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். முதலமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு விளக்கம் ஏதாவது கேட்பதாக இருந்தால் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்) முதலமைச்சர் நின்று விளக்கம் சொல்கிறபோது எழுந்து நின்று, கூச்சல் போட்டு அவை நடவடிக்கைகளைச் சீர்குலைக்கக் கூடாது. (கூச்சல்–குழப்பம்) மறுபடியும் பேசினால், உங்களை வெளியேற்ற வேண்டிய நிலைமை வரும். (கூச்சல்–குழப்பம்) மறுபடியும் பேசினால் உங்களை வெளியேற்ற வேண்டிய நிலைமை வரும். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை திரு. கருணாநிதி நேரிலே சென்று பார்த்தாரா? இல்லையே! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) சென்ற அக்டோபர் மாதம் முதல் தமிழகத்தை... (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி எழுந்து நின்று அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கிற காரணத்தால், திரு. பரிதி இளம்வழுதியை அவையிலிருந்து அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (கூச்சல்–குழப்பம்)

(உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி, அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

திரு. ஜெ. அன்பழகன் எழுந்து நின்று அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கிற காரணத்தால், திரு. ஜெ. அன்பழகனை அவையிலிருந்து அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (கூச்சல்–குழப்பம்) திரு. ஜெ. அன்பழகனை அவையிலிருந்து

அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். *(கூச்சல்–குழப்பம்)*

*(உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)*

அவை நடவடிக்கைக்குக் குந்தகம் .விளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அவையிலிருந்து அகற்றுவேன். *(குறுக்கீடு)* பொன்முடி, உட்காருங்கள்.· *(குறுக்கீடு)* பொன்முடி, உட்காருங்கள்.

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற அக்டோபர் மாதம் முதல் தமிழகத்தை கனமழையும், பெருவெள்ளமும் கலங்கடித்ததே, அப்போது திரு. கருணாநிதி கலங்கினாரா? இல்லையே! .... .

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே,...

**திரு. இ. புகழேந்தி:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மத்திய அரசு அவ்வப்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கின்றபோது, எழுந்து நின்று, அவையிலே குழப்பம் விளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை அவையிலிருந்து அகற்ற வேண்டிய நிலைமை வரும் என்று எச்சரிக்கிறேன். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கின்றபோது, குறுக்கே எழுந்து பேசி, அவருடைய பேச்சுக்குக் குந்தகம் விளைவித்து, அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும், அவையிலிருந்து அகற்ற வேண்டிய நிலைமை வரும் என்று எச்சரிக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மத்திய அரசு அவ்வப்போது பெட்ரோல் மற்றும் டீசல் விலையை ஏற்றியபோது, ஒரு முறையேனும் பதறியடித்து, இதற்குக் காரணமானவர்களைச் சென்று திரு. கருணாநிதி பார்த்தாரா? இல்லையே! *(மேசையைத் தட்டும் ஒலி)* அரிசி விலை உயர்வு மற்றும் அரிசி ஒதுக்கீடு குறைப்பு என்ற இரட்டைத் தாக்குதல் மக்கள்மீது தொடுக்கப்பட்டபோது திரு. கருணாநிதிக்கு ஏற்படாத



பதற்றம் இப்போது ஏற்பட என்ன காரணம்? *(மேசையைத் தட்டும் ஒலி)*

சுனாமி, வெள்ளப் பெருக்கு, பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்வு, அரிசி விலை உயர்வு மற்றும் அரிசி ஒதுக்கீடு குறைப்பு, இவை எல்லாம் தமிழக மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள். திரு. கருணாநிதிக்கோ, அவரது குடும்பத்தினருக்கோ ஏற்பட்ட பாதிப்புகள் அல்ல. *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவேதான், இந்தப் பாதிப்புகளின்போது எல்லாம் திரு. கருணாநிதி எவ்விதப் பதற்றமோ, படபடப்போ காட்டவில்லை. ஆனால், சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவுச் சட்டமுன்வடிவால் பாதிக்கப்படப் போவது தனது குடும்பம் என்றவுடன் *(மேசையைத் தட்டும் ஒலி)* இவ்வளவு பதற்றம் அடைகிறார். பதைபதைப்புக் கொள்கிறார். மக்களுக்கு நன்மை பயக்கும் இந்தச் சட்டத்தால், தனது குடும்பத்தினரின் ஏகபோகமும், ஏகாதிபத்தியமும் பறிபோய்விடுமே என்பதால்தான் இப்படித் துடிதுடிக்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)*

எந்த ஒரு சட்டமுன்வடிவும் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டவுடன் சட்டம் ஆகிவிடாது. சட்டமுன்வடிவு சட்டப் பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். பிரிவுவாரியாக சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு, சட்டப் பேரவை அந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்ற வேண்டும். அதன் பின்னர், மேதகு ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே இது சட்டமாகும். தற்போது சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தச் சட்டமுன்வடிவை ஆட்சேபித்து, மேதகு ஆளுநர் அவர்களிடம் ஓடோடிச் சென்று முறையிட்டு இருக்கும் திரு. கருணாநிதி யார்? அவர் இந்தச் சட்டப் பேரவையின் உறுப்பினர். *(மேசையைத் தட்டும் ஒலி)* சட்டமுன்வடிவின்மீது விவாதிக்க சட்டப் பேரவையின் உறுப்பினர்களுக்கு முழு அதிகாரமும், உரிமையும் உள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட சட்டமுன்வடிவின்மீது சட்டப் பேரவையில் மேற்கொள்ளப்படும் விவாதத்தின்போது தனது கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பும், வசதியும் வாய்க்கப்பெற்ற திரு. கருணாநிதி, சட்டப் பேரவையில் இதனை நேர் வழியில் விவாதிப்பதை விடுத்து, கள்ளத்தனமாக, மேதகு ஆளுநரிடம் முறையிடச் சென்றது *(மேசையைத் தட்டும் ஒலி)* அரசமைப்புக்கும், ஜனநாயகத்துக்கும் விரோதமானது ஆகும். இதனை நேர் வழியில் சட்டமன்றத்தில் விவாதிப்பதை விடுத்து, கள்ளத்தனமாக

திரு. கருணாநிதி மேதகு ஆளுநரிடம் முறையிடச் சென்றது, அரசமைப்புக்கும், ஜனநாயகத்துக்கும் விரோதமான செயல் ஆகும். *(குறுக்கீடுகள்)* இது அரசமைப்புக்கு எதிரான செயல் ஆகும். *(குறுக்கீடுகள்)* இது அரசமைப்புக்கு எதிரான செயல் ஆகும். சட்டமுன்வடிவு சட்டப் பேரவைமுன் இருக்கின்ற நிலையில்—சட்டமுன்வடிவு சட்டப் பேரவைமுன் இருக்கும் நிலையில், இதுகுறித்து மேதகு ஆளுநரைச் சந்தித்து, அவரை influence செய்ய எத்தனித்துள்ளது சற்றும் முறையற்ற, மக்கள் விரோதச் செயலாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கம்பிவட இணைப்பமைவுமூலம் நிகழ்ச்சிகளைக் காணுகின்ற பொது மக்களின் நலன் காப்பதே அரசின் தலையாய இலட்சியம். இந்தச் செயல் எல்லைக்குள் தமிழ்நாடு அரசு தனது பொறுப்பை எவ்வாறு நழுவவிட இயலும்? எனவேதான், பன்முகச் சேவை நிறுவனத்தார் மற்றும் ஒளியிழைச் செய்திப் பரிமாற்ற முறை உள்ளடங்கல்களாக, கம்பிவட இணைப்பமைவின் மேலாண்மையை மேற்கொள்வதற்காக இந்தச் சட்டமுன்வடிவு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சட்டமுன்வடிவு, சின்னஞ்சிறு அளவில் தங்களது அன்றாட வாழ்க்கைக்காகக் கம்பிவட இணைப்பு வழங்கும் கடைக்கோடி சிறு நிறுவனத்தாரை எவ்வகையிலும் பாதிக்காது. தமிழகமெங்கும் ஆயிரக்கணக்கில் உள்ள இத்தகைய சிறு நிறுவனத்தாரும், அவர்கள்மூலம் இணைப்புகளைப் பெற்றுள்ள இலட்சக்கணக்கான பொது மக்களும் இந்தச் சட்டமுன்வடிவை மிகுந்த மன மகிழ்ச்சியோடும், மன நிம்மதியோடும் வரவேற்றுள்ளனர். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த மன மகிழ்வையும், நிம்மதியையும் உறுதிப்படுத்த வேண்டியது எனது அரசின் கடமை. *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தக் கடமையை எள்ளளவும் தயக்கமோ, சுணக்கமோ இன்றி எனது அரசு செய்து முடிக்கும் என்பதை இந்த அவையிலே தெரிவித்து அமைகிறேன்.

*முற்பகல் 11–15*

## 3. உரிமை மீறல் பிரச்சினை

**சட்டமுன்வடிவு பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பே ஆளுநரிடம், அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டாமென திரு. மு. கருணாநிதி சொல்லியிருப்பதாக வந்துள்ள செய்தி**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் ஓர் அவை உரிமை மீறல் பிரச்சினையை இது தொடர்பாகக் கொடுத்திருக்கிறார். *(குறுக்கீடுகள்)* திரு. சந்தானம் அவர்கள், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* சந்தானம், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* முடிந்தவுடனே கூப்பிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* அவர் பேசி முடித்தவுடனே கூப்பிடுகிறேன். *(குறுக்கீடுகள்)*



**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்தவுடனே கூப்பிடுகிறேன். *(குறுக்கீடுகள்)*

**திரு. லா. சந்தானம்:** இந்தச் சட்டமன்றத்தைப் பொறுத்த அளவிலே,... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தொடர்பாக ஓர் அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வருகிறார்.

**திரு. லா. சந்தானம்:** இந்த அவைக்கு என்று ஒரு மரபு இருக்கிறது. அந்த மரபுகளை மீறி ... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தொடர்பாக அவர் அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வருகிறார். அது முடிந்தவுடனே நான் கூப்பிடுகிறேன். *(குறுக்கீடு)* அது முடிந்தவுடனே கூப்பிடுகிறேன். திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்திற்கு என்று சில மரபுகள் இருக்கின்றன. அந்த மரபுகளை மீறுகின்றபோது, சட்டமன்றத்தினுடைய மரபுகளைக் காப்பாற்றுவதற்காக உரிமை மீறல் என்கின்ற பிரச்சினை வருவதும் இயல்புதான். இன்றைக்கு நடந்திருக்கிற இந்த நிகழ்ச்சியிலே இங்கு ஒரு சட்டமுன்வடிவு ஆய்வுக்கு வருகின்ற நேரத்திலே—அது ஆய்வுக்கு இன்னும் எடுத்துக்கொள்ளப்படாத ஒரு நிலையிலே சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறவர்கள், இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இந்த மன்றம் அவர்களுடைய கருத்துகளைச் சொல்வதற்குத்தான் இருக்கிறது. எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் அவர்களுக்குரிய கருத்துகளை இங்கு சொல்லலாம். மறுப்புக்களைத் தெரிவிக்கலாம். அந்தச் சட்டமுன்வடிவிலே இருக்கின்ற குறைபாடுகளைச் சுட்டிக்காட்டலாம். அதை நிவர்த்தி செய்வதற்கும் வழி இருக்கின்றபோது, அதையெல்லாம் விட்டுவிட்டு, ஒரு எதிர்க்கட்சியினுடைய தலைவர், முன்னாள் முதலமைச்சராக

இருந்தவர், அந்த மரபுகளையெல்லாம் மீறி மேதகு ஆளுநர் அவர்களைச் சந்தித்து, இந்தச் சட்டமுன்வடிவுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டாம் என்று சொன்னதாகப் பத்திரிகையிலே செய்தி வருகிறது. அப்படிப் பார்க்கும்போது, இது ஒட்டுமொத்தச் சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமையைப் பாதிப்பதோடு, சட்டமன்றத்தினுடைய மரபையும், சட்டமன்றத்தினுடைய உரிமையையும் பாதிக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. இவையெல்லாம் நிலவும்போது, இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்துவதுபோல ஒரு நிலை. இன்றைக்கு ஜனநாயகத்திலே மக்கள் நம்மையெல்லாம் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்த மன்றம் தமிழகத்தினுடைய மிகப் பெரிய மன்றம். இந்தத் தமிழக மக்களுக்குரிய சட்டங்களை இயற்றுகின்ற மன்றம். இந்த மன்றத்தினுடைய கருத்துகளை, இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்கள் சொல்வதற்கு முன்னாலேயே, அவர்களுடைய கருத்துகளைப் பிரதிபலிப்பதற்கு முன்னாலேயே இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்று சொன்னால், நிச்சயமாக ஒட்டுமொத்தச் சட்டமன்றத்தினுடைய உரிமையை மீறிய செயலாக அதனை நான் கருதுகிறேன். எனவே, இதை உரிமை மீறல் பிரச்சினையாகத் தாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நானும் இச்செய்தியைப் பத்திரிகைகளில் பார்த்தேன். இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாக அவை உரிமை மீறல் இருப்பதாக நான் கருதுவதால், இப்பிரச்சினை குறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக, பேரவை விதி 226-ன்கீழ் அவை உரிமைக் குழுவிற்கு இதை அனுப்பி வைக்கிறேன். (கூச்சல்--குழப்பம்) அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன். (கூச்சல்—குழப்பம்) இதிலே வேறு ஒன்றும் கிடையாது. (கூச்சல்—குழப்பம்) இந்தத் தீர்ப்பிற்கு மேலே விவாதம் கிடையாது. (கூச்சல்—குழப்பம்)

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (கூச்சல்—குழப்பம்) திரு. ஞானசேகரன். (கூச்சல்--குழப்பம்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இந்த சர்வாதிகார நடவடிக்கையை நாங்கள் எதிர்க்கிறோம். (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது குறித்து என்னுடைய தீர்ப்பை வழங்கியதற்குப் பிறகு, இது குறித்துப் பேசுவதற்கு அனுமதி இல்லை. (கூச்சல்—குழப்பம்) என்னுடைய தீர்ப்பை இது குறித்து நான் வழங்கிவிட்டேன். இது குறித்துப் பேசுவதற்கு அனுமதி இல்லை.



(கூச்சல்—குழப்பம்) முதலமைச்சர் பேசியது தொடர்பாகத்தான் திரு. சந்தானம் அவர்கள் அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்தார். அந்த அவை உரிமை மீறல் பிரச்சினைக்கு நான் இங்கே தீர்ப்பு அளித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) இதிலே வேறு ஒன்றும் வாய்ப்புக் கிடையாது. இதிலே வாய்ப்பு ஒன்றும் கிடையாது. (கூச்சல்—குழப்பம்)

அடுத்த நிகழ்ச்சி, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த... (கூச்சல்—குழப்பம்)

தயவுசெய்து நிகழ்ச்சிகளை நடத்த விடுங்கள். (குறுக்கீடுகள்) இது குறித்து நான் தீர்ப்பை வழங்கிவிட்டேன். இனிமேல் இதிலே பேசுவதற்கு எதுவும் கிடையாது. (கூச்சல்—குழப்பம்)

**திரு. துரைமுருகன்:** தீர்ப்புகள் திருத்தப்படலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்ப்புகளைத் திருத்துகின்ற வழக்கம் கிடையாது. (குறுக்கீடுகள்) தீர்ப்புகளைத் திருத்துகின்ற வழக்கம் கிடையாது. (குறுக்கீடுகள்) முடியாது, முடியாது. (கூச்சல்—குழப்பம்) முறையான தீர்ப்பாக நான் கருதுகிறேன். இந்தத் தீர்ப்பை முறையான தீர்ப்பாக நான் கருதுகிறேன். இதிலே மாற்றத்திற்கு எதுவும் இடம் இல்லை. ஆகவே, இதிலே குறுக்கிட வேண்டாம். (கூச்சல்—குழப்பம்) இதிலே எதற்காக இவ்வளவு கொதிப்பு? (கூச்சல்) இதிலே எதற்காக இவ்வளவு கொதிப்பு? (கூச்சல்—குழப்பம்) இதுவரைக்கும் இல்லாத அளவிற்கு என்ன கொதிப்பு இதிலே? (கூச்சல்—குழப்பம்) உங்கள் குடும்பத்திற்கு அடி விழுகிறது என்றவுடனே என்ன கொதிப்பு? உங்களுடைய குடும்பப் பிரச்சினை என்கிற காரணத்தினால் கொதிப்பு. நாட்டுப் பிரச்சினைகள் உங்களுக்கு முக்கியம் இல்லை. சுனாமி பிரச்சினை உங்களுக்கு முக்கியம் இல்லை. குடும்பப் பிரச்சினை என்பதனாலே, இவ்வளவு கொதிப்பு உங்களுக்கு. (கூச்சல்—குழப்பம்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கிற திரு. துரைமுருகன், திரு. பொன்முடி, திரு. பரணிகுமார் ஆகிய தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் அவையைவிட்டு அகற்ற வேண்டுமென்று அவை காவலர்களுக்குக் கட்டளையிடுகிறேன். (கூச்சல்—குழப்பம்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கிற திரு. துரைமுருகன் உள்ளிட்ட அனைத்து தி.மு.க. உறுப்பினர்களையும் அவையைவிட்டு அகற்ற வேண்டுமென்று நான் அவைக் காவலர்களுக்குக் கட்டளையிடுகிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

[பேரவைத் தலைவர்] [2006 ஜனவரி 23

முற்பகல் 11–20

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) ஞானசேகரன். (குறுக்கீடுகள்) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. அதை முதலிலே கேட்டுவிடுகிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order ஒன்றும் கிடையாது.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**திரு. சி. ஞானசேகரன்:** அவையினுடைய உறுப்பினர் ஒருவர், ஏற்கெனவே இந்த அவையிலே இருப்பதால் notice கொடுத்து இருக்க வேண்டுமே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தத் தீர்ப்பையொட்டி விவாதம் கிடையாது. (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) திரு. கே.என். இலட்சுமணன். (குறுக்கீடுகள்) திரு. கே.என். இலட்சுமணன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் உள்நோக்கம் உடையது. ஆகவே...

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து நான்காவது முதல் இருநூற்று எண்பத்து ஒன்பதாவது வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)



## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள், அறிமுகம் செய்தல். 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

கூச்சலிடும் உறுப்பினர்களை உடனடியாக அவையைவிட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) கூச்சலிடும் தி.மு.க. உறுப்பினர்களை அவையைவிட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

## (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லை, முடிந்தது. பிரச்சினை முடிந்தது.





## 6. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம், திரு. துரைமுருகன். அவையைவிட்டு அகற்றப்பட்டு விட்டார். திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கூச்சலிடும் உறுப்பினர்களை அவைக் காவலர்கள் உடனடியாக அகற்றுமாறு அவைக் காவலர்களுக்குக் கட்டளையிடுகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order. (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

(இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) கட்சி மற்றும் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ், பேசுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

***திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணத்தைப் பார்த்துப் பதவி தரும் அரசியல் தலைவர்களுக்கு இடையில் தன் தியாகத்தால் உயர்ந்து மற்றவருக்கு வாழ்வு கொடுக்கும் எங்கள் வாழ்வின் ஒளிவிளக்கே! அட்சயப் பாத்திரம் ஏந்தி பசி தீர்த்த மணிமேகலைபோல், ஆலயங்களில் அன்னமிட்டு பசி தீர்த்த எங்கள் பேராலயமே! பொன்னால் தன்னை அலங்கரிக்க மறுத்து, மக்கள் அன்பால் தன்னை அலங்கரித்துக்கொண்ட எங்கள் அதிசயத் தேவதையே! காடுகளை அழித்த காட்டுமிராண்டிக் கூட்டத்தின் கேடுகளை அழித்திட்ட எங்கள் தைரிய இலட்சுமியே! வீரத்தை வெளிப்படுத்துவதில் ராணி மங்கம்மாளாய், உயிர்களிடத்தில் கருணை காட்டுவதில் புத்தபிரானாய், அருள் உள்ளத்தில் அன்னை தெரசாவாய், அள்ளிக் கொடுப்பதில் பாரி வள்ளலாய்...

முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வளர்மதி ஜெபராஜ், கொஞ்சம் இருங்கள். சட்டமன்றப் பேரவை வளாகத்திற்குள்ளே எங்கேயிருந்து இதுபோலக் கூச்சலை எழுப்பினாலும், அந்த உறுப்பினர்கள் அனைவரையும் அந்த இடத்திலேயிருந்து அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு நான் உத்தரவிடுகிறேன்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னால் தன்னை அலங்கரிக்க மறுத்து, மக்கள் அன்பால் தன்னை அலங்கரித்துக் கொண்ட எங்கள் அதிசயத் தேவதையே! காடுகளை அழித்த காட்டுமிராண்டிக் கூட்டத்தின் கேடுகளை அழித்திட்ட எங்கள் தைரிய இலட்சுமியே! வீரத்தை வெளிப்படுத்துவதில் இராணி மங்கம்மாளாய், உயிர்களிடத்தில் கருணை காட்டுவதில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வளர்மதி ஜெபராஜ், கொஞ்சம் இருங்கள். மற்ற காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் எதற்கு வெளிநடப்புச் செய்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. தி.மு.க. உறுப்பினர்கள்தான் ஏதோ அவர்களுடைய குடும்பச் சொத்து பறிபோகிறது என்று வெளியே போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு என்ன அதிலே கவலை? (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு என்ன அதிலே பிரச்சினை? (மேசையைத் தட்டும் ஒலி) தயவுசெய்து நீங்கள் வாருங்கள். வந்து உட்காருங்கள். திருமதி வளர்மதி ஜெபராஜ், பேசுங்கள்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சொத்துக்களைப் பொதுவுடைமை ஆக்க வேண்டும், அரசுடைமை ஆக்க வேண்டும் என்று சொல்கின்ற கம்யூனிஸ்ட்டுகள் ஏன் வெளிநடப்புச் செய்தார்கள் என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அருள் உள்ளத்தில் அன்னை தெரசாவாய், அள்ளிக் கொடுப்பதில் பாரி வள்ளலாய், அன்பு செலுத்துவதில் இயேசுபிரானாய், சமதர்மக் கொள்கையில் நபிகள் நாயகமாய் விளங்கும் எங்கள் அன்னையே! இதய தெய்வமே! புரட்சித் தலைவி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் பாதம் பணிந்து வணங்கி இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது என் கருத்துகளை இந்த மாமன்றத்தில் பதிய வைக்க விரும்புகிறேன்.



*2001 ஆம் ஆண்டு தமிழ்நாட்டு மக்கள் நம்முடைய இதய தெய்வம்...*

(பேரவையிலிருந்து வெளிநடப்புச் செய்த உறுப்பினர்கள் லாபியில் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் காவலர்கள், லாபியிலிருந்தும் என்னை வாழ்த்தி கோஷம் போடக்கூடிய உறுப்பினர்களை லாபியிலிருந்து அகற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாட்டு மக்கள் எந்த நம்பிக்கையில் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே ஆட்சியை ஒப்படைத்தார்களோ, அந்த நம்பிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில் அவர்கள் உள்ளமெல்லாம் பாராட்டி மகிழுகின்ற வகையில் ஒரு செம்மையான ஆட்சியை, சிறப்பான ஆட்சியை, கருணை மிக்க ஆட்சியை, உறுதி மிக்க ஆட்சியை, பொற்கால ஆட்சியைத் தமிழகத்தில் நடத்திக் கொண்டு வருகின்ற பெருமை மிக்க தலைவிதான் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1996 ஆம் ஆண்டு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினரிடத்திலே ஆட்சியை ஒப்படைத்தபொழுது அரசிடமிருந்த ரொக்கப் பணம் 649 கோடி ரூபாய்–மொத்த ரொக்கப் பணம். ஆனால், 2001–ல் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபொழுது இந்தத் தமிழகத்தினுடைய நிதி நிலைமை என்ன? கடந்த தி.மு.க. ஆட்சியிலே எங்கள் அன்னை அவர்கள் வைத்துவிட்டுச் சென்ற 649 கோடி ரூபாயையும் காலி செய்துவிட்டு, ரிசர்வ் வங்கியிடமிருந்து 242 கோடி ரூபாயைக் கடனாகப் பெற்று, அதையும் காலி செய்துவிட்டு, பணி செய்த ஒப்பந்தக்காரர்கள், பொருட்களை வழங்கியோருக்கு 4,000 கோடி ரூபாய் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையையும் வைத்துவிட்டு, இந்த நாட்டின் நிதி நிலைமையையே சின்னாபின்னமாக்கிய தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதிக்கு எங்கள் அன்னையின் ஆட்சியைக் குறை சொல்வதற்கு என்ன தகுதி இருக்கிறது என்பதைத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அரசு ஊழியர்களுக்குக்கூட சம்பளம் தர முடியாத ஒரு கேவலமான சூழ்நிலையில், தமிழ்நாட்டின் கஜானாவைக் காலியாக்கிவிட்டுப் போன

தி.மு.க. உறுப்பினர்கள் நிதி நிலைமையைப் பற்றிப் பேசலாமா? அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில், நிதி நிலைமையையோ தி.மு.க.–வைச் சேர்ந்தவர்கள் மிக மோசமான நிலைக்கு ஆளாக்கி விட்டுச் சென்று விட்டார்கள். அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்தில், 3 வருட காலத்தில் வறட்சி நிலவியது. 2004–ல் சுனாமி வந்தது. 2005–ல் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. துவண்டாரா எங்கள் அன்னை? உடல் நலம் சரியில்லை என்று ஆஸ்பத்திரியில் ஓடி, ஒளிந்து கொண்டாரா எங்கள் அன்னை? இல்லையே!

*முற்பகல் 11–30*

வெள்ளம் வந்ததால், வீதிக்கு வந்தனர் மக்கள் என்ற செய்தி கேட்டு, உள்ளம் பதறி, ஓடோடி வந்து, இயற்கைச் சீற்றத்தால் கவலைப்பட்ட மக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் என எல்லாமும் தந்து, இரு கைகளால் அணைத்து ஆறுதல் சொன்ன எங்கள் அன்னையே! மயிலுக்குப் போர்வை தந்தான் பேகன் என நாங்கள் வரலாற்றிலே படித்திருக்கின்றோம் அம்மா! ஆனால், கடையேழு வள்ளல்களின் மொத்தக் கருணை வடிவம் நீங்கள்தான் என்பதை இன்றைக்குத் தமிழகம் பார்த்துக்கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஊரைக் கொள்ளையடித்து, உறவுக்குள் பங்கிட்டு, பெயர் மட்டும் வேண்டுமென்று, photo–வுக்கு pose கொடுத்து, பேதலித்து அலைகின்ற கொள்ளைக்காரக் கூட்டம் எங்கள் அன்னையைக் குறை சொல்லி அலைகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டவுடனேயே, தமிழகத்திற்குத் தேவைப்படும் நிவாரணத் தொகையினை, சீரமைப்புப் பணியைக் கணக்கிட்டு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்ட நிதி 13,685 கோடி ரூபாய் நிதியுதவி. அம்மா அவர்கள் கேட்டது 2,58,000 டன் அரிசி. அம்மா அவர்கள் கேட்டது 43,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய். இதனை விளக்கி எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரிவான கோரிக்கை மனுவை அளித்ததற்குப் பிறகும்கூட, பிரதமரை நேரில் சந்தித்து விளக்கியதற்குப் பிறகும்கூட, மத்திய சர்க்கார் கொடுத்தது எவ்வளவு? வெறும் ஆயிரம் கோடி ரூபாய் மற்றும் 21 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணெய். எங்கள் அன்னை பிரதமரை நேரில் சந்தித்து விரிவாக விளக்கியபோது, பொறுமையாகக் கேட்டறிந்து, கொடுக்கும் மனதோடு இருந்த பிரதமரைக் கெடுத்த சூத்திரதாரி யார்? இதைத்தான் இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்கள் கேட்கின்றார்கள். வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்பட்ட உடனேயே



நிவாரண மையங்களில் அம்மா அவர்களுடைய ஆணையின்படி அவர்கள் பாதிக்கப்பட்டதற்கு ஏற்றாற்போல் 2,000 ரூபாய் ரொக்கப் பணம், ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம், 10 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், வேட்டி–சேலை என வரிசையாக நின்று மக்கள் அனைவரும் அம்மா அவர்களின் ஆணைப்படி வெள்ள நிவாரண மையங்களில் அள்ளி, அள்ளிக் கொண்டு செல்வதை டி.வி.யிலே close up–லே பார்த்துப் பொறுக்க முடியாத தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி மறுநாள் பேட்டி கொடுத்தாரே! இப்படியா கோயிலிலே சுண்டல் கொடுக்கிற மாதிரி எல்லோருக்கும் அள்ளி, அள்ளிக் கொடுப்பது என்று வயிற்றெரிச்சலில் வார்த்தையைக் கொட்டினாரே! அப்படியென்றால், கொடுக்க நினைத்த பிரதமரை, எங்கள் அன்னை பிரதமரை நேரில் சந்தித்து எங்களுக்கு இவ்வளவு நிதி தாருங்கள் என்று கேட்டபோது, கொடுக்கும் மனதோடு இருந்த பிரதமரைக் கெடுத்த சூத்திரதாரி தி.மு.க. தலைவர் கருணாநிதி அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல, அவருடைய பிள்ளை, தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர் மு.க. ஸ்டாலின்கூட பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுக்கின்றபோது, மத்திய சர்க்கார் நிதி போதுமானது என்று சொல்லி இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்தார் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். தமிழகத்தின்மீது நீங்கள் காட்டும் வெறுப்புணர்ச்சி—தி.மு.க.வே, தமிழகத்தின்மீது நீங்கள் காட்டும் வெறுப்புணர்ச்சி, வருகின்ற தேர்தலில் மக்கள் உங்கள்மீது காட்டும் வெறுப்புணர்ச்சியாக மாறும் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி,
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி;"

இவையெல்லாம் வேண்டுமென்று சரஸ்வதி தேவியிடம் வேண்டுகோள் விடுத்த பாரதி, இன்று மட்டும் உயிரோடு இருந்திருந்தால் என்ன சொல்லியிருப்பான் தெரியுமா? 1,274 புதிய ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்களே, 2,790 ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தியுள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்களே, 394 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தியுள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்களே, 406 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தியுள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நாட்டு மக்கள்

நலமுற்று வாழ, நானிலத்தவர் மேனிலை எய்த, நான் காண நினைத்த சரஸ்வதி, கருணை முகம் கொண்ட புரட்சித் தலைவி என்று பாரதி பாடியிருப்பான். (மேசையைத் தட்டும் ஒலி)

தேசப் பிதா மகாத்மா காந்தி சொன்னார், நாட்டிலேயே மிகப் பெரிய தொழிற்சாலைகள் பள்ளிகளும், கல்லூரிகளும்தான் என்று. நாட்டிலேயே மிகப் பெரிய தொழிற்சாலைகள் பள்ளிகளும், கல்லூரிகளும்தான். இதை நான் சொல்லவில்லை, இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த தேசப் பிதா மகாத்மா காந்தி சொன்னார். இங்குதான் எதிர்கால உலகமே உருவாக்கப்படுகிறது என்று மகாத்மா காந்தி சொன்னார். எதிர்கால உலகம் சிறப்பாக விளங்க வேண்டுமென்றால் ஒவ்வொருவரும் கல்வியறிவு பெற வேண்டுமென்பதற்காக எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11–35*

'பாடப் புத்தகம் வாங்கப் பரிதவிக்க வேண்டாம் நீ, இலவசமாகத் தருகிறேன், இன்முகத்தோடு செல் பள்ளிக்கு' எனச் சொல்லி, பிளஸ் 2 வரை இலவசப் பாடப் புத்தகம். 'நடைபாதையில் நீ நடந்து சென்றால் நாளெல்லாம் பொழுது வீணாகும், மிதிவண்டி தருகிறேன், மிச்சப்படுத்து காலத்தை, அதிகப்படுத்து படிப்பின் நேரத்தை' என்று சொல்லி, மாணவிகளுக்கும், மாணவர்களுக்கும் இலவச சைக்கிள்— இங்கே நம்முடைய பாரதிய ஜனதா கட்சியினுடைய உறுப்பினர் அன்பிற்குரிய சகோதரர் ஜெக. வீரபாண்டியன் அவர்கள் பேசுகின்றபோதுகூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். அம்மா அவர்கள் முதன்முதலாக மாணவிகளுக்கு மட்டும்தான் சைக்கிள் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள், அப்பொழுது மாணவர்களிடத்திலே ஒரு ஏக்கம் தமிழ்நாடு முழுவதும் இருந்ததாக அன்பிற்குரிய சகோதரர் ஜெக. வீரபாண்டியன் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். அது உண்மையான கருத்துதான். நான் சட்டமன்ற உறுப்பினருடைய அலுவலகத்தில் உட்கார்ந்து மக்களுடைய குறைகளைக் கேட்டுக்கொண்டிருந்தபோது, இரண்டு பள்ளி மாணவர்கள் என்னைச் சந்தித்து எங்களுக்கு ஹாஸ்டலிலே தங்கிப் படிப்பதற்கு இடம் வேண்டும் என்று சொன்னார்கள். நான் அவர்களுடைய முகவரியைப் பார்த்துக் கேட்டேன். தம்பி, உங்களுடைய ஊர் பக்கத்திலே இருக்கிறது. மதுரையிலேயிருந்து 5 கிலோ மீட்டர் தூரம்தான். மிக அதிகத் தொலைவிலிருந்து வருகின்ற ஏழை மாணவ, மாணவிகளுக்காக அம்மா அவர்கள் ஹாஸ்டல் கட்டி வைத்திருக்கின்றபோது, நீங்கள் பக்கத்திலிருந்துதானே வருகிறீர்கள்? அம்மா அவர்கள்தான் இலவச பஸ் பாஸ் கொடுத்திருக்கிறார்களே, அதைப் பயன்படுத்தி நீங்கள் பள்ளிக்குத் தினந்தோறும் வந்து படித்துவிட்டு வீட்டிற்குச் செல்லக் கூடாதா என்று நான் கேட்டேன். அதற்கு அந்த மாணவர்கள் சொன்னார்கள், நீங்கள் சொல்வது உண்மைதான். எங்களுக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலவச பஸ் பாஸ் கொடுத்திருக்கிறார்கள், உண்மைதான். ஆனால் தினந்தோறும் எங்கள் வீட்டிலிருந்து நாங்கள் புறப்படுகின்றபோது, எங்கள் தாயிடத்திலும், தந்தையிடத்திலும் திட்டு வாங்கிக்கொண்டே இருக்கிறோம் என்று சொன்னார்க்ள். நான் கேட்டேன், கஷ்டப்பட்டு உங்களுடைய அம்மா, அப்பா பள்ளிக்கு அனுப்புகிறார்கள். நீங்கள் நன்றாகப் படித்தால் உங்களைத் திட்டமாட்டார்களே, நன்றாகப் படியுங்கள், இளம் வயதில் நன்றாகப் படிக்க வேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள்—இல்லை, நாங்கள் படிக்கவில்லையே என்று எங்களைத் திட்டவில்லை—ஏனடா நீ ஆணாகப் பிறந்தாய்? பெண்ணாகப் பிறந்திருந்தால் இலவச சைக்கிள் கிடைத்திருக்குமே என்று (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைத் திட்டுகிறார்கள் என்று அந்த மாணவர்கள் சொன்னார்கள். பெண்ணாகப் பிறப்பதே பெரும் பாவம் என்று ஒரு காலத்தில் இருந்த நிலைமையை மாற்றி, பெண்ணாகப் பிறப்பது பெரும் தவம் என்பதை இந்தத் தமிழகத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) உருவாக்கிய தலைவி எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



முல்லைக்குத் தேர் தந்தான் பாரி என்று வரலாறு சொல்கிறது— முல்லைக்குத் தேர் தந்தான் பாரி என்று வரலாறு சொல்கிறது. பள்ளிப் பிள்ளைக்கு சைக்கிள் தந்தார் எங்கள் புரட்சித் தலைவி என்று புதிய வரலாறு சொல்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) படிக்கும் காலத்தில்— படிக்கும் காலத்தில் உன் பெற்றோரை இழந்துவிட்டால் நீ கவலைப்படாதே!

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். எந்தச் செல்வத்தை நீ இழந்தாலும், என்றும் அழியாச் செல்வமாம் கல்விச் செல்வத்தை நீ இழந்துவிடக் கூடாது என்பதற்காக அந்தக் குழந்தைகளின் வாட்டத்தைப் போக்குவதற்காக, அவர்கள் பெற்றோரை இழந்துவிட்டால் 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி.

[திருமதி வளர்மதி ஜெபராஜ்] [2006 ஜனவரி 23

உலகத்தோடு போட்டி போடுகின்றபோது ஆங்கில அறிவு நமக்குத் தேவை, ஆங்கில அறிவு முக்கியம் தேவை. உலகம் முன்னேறிக்கொண்டு வருகிறது. தொழில்நுட்ப நாடாக நம்முடைய நாடு மாறிக்கொண்டு வருகிறது; எனவே, ஆங்கில அறிவு தேவை. ஆனால், அதே நேரத்தில், 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடி எங்கள் தமிழ்க் குடி' என்று சொல்கிறோமே,. அந்தத் தமிழின் பெருமையைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லி, பிளஸ் 2 வரை அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தி, அந்தப் பாடப் புத்தகங்களையும் இலவசமாகக் கொடுக்க உத்தரவு போட்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களே! 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்று பாடிய தேசியக் கவி பாரதியின் கனவை, நீங்கள் நிறைவேற்றியுள்ளீர்கள். 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்று பாடிய தேசியக் கவி பாரதியின் கனவை, எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நீங்கள் நிறைவேற்றியிருக்கிறீர்கள். 'எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்று பாடிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய கனவை நீங்கள் நிறைவேற்றியிருக்கிறீர்கள். எங்கள் அன்னை தமிழுக்குச் செய்து வருகின்ற சாதனைகளை நாங்கள் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நேரம் போதாது. இந்த உலகம் உள்ளளவு வரை, இந்தத் தமிழ்ச் சமுதாயம் உள்ளளவு வரை எங்கள் அன்னை தமிழுக்குச் செய்து வருகின்ற தொண்டு என்றைக்கும் நினைவில் நின்றுகொண்டே இருக்கும்.

*முற்பகல் 11–40*

*மறக்க முடியுமா?* எங்கள் அன்னை *1991–1996* ஆண்டுகளில், இந்தத் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த அந்தக் காலகட்டத்தில் தஞ்சைத் தரணியிலே உலகத் தமிழ் மாநாட்டினை நடத்தி தமிழுக்குப் பெருமை சேர்த்தாரே! இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டினைச் சென்னையிலே நடத்தினார் பேரறிஞர் அண்ணா. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினை மதுரையிலே நடத்தி, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று முழக்கமிட்டார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினைத் தஞ்சையிலே நடத்தி, அறிவியலிலும் தமிழ், அனைத்திலும் தமிழ், இன்றும் தமிழ், என்றும் தமிழ் என்று வீர முழக்கமிட்டுத் தமிழுக்குப் பெருமை சேர்த்த தன்னிகரில்லா முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தமிழுக்கு நீங்கள் செய்து வருகின்ற தொண்டு, என்றும் தமிழர் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே நான் பதிய வைக்க விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



2006 ஜனவரி 23] [திருமதி வளர்மதி ஜெபராஜ்]

மகாத்மா காந்தி சொன்னார், பெண்களின் நிலை உயரும்போது ஆண்களின் நிலையும் உயரும்—பெண்களின் நிலை உயரும்போது, ஆண்களின் நிலையும் உயரும் என்று. இவ்விருவரின் நிலையும் உயரும்போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்துவிடும் என்றார் மகாத்மா காந்தி. அந்த மகாத்மாவின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில் 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்று கேட்ட காலத்திலும்,

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!"

என்று பாடினாரே பாரதி, அந்த பாரதியின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில், அடிபட்டு, அடிமைப்பட்டு, இன்னலுற்று ஏங்கித் தவித்த பெண் சமுதாயத்தை வாழ வைக்க மகளிர் சுய உதவிக் குழுவினை ஏற்படுத்தி, சொந்தத் தொழில் செய்யும் தகுதி கொடுத்து, பல பேருக்குப் பணி கொடுக்கும் திறமை கொடுத்து, பெண் சமுதாயம் பெருமையோடு வாழ வழிகாட்டிய எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, 'வேங்கைதனைத் துரத்தி விளையாடும் வீர குலம் பெண் குலம்' குலம்—வேங்கைதனைத் துரத்தி விளையாடும் வீர குலம் பெண் என்பதை உலகுக்குப் பறைசாற்ற, முழுக்க, முழுக்கப் பெண்களை மட்டுமே கொண்டு செயல்படும் பெண்கள் காவல் நிலையம். அடி வாங்குவதற்குப் பிறந்தவள் பெண்—அடிவாங்குவதற்குப் பிறந்தவள் பெண் என்ற நிலையை மாற்றி, அதிரடிப் படையில் பெண் என்று இந்தியாவிலேயே முதன்முதலாகப் பெண்களை மட்டுமே கொண்ட அதிரடிப் படை. *(மேசையைத் தட்டும் ஒலி)* பெண் குழந்தைகள் பிறந்துவிட்டால், கவலைப்பட்டு, கண்ணீர் விடும் அவல நிலையைப் போக்கத் தென்னங்கன்று வழங்கும் திட்டம். இதுவரை 3 இலட்சத்திற்கும் மேலாக தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டு, பெண் குழந்தைகள் வளர, வளரத் தென்னங்கன்றும் வளர்ந்து, வளர்ந்து, பெண் குழந்தைகளின் வாழ்வில் தென்றல் வீசச் செய்யும் 'தென்னங்கன்றுத் திட்டத்தை, இன்றைக்கு அத்தனை பேரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

புதியதோர் உலகம் செய்வோம், பெண் சமுதாயத்தைப் பாதுகாப்போம் என, பெண்களைப் பாதுகாக்கும் அரணாய் விளங்கும் எங்கள் அன்னையே, வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம் பெண்மையினால் உண்டென்று பேச வைத்த எங்கள் பேரரசியே, பெண்

[திருமதி வளர்மதி ஜெபராஜ்] [2006 ஜனவரி 23

சமுதாயம் உங்களைப் பார்த்துச் சொல்கிறது அம்மா—பெண் சமுதாயம் உங்களைப் பார்த்துச் சொல்கிறது அம்மா, 'எங்களுக்குப் பசியில்லை, எங்களுக்குப் பசியில்லை அம்மா வயிற்றினிலே! எங்களுக்குக் கவலை இல்லை அம்மா வாழ்க்கையினிலே! நீங்கள் மட்டும் இந்த நாட்டை ஆளாமல் இருந்திருந்தால் அம்மா,—நீங்கள் மட்டும் இந்த நாட்டை ஆளாமல் இருந்திருந்தால், எங்கள் இதயங்கள் பட்டினியால் செத்திருக்கும். எங்கெல்லாம் இதயங்கள் வாடினவோ அங்கேயெல்லாம் ஓடி, ஓடிச் சென்று உதவிக் கரம் நீட்டிய அன்னை தெரசா இல்லையே என்று ஏங்கித் தவித்த நேரத்தில், உங்கள் உருவத்தில் அம்மா, உங்கள் உருவத்தில் நாங்கள் அன்னை தெரசாவைப் பார்க்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று பெண் சமுதாயமே இன்றைக்கு மனமுவந்து பாராட்டிக் கொண்டிருக்கிறது.

'உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்றார் பாரதி— 'உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்றார் பாரதி.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்'

என்று சொன்னார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். 'கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி' என்று புகழாரம் சூட்டினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அப்படிப் போற்றப்பட்ட, புகழப்பட்ட, பாராட்டப்பட்ட உழவர்களின் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்ற உழவர் பாதுகாப்புத் திட்டம். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய ஒரு கோடியே 37 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம். இத்திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேருவதற்கு 10 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டுமே, அதை நீங்கள் செலுத்த வேண்டாம், என்னுடைய அரசாங்கமே செலுத்தும் என்கிற உத்தரவு. திருமணம் செய்து கொள்ள உதவி. பிள்ளைகள் கல்வி கற்க உதவி. 60 வயதானதற்குப் பிறகும் ஓய்வூதியம். விபத்தில் சிக்கி உயிர் இழக்க நேரிட்டால் ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி. ஈமச் சடங்கிற்கு 2,500 ரூபாய் உதவி. உழவனாய்ப் பிறந்து உலகிற்குச் சோறு போடும் உனக்கு, பிறந்தது முதல் இறக்கின்ற வரை உன் வாழ்க்கைக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற அரசு என்னுடைய அரசு என்கின்ற உத்தரவாதத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உழவர்களுக்குக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்—எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், உழவருக்கு வாழ்வளிக்கும் திட்டங்களையும் கண்டே" என்று சொல்லக்கூடிய வகையில், உழவர்களின் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்தப் பல்வேறு திட்டங்கள்.



2006 ஜனவரி 23] [திருமதி வளர்மதி ஜெபராஜ்]

முற்பகல் 11–45

2001–2006 ஆம் ஆண்டில் 45,000 விவசாயிகளுக்கு வேளாண் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகின்றது என்ற செய்தி. 2006–2007 ஆம் ஆண்டில் 50,000 விவசாயிகளுக்கு வேளாண் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்படும் என்கின்ற செய்தி; அம்மா அவர்களின் புரட்சிச் சிந்தனையில் உருவான புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்; வேளாண் சார்ந்த உணவுப் பொருளைப் பதப்படுத்தி, பத்திரப்படுத்தி, ஊரகப் பகுதிகளில் வேளாண் வேலைவாய்ப்பை அதிகரிக்க வேளாண் சார்ந்த தொழிற்சாலைகள்; 212 வளர்ச்சி வட்டாரங்களில், 216 கோடி ரூபாய் திட்டச் செலவில், 336 தொழில் பிரிவுகளில் உற்பத்தியைத் தொடங்கி, 8,096 பெண்கள் உட்பட 12,000 பேருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி, எங்கள் காந்தி கண்ட கிராம சுயராஜ்யத்தை ஏற்படுத்தியுள்ள எங்கள் அன்னையே, கிராம மக்கள் உங்களைப் பார்த்துச் சொல்லுகிறார்கள், "எங்கள் வாழ்வில் துன்பம் விரட்டிய ஜெய தேவியே, எங்கள் வாழ்வில் செல்வங்கள் கொடுத்த இலட்சுமி தேவியே, தமிழகத்தை ஆளுகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நீங்கள்தான்" என்று இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்களே, அந்த வாழ்வினை நகரப் பகுதிகளிலே உள்ள மக்கள் மட்டும் அல்ல, கிராமப் பகுதிகளிலே உள்ள மக்களும் பெறவேண்டும் என்பதற்காக 106 ஆரம்ப சுகாதார மையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்துவதற்கு அம்மா அவர்கள் போட்டிருக்கின்ற உத்தரவு, கிராமங்களிலே வாழ்கின்ற மக்கள் மனதிலெல்லாம் மகிழ்ச்சியைத் தரக்கூடிய உத்தரவு. அனைத்து மருத்துவமனைகளிலும், தொடக்க சுகாதார மையங்களிலும் உள்ள பழைய கருவிகளுக்குப் பதிலாக, நவீனக் கருவிகளை வாங்கத் திட்டம் தீட்டி, பணக்காரர்களுக்குக் கிடைக்க கிடைக்கக்கூடிய நவீன மருத்துவ வசதி ஏழைகளுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்து, மேலவர், கீழவர் என்ற நிலையும் இல்லை—மேலவர் கீழவர் என்ற நிலையும் இல்லை, இது மருத்துவச் சேவையிலும் எங்கள் நாட்டில் இல்லை என்பதை உலகிற்கு உணர்த்தி, உயர்வு, தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்கி, அனைவரும் அகமகிழ ஆட்சி செய்யும் எங்கள் அன்பு தேவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர, இந்த உலகத்தில் வேறு யாராவது உண்டா? (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா அவர்கள் எந்தத் திட்டத்தைத் தீட்டினாலும் நன்கு சிந்தித்து, அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துபவர். அதனாலேதான், ஒவ்வொரு

[திருமதி வளர்மதி ஜெபராஜ்] [2006 ஜனவரி 2

திட்டமும் இன்றைக்கு அம்மா அவர்களாலே செயல்படுத்தப்படுகின் திட்டங்கள் வெற்றி நடைபோடுகின்றன. அமெரிக்க அறிஞன் எமர்சன்– உலகமே போற்றப்படுகின்ற அந்த அமெரிக்க அறிஞன் எமர்சனிட போய்க் கேட்கிறார்கள், உலகத்திலேயே மிகக் கஷ்டமான காரிய எது என்று. அதற்கு அந்த அமெரிக்க அறிஞன் எமர்சன் சொல்கிறார் உலகத்திலேயே மிகக் கஷ்டமான காரியம் சிந்தனை செய்வது என்ற கிரேக்கர் போற்றி வந்த ஞானிகளில் ஏழு பேரில் முதன்மையானவன் தேலிஸ். அந்தக் கிரேக்க ஞானிகளில் முதன்மையான தேலிஸிடப் போய், உங்கள் இடத்திலே கேட்கிறோம் நாங்கள், உலகத்திலேயே சுலபமானது எது தெரியுமா என்று கேட்கிறார்கள். அதற்கு தேலிஸ் சொல்லுகிறார், உலகத்திலேயே சுலபமானது, பிறருக்குப் புத்தி சொல்வது என்று. உலகத்தின் மிகக் கஷ்டமான காரியம் என்ற அமெரிக்க அறிஞன் எமர்சனால் சொல்லப்பட்ட செயலை என் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்துகொண்டு வருகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பிறருக்கு உருப்படியில்லாத புத்திமதிகளைச் சொல்லி, பொழுதுபோக்கும் வேலையைத் தி.மு.க. செய்கிறது. குறிப்பாக தி.மு.க. உறுப்பினர் துரைமுருகன் இந்த மன்றத்திலே வந்து பொழுதுபோக்கிக் கொண்டு, தேவையில்லாத புத்திமதிகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதற்கு ஒரு எடுத்துக்காட்டுதான், இதே அவையிலே சொன்னார் தி.மு.க. உறுப்பினர் திரு. துரைமுருகன், என்ன தெரியுமா? அம்மா அவர்கள் இந்த அவையிலே புதிய வீராணம் திட்டத்தை அறிவித்தபொழுது, கோபம் கொப்பளிக்க எழுந்திருந்தார் துரைமுருகன் அவர்கள். இந்தத் திட்டம் உருப்படுமா, இந்தத் திட்டம் நிறைவேறுமா என்று சொன்னார். இது வீணான திட்டம் அல்ல, வீணாகக் கத்தும் உங்களுக்கும் தாகம் தீர்த்து வைக்கும் திட்டம் புதிய வீராணம் திட்டம் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அவருடைய வீட்டிற்குக்கூட புதிய வீராணம் திட்டத்தின்மூலம்தான் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. தினமும் *180* மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் புதிய வீராணம் திட்டத்தை மிகக் குறுகிய காலத்தில் செயல்படுத்தி, விமர்சனம் செய்தவர்களின் வீடுகளுக்குக்கூட தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

*முற்பகல் 11–50*

அதேபோலத்தான் துரைமுருகன் அவர்கள் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள் கடந்த முறை. ஒரு நாடகமாடிப் பேசுவதைப் போல நாட்டியத்தோடு துரைமுருகன் அவர்கள் இங்கே பேசினார்கள். அடுத்த



2006 ஜனவரி 23] [திருமதி வளர்மதி ஜெபராஜ்]

சட்டமன்றக் கூட்டத் தொடரிலே பார்ப்போம், நாங்கள் இங்கே வந்து அமருவோம் என்று சொன்னார். நான் எண்ணிப் பார்க்கிறேன். இதே கருத்தை, சட்டமன்றத்திற்கே வராத சேப்பாக்கம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. கருணாநிதி வெளியே நின்றுகொண்டு முரசொலியிலே கடிதம்மூலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவர்களுக்கு என்ன ஆணவம் என்று சொன்னால், நாடாளுமன்றத் தேர்தலிலே, பாண்டிச்சேரி உட்பட *40* தொகுதிகளிலும் வெற்றி பெற்றுவிட்டோம் என்கிற ஆணவம். எனவே, தி.மு.க. தலைவர் வெளியிலே சொன்னார், '*40*–ம் நமதே, நாடாளுமன்றமும் நமதே, இந்த நாடும் நமதே' என்று சொன்னார். ஆனால், கும்மிடிப்பூண்டி, காஞ்சிபுரம் தேர்தலுக்குப் பிறகு, அவர் சுருண்டு போய்ப் படுத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தேர்தலிலே மக்கள் என்ன சொன்னார்கள்? காஞ்சிபுரமும் எங்கள் அம்மாவுக்கே, கும்மிடிப்பூண்டியும் எங்கள் அம்மாவுக்கே, (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற தேர்தலில் வெற்றியும் எங்கள் அம்மாவுக்கே, (மேசையைத் தட்டும் ஒலி) என்று காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி தொகுதிகளின் மக்கள் அம்மா அவர்களுக்குத் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அந்த நேரத்திலே, தி.மு.க. தலைவர் தேர்தல் பிரசாரம் செய்கின்றபோது சொன்னார், 'இது சாதாரணத் தேர்தல் அல்ல, *234* தொகுதிகளிலும் மக்களின் தீர்ப்பு என்னவாக இருக்கும் என்பதை நிரூபிக்கிற தேர்தல்' என்று, ஏழு கட்சிகளோடு கூட்டணி அமைத்திருக்கிறோம் என்ற ஆணவத்தில் சொன்னபோது, எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? திரு. கருணாநிதி அவர்களே, நீங்கள் ஏழு கட்சிக் கூட்டணி என்கிற ஆணவத்தில் தேர்தலைச் சந்திக்கிறீர்கள், ஆனால், நாங்களோ இந்த மக்களுடன் வைத்திருக்கின்ற கூட்டணியை நம்பித் தேர்தலைச் சந்திக்கிறோம், (மேசையைத் தட்டும் ஒலி) *24* மணி நேரத்தில், *20* மணி நேரம் இந்த நாட்டு மக்களுக்காக உழைக்கின்றேனே, அந்தச் சேவையை எண்ணி இந்த நாட்டு மக்களிடத்திலே தேர்தலைச் சந்திக்கிறேன் என்று எங்கள் அம்மா அவர்கள் நாட்டு மக்களிடத்திலே நீதியைக் கேட்டபொழுது, அம்மா, என்றென்றும் இந்த நாட்டை அரசாளும் முதலமைச்சர் நீங்கள்தான் என்று மக்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, வீணாகக் கத்துவதை துரைமுருகன் நிறுத்திவிட்டு உருப்படியான வேலையைச் செய்ய வேண்டும் என நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு உலகமே வியக்கக்கூடிய அளவிற்கு மிகச் சிறப்பான ஆட்சியை நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

பல்வேறு திட்டங்களை நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நேரம் போதாது. ஒரே ஒரு திட்டத்தை மட்டும் நான் சொல்லி, என்னுடைய கருத்துகளை நிறைவு செய்யலாம் என விரும்புகிறேன். அம்மா அவர்களின் கருணை மிக்க, மனிதாபிமானம் மிக்க ஆட்சிக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டுதான் அன்னதானத் திட்டம். அன்னதானத் திட்டத்தை இன்றைக்கு அத்தனை பேருமே பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். பக்திப் பரவசத்தோடு வருகின்ற பக்தன், பசியால் திரும்பிப் போய்விடக் கூடாது என்பதற்காகக் கோயிலிலே அன்னதானத் திட்டம். முஸ்லிம் சமுதாயத்தினரின் கோரிக்கையை ஏற்று தர்காக்களிலே அன்னதானத் திட்டம். எம்மதமும் சம்மதமாய்க் கொண்டு கிருஸ்துவ ஆலயங்களில், எங்களுடைய பேராலயங்களிலே அன்னதானத் திட்டம். பைபிள் கிருஸ்துவர்களின் புனித நூல். பைபிளில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ, அதுவே எங்கள் கிருஸ்துவர்களின் வேத வாக்கு. அதில் ஏசாயா தீர்க்க தரிசனம் 58–வது அதிகாரம், 7 ஆம் வசனத்திலே சொல்லப்படுகிறது, 'பசியுள்ளவனுக்கு ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், வஸ்திரம் இல்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரம் கொடுக்கிறதும் எனக்கு உகந்த உபவாசம்' என்று பைபிளிலே சொல்லப்பட்டிருக்கிறது. மத்தேயு எழுதிய சுவிஷேசம், 25 ஆம் அதிகாரம், 35 மற்றும் 40–வது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, 'பசியாய் இருந்தேன், எனக்கு போஜனம் கொடுத்தீர்கள்; தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே நீங்கள் செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்' என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. பைபிளில் சொல்லப்பட்டிருக்கின்ற கருத்தின்படி ஏழைகளின் பசியைத் தீர்க்க, கிருஸ்துவ ஆலயங்களிலும் அன்னதானத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ள எங்களுடைய சமதர்மச் சமுதாயச் சிற்பியே! மத்தியிலே ஆட்சியிலே இருந்துகொண்டு மக்களைத் துடிக்க வைக்க நினைக்கும் துரியோதனன் கூட்டத்தினை, நிதி தராதீர்கள் என்று மக்கள் உரிமையைப் பறிக்கும் மதிகெட்ட கூட்டத்தினை எதிர்த்துப் போராடிப் போராடி, புரட்சி மலராகி, தீமைகளை வேரறுக்கும் வேதாந்த ஜான்சி ராணியே! (மேசையைத் தட்டும் ஒலி) புத்தரின் கொள்கைகளை— அம்மா, நீங்கள் புத்தரின் கொள்கைகளை, ஏசுபிரானின் போதனைகளை, நபிகள் நாயகத்தின் தத்துவங்களை—அம்மா, நீங்கள் புத்தரின் கொள்கைகளை, ஏசுபிரானின் போதனைகளை, நபிகள் நாயகத்தின் தத்துவங்களை இதயத்தில் சுமந்து வாழுகின்றீர்கள். எங்கள் அம்மா, வெற்றி தேவதையே, எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது,



எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது, எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, எங்கள் அன்னையே, வெற்றித் திருமகள்—எங்கள் அன்னையே, வெற்றித் திருமகள் என்றும் உங்கள் பக்கம் என்பதை இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கப்பலை இயக்குவதற்கு மாலுமி தேவை—கப்பலை இயக்குவதற்கு மாலுமி தேவை, படகை நகர்த்துவதற்குத் துடுப்பு தேவை—படகை நகர்த்துவதற்குத் துடுப்பு தேவை, எங்கள் அன்னையே, எங்கள் இதய தெய்வமே, தமிழக மக்களைக் காப்பாற்ற என்றும் உங்கள் ஆட்சித் தலைமை தேவை, தேவை எனக் கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் *11–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் அவர்களை வரவேற்று, பேச அழைக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தில் கலந்துகொள்கிற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்"

என்கிற வள்ளுவனுடைய குறளை மீண்டும் ஒரு முறை இந்த அவைக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்"

என்பான் வள்ளுவன். நாங்கள் சொல்பவற்றை ஏதோ குற்றச்சாட்டுக்களுக்காகச் சொல்கிறோம் என்று நீங்கள் கருத வேண்டாம். எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற எங்களுக்குச் சில பொறுப்புகள் உண்டு. ஆளுங்கட்சியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள்போல் நாங்களும் பேசத் தொடங்கிவிட்டால் பிறகு— திட்டங்களில் இருக்கக்கூடிய குறைகள், அல்லது ஆங்காங்கே இருக்கக்கூடிய நெருடல்கள், இவற்றையெல்லாம் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்கிற நல்லெண்ணத்தின்

அடிப்படையிலேதான் எங்களுடைய வாதங்களை நாங்கள் எடுத்து வைக்கிறோம். ஆகவே, ஏதோ குற்றச்சாட்டு, குற்றச்சாட்டு என்று சொல்லி, எங்களை நீங்கள் புறந்தள்ள வேண்டாம். சொல்கிற கருத்துகளை நிச்சயமாகச் செவிமடுத்து அதற்கான செயற்குறிப்புகளை நீங்கள் தீட்டி, திட்டத்தை முழுமை பெறச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு எங்களுடைய வாதத்தை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, கண்ணதாசனுடைய பாடல்கள் இப்போது அதிகமாக வலம் வந்து கொண்டிருக்கின்ற வேளையில், கண்ணதாசனுடைய பாடலொன்றை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"ஜாதகத்து ராசியிலே சனி திசையே வந்தாலும்
பாதகத்தை வணங்காமல் பரிசு தரும் காலம் வரும்.
எல்லோர்க்கும் ஏடெழுதி இறைவன் வைத்திருக்க
பொல்லாத காலம் எனப் புலம்புவதில் லாபம் என்ன?
பல்லாயிரம் ஆண்டு பாராண்ட தலைமுறையும்
செல்லாத காசாகி தெருவில் அலைவதுண்டு.
விதிக் கோட்டை நடுவினிலே விளையாடும் காலமகள் சதி செய்வாள்
சில நேரம் தர்பாரில் ஏற்றி வைப்பாள்.
இன்னதுதான் இப்படித்தான் என்பதெல்லாம் பொய்க் கணக்கு
இறைவனிடம் உள்ளதடா எப்போதும் உன் வழக்கு"

என்று பாடுவான் கண்ணதாசன். ஆகவே, ஆட்சி அதிகாரம் என்பது எல்லாம் நிலையானவை அல்ல. ஆட்சி அதிகாரம் கிடைத்துள்ள காலகட்டத்தில்... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** அது எல்லாப் பக்கமும்தான். உங்களுக்கும்தான் பொருந்தும்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆட்சி அதிகாரம் கிடைத்துள்ள காலகட்டத்தில் நன்மை, தீமைகளை ஆய்ந்து, முறை செய்யாத அரசன் நாள்தோறும் மெல்ல, மெல்லத் தன் நாட்டை இழந்து வருவான் என்பதைத்தான் வள்ளுவன் அவ்வாறு கூறுகிறான். ஆகவே, என்னுடைய இந்தக் கருத்தை நான் இந்த இடத்திலே சொல்ல விரும்புகிறேன். அதற்கு முன்னாலே, விவாதத்திற்கு உள்ளே போவதற்கு முன்னாலே, சில கோரிக்கைகளை நான் மாண்புமிகு முதல்வரிடம் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



• **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் டெல்லியிலே இருக்கின்ற ஆட்சி, ஆட்சிக்கு வந்த பின்னர் 5 முறை பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தியிருக்கிறதே, (மேசையைத் தட்டும் ஒலி) அதை அவர்களுக்குப் புரிய வைத்து, அதனுடைய விளைவுகள் என்னவாக இருக்கும் என்று புரிய வைத்து இந்தப் பாடலைப் போய் டெல்லியிலே பாட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12–00

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சாப் பொருள் நம்முடைய இந்தியாவிலே கிடைக்காத காலகட்டத்தில், பொதுவாக இறக்குமதி செய்கிறபோது (குறுக்கீடுகள்) ஏன் என்றால், நான் முதல்வரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் விதிக்கிற அந்த வரியை -- நீங்கள் தமிழ்நாட்டிலே விதிக்கிற அந்த வரியைக் குறைத்தாலே ஓரளவுக்குக் குறையும் என்கிற காரணத்தினால் மாண்புமிகு முதல்வர் அவர்களினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடு)

அடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் சில கோரிக்கைகளை முதலிலே வைத்துவிடுகிறேன், வாதத்திற்கு முன்னாலே.

வேலூரிலே அரசாணைப்படி துவக்கப்பட்டிருக்கிற பஸ் ஸ்டாண்ட்...(குறுக்கீடு)

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன் ஏதோ கேட்கிறார். உங்களிடம் ஏதோ கேட்க வேண்டுமாம் !

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோல், டீசலுக்குத்தான் கச்சாப் பொருள் விலை ஏறியது. இந்த அரிசிக்கு என்ன, எதனால் ஏறியது? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அரிசியினுடைய விலையை உயர்த்த வேண்டாம் என்ற கோரிக்கையை நாங்களும் வைத்திருக்கிறோம், நீங்களும் வைத்திருக்கிறீர்கள். இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் பத்திரிகை படிக்கவில்லை என்று கருதுகிறேன். உங்களுடைய நிதியமைச்சர் சிதம்பரம் ஹைதராபாதிலே நேற்றுச் சொல்லியிருக்கிறார், 'P. Chidambaram indicated that the quantity of ration supplied to BPL families through PDS would be cut.' இவ்வாறு சொல்லியிருக்கிறார். அந்த ரேஷன் அரிசியினுடைய அளவைக் குறைத்துவிடுவோம் என்று ஹைதராபாதிலே ஞாயிற்றுக்கிழமை பேட்டியிலே சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, ஏற்கெனவே கேபினட் மீட்டிங்கில் இதற்கான நோட்டைப் போட்டு hold on செய்திருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஓர் அச்சுறுத்தல் வராது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு, விவாதத்திற்குப் போவதற்கு முன்னாலே சில கோரிக்கைகளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாணைப்படி வேலூரிலே ஒரு புதிய பஸ் ஸ்டாண்டை, எப்படி நம் C.M.D.A. சென்னையிலே பஸ் ஸ்டாண்டை நிர்வாகம் செய்கிறதோ, அதேபோலப் புதுமையாக வேலூரிலே L.P.A.–உள்ளூர்த் திட்டக் குழுமம் பஸ் ஸ்டாண்டை நடத்தி வந்துகொண்டிருக்கின்றது. ஆனால், அதற்கு அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாமல் இப்போது மக்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, நான் ஏற்கெனவே முதல்வரிடம் கோரிக்கை வைத்திருக்கிறேன், Town and Country Planning–னுடைய consolidated fund–லே 58 கோடி ரூபாய் இன்று அப்படியே deposit இருந்துகொண்டிருக்கிறது. அதிலிருந்து 5 கோடி ரூபாயை உடனடியாக விடுவித்து, ஒரு மானியமாகத் தந்து, வேலூர் பஸ் ஸ்டாண்டில் நீங்கள் அடிப்படை வசதி செய்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, வேலூர் மாவட்டத்திற்கும், வேலூர் நகரத்திற்கும், ஏன் தருமபுரி மாவட்டத்திற்கும், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும்கூட ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வந்தால்தான் எங்களுக்கு நிரந்தரமாகக் குடிநீர்ப் பிரச்சினை தீரும். ஆகவே, அந்தத் திட்டத்தில் வேலூர் மாவட்டத்தைப் பொறுத்த அளவில், 1,008 கோடி ரூபாய் கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களுக்கும், 1,500 கோடி ரூபாய் வேலூர் மாவட்டத்திற்கும் தேவைப்படுகிறது என்று estimate–லேயே



கூறுகிறார்கள். அதற்கான பணத்தை ஒதுக்கீடு செய்து எங்களுடைய ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, வேலூர் நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உறுதிமொழியெல்லாம் கொடுக்கப்பட்டு, திட்டங்களெல்லாம் தீட்டப்பட்டு, ஏற்கெனவே அதற்கான investigation எல்லாம் முடிந்து அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டும்கூட—55 கோடி ரூபாயிலே நிறைவேற்றுவதற்கான அறிவிப்பும் வந்தும்கூட, இன்னும் பணிகள் துவக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றையும் நிறைவேற்றுவதற்கு உடனடியாக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

3 ஆண்டுகளுக்கு முன்னாலே முதல்வர் அவர்கள் தந்திருக்கக்கூடிய எங்களுடைய திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு, 3 ஆண்டுகளாகப் பதிவாளரே போடவில்லை. இப்போது Vice Chancellor பதவிக் காலமும் முடிந்துவிட்டது. உடனடியாகப் பதிவாளரையும், Vice Chancellor–ஐயும் நியமித்து, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு 50 கோடி ரூபாயையும் வழங்கி நிரந்தரக் கட்டடம் கட்டி, அந்தப் பல்கலைக்கழகம் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 80 ஆண்டு காலமாக வேலூர் நகரில் இயங்கி வந்த Government Pentland Hospital, இப்போது அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வந்த பிறகு, அடுக்கம்பாறை என்ற இடத்திற்கு, 10 கிலோ மீட்டர் தள்ளிப் போய்விட்ட காரணத்தினால், வேலூர் நகரிலே இருக்கக்கூடிய மக்களெல்லாம் இப்போது என்னைத் திட்டிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வந்தபோதுகூட நான் கோரிக்கை வைத்தேன். அந்தப் பழைய மருத்துவமனையை முழு அளவிலே, அதற்காகத் தனியாக 30 டாக்டர்களையோ, 50 நர்சுகளையோ போட்டுக்கூட ஒரு Peripheral Hospital ஆக நீங்கள் நடத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உறுதியளித்திருக்கிறார். கோப்புகள் முதல்வரிடம் இருக்கின்றன. உடனடியாக எப்படியாவது தயவுசெய்து அதைப் பழைய நிலைக்கே செய்து, அந்த Government Pentland Hospital–ஐ நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சி. ஞானசேகரன்] [2006 ஜனவரி 23

இன்னொன்று, பாலாறு குறித்து ஏற்கெனவே இங்கே சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்படியாவது பேச்சுவார்த்தையைத் தொடங்கி, உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்தாவது பாலாற்றின் குறுக்கே எந்தவிதமான அணையையும் ஆந்திர அரசு கட்டாமல் தடுத்து நிறுத்தி எங்களுக்கு ஒரு வழிவகையைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 2000 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே இந்த அவையிலே அறிவித்ததுபோல, வேலூருக்கு ஒரு அரசு சட்டக் கல்லூரியை உடனடியாக நீங்கள் தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–05

அடுத்து, தியாகிகள். இப்போதெல்லாம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய தியாகிகள், சுதந்திரப் போராட்ட வீரர்கள் 3,050 ரூபாய் பென்ஷனாகப் பெறுகிறார்கள். மத்திய அரசு 6,500 ரூபாய் கொடுக்கிறது. அதற்கிணையான பென்ஷனை இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த அளவிற்கு இல்லாவிட்டாலும்கூட, விடுதலைப் போராட்ட வீரர்களுடைய பென்ஷனை சற்று உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இப்போது விவாதத்திற்கு வருகிறேன். முதலிலே கோரிக்கைகளை முடித்துவிட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், என் தம்பி ஞானசேகரன் அவர்கள் இப்போது பேசிக்கொண்டிருந்தபோது சொன்னார்கள், பாலாற்றின் குறுக்கே அணை கட்டக் கூடாது என்று. இப்பொழுது ஹைதராபாதிலே போய் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்? உங்கள் முதலமைச்சர் அங்கேதான் இருக்கிறார். அம்மா சுப்ரீம் கோர்ட்டிலே போட்டு, அதை நிறுத்தச் செய்ய வேண்டுமா? ஏன் நீங்கள், எங்களுக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது, காங்கிரஸ் ஒன்றுமில்லாமல் போய்விடும், தயவுசெய்து அந்த அணையைக் கட்டாதீர்கள் என்று, இங்கேயிருந்து போனவர்கள் ஹைதராபாதிலே சொல்லாமல் விட்டுவிட்டார்கள்போல இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு அவர் பதில் சொல்லட்டும்.



2006 ஜனவரி 23]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஹக்கீம் அண்ணன் இங்கே கூறுவதுபோல, நாங்கள் போய்க் கேட்பதைவிட, இன்றைக்கு அங்கீகாரம் படைத்து, authorized–ஆக இருக்கக்கூடிய ஒரு முதலமைச்சர்தான் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இது ஒரு மாநிலப் பிரச்சினை. அண்ணன், தம்பிகளே ஒரே குடும்பத்தில் பிறந்தவர்கள்கூட, பிரச்சினை என்று வருகின்றபோது அவர்களே ஒத்துக்கொள்ளாத ஒரு சூழல் இருக்கின்றபோது, நீதிமன்றம் போகின்றபோது, இது ஒரு மாநிலம் தழுவிய பிரச்சினை என்கின்ற காரணத்தினாலே, தயவுசெய்து நாம் இப்படியெல்லாம் பேசி இங்கேயே நாம் அதை dilute செய்துவிட வேண்டாம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு முதல்வரிடம் காலையிலேகூட, 'குமுதம் ரிப்போர்ட்டர்' பத்திரிகையிலே படித்துவிட்டு, ஒரு கோரிக்கையை நான் வைத்திருக்கிறேன். ஆண்டிப்பட்டியினுடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் 82 வயதிலும், பாவம் கூலி வேலைக்குச் சென்று, அவர்கள் அவஸ்தைப்படுவதாக, "மாட்டுத் தொழுவத்திலே மாஜி எம்.எல்.ஏ." என்ற தலைப்பிலே வந்திருக்கிறது. இதே அவையில் 5 ஆண்டு காலம் பணியாற்றிய அந்தச் சகோதரி, 82 வயதிலும் கூலி வேலைக்குப் போகக்கூடிய ஒரு நிலையில் இருந்துகொண்டிருப்பது மிகவும் வருத்தமாக இருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஞானசேகரன், நம்முடைய சட்டமன்றப் பேரவை அலுவலகத்திலிருந்து முறையாக அவர்களுக்கு பென்ஷன் அனுப்பப்படுகிறது. கடந்த மாதம்கூட அனுப்பப்பட்டிருக்கிறது. அவர் காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர். காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவருக்கு நீங்கள் கொஞ்சமாவது கவலைப்பட வேண்டாமா? காமராஜர் குடும்பத்தையே கைவிட்டு விட்டீர்கள். புரட்சித் தலைவி அல்லவா காப்பாற்றினார்? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி கிருஷ்ணவேணி அவர்களைப் பற்றி திரு. ஞானசேகரன் அவர்கள் சற்று முன்புதான் விவரத்தை என்னிடம் அளித்து, அவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதை நான் மகிழ்ச்சியோடு

ஏற்றுக்கொண்டேன். ஒரு புறத்தில் சொல்லப் போனால், பெருமையாக இருக்கிறது. ஒரு முன்னாள் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினருக்குக் காங்கிரஸிடம் கேட்டால் எந்த உதவியும் கிடைக்காது என்பது திரு. ஞானசேகரன் அவர்களுக்கு நன்றாகவே தெரிந்திருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதைப்போலவே, தி.மு.க. தலைவரின் மூத்த மகனானாலும்கூட, சொந்தத் தந்தையிடம்கூட அவருக்கு வாழ்வாதாரத்திற்கான உதவி கிடைக்காது என்பது தெரிந்திருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே, அத்தகையவர்கள் எல்லாம் உதவிக்காக என்னிடத்தில்தான் வருகிறார்கள். என்னிடத்தில்தான் வருவார்கள். ஏனென்றால், கட்சி பாரபட்சமின்றி எந்த பேதமும் பார்க்காமல், யார் கஷ்டப்பட்டாலும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்பது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எனக்குக் கற்றுக் கொடுத்த பாடம். அதை நான் பின்பற்றி வருகிறேன். ஆகவே, திரு. ஞானசேகரன் அவர்கள் கொடுத்த விவரத்தை நான் குறித்துக்கொண்டேன். திருமதி கிருஷ்ணவேணி அவர்களுக்கு இந்த அரசு என்ன உதவி செய்யவுள்ளது என்பதை நாளை இந்தப் பேரவையில் அறிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வருக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியும் நிச்சயமாகச் செய்யும். இப்போதுதான் எங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. நாங்களும் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் மட்டும் *(குறுக்கீடு)* கட்சி சொல்லித்தானே பண்ண முடியும்? முதலமைச்சரா நான்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே சமூகச் சிந்தனையோடு சில கருத்துகளை நான் இந்த அவையிலே வைக்க விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், பல ஆண்டு காலம் இந்த அவையினுடைய நடவடிக்கைகளைப் பார்த்தவன், கண்டவன், கேட்டவன். நாம் பல திட்டங்களைக் கொண்டு வருகிறோம். சட்டத்தினுடைய ஆட்சியை நாம் இங்கே நிலைநிறுத்துவதற்காக எவ்வளவோ பாடுபடுகிறோம். இவ்வளவு பாடுபட்ட பிறகும்கூட, இன்னும் நம்முடைய தேசப் பிதா மகாத்மா காந்தியடிகள், பண்டித ஜவஹர்லால் நேரு, கர்ம வீரர் காமராஜர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற தலைவர்கள் எல்லாம் எந்த நோக்கத்திற்காக



அரும்பாடுபட்டு, ஜாதியை ஒழிக்க வேண்டும் என்று அவர்கள் எல்லாம் உழைத்தார்களோ, அந்த நோக்கம் இன்று நிறைவேறி இருக்கிறதா என்று பார்க்கிறபோது, நிச்சயமாகத் தீண்டாமையை முழுமையாக நாம் வேரறுத்து இருக்கிறோம். அதேபோல, திட்டங்கள் பல தீட்டி இந்த ஏற்றத்தாழ்வுகளை எல்லாம் அகற்றி இருக்கிறோம். ஆனால் ஏனோ இன்னும் அந்த ஜாதி என்கிற தீ கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறபோது நமக்கு வேதனையாக இருக்கிறது. பூவிலே ஜாதி இருக்கலாம், ஜாதி மல்லி. காயிலே ஜாதி இருக்கலாம், ஜாதிக் காய். ஆனால், இன்னும் நம்முடைய மனித சமுதாயத்தில் எந்த நோக்கத்திற்காகத் தலைவர்கள் எல்லாம் போராடினார்களோ, அந்தப் போராட்டத்தினுடைய பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறபோதுகூட இன்னும் ஜாதிக்கு ஒரு கட்சி, ஜாதிக்கு ஒரு சங்கம், ஜாதிக்கு ஒரு கொடி, இப்படியே நிலைமை போய்க்கொண்டு இருக்குமேயானால், *(குறுக்கீடு)* நான் கேட்பதெல்லாம் *(குறுக்கீடு)* இல்லை, இப்படி நாம் எதற்காக ஜாதியினுடைய பெயரை தெருக்களின் பெயரிலேகூட வைக்கக் கூடாது என்று சொல்கிறபோது, இன்று நாம் எண்ணக்கூடிய எண்ணங்கள் முழுமையாக ஈடேற...

*பிற்பகல் 12–10*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு சந்தேகம், திரு. ஞானசேகரன் அவர்கள் தங்களுடைய கட்சியின் கூட்டணிக் கட்சியான பா.ம.க.–வைப் பற்றி இங்கே குறிப்பிடுகிறாரா, அல்லது தங்கள் கட்சிக்குள்ளேயே இருக்கின்ற திரு. திண்டிவனம் ராமமூர்த்தி அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறாரா என்று புரியவில்லை. அவர்தான் விளக்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களை நான் சொல்லவில்லை. பொதுவாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, திரு. மணி?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி எல்லா சமுதாயத்திற்குமான, எல்லா ஜாதிகளுக்குமான சமூக நீதியை வலியுறுத்தக்கூடிய ஒரு கட்சி. அதிலும் குறிப்பாக, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மக்களின் உரிமைக்காக சமூக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் பாட்டாளி மக்கள் கட்சியிலிருந்து

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2006 ஜனவரி 23

தாழ்த்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களுக்கு இந்த எம்.எல்.ஏ. பதவியே வேண்டாம் என்று ராஜினாமாச் செய்துவிட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்து இருக்கிறார்களா? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்தான் இந்தக் கட்சியினுடைய பொதுச் செயலாளர். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஞானசேகரன் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. ஞானசேகரன் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அது முறைகேடானது (குறுக்கீடுகள்) அது முறைகேடானது. அது குற்றம் சுமத்துவது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் தாழ்த்தப்பட்டவர் பொதுச் செயலாளராக இருக்கிறார் என்பது சரி, அது சரி, ** என்று சொல்வது எல்லாம் முறைகேடானது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) ஞானசேகரன் பேசியதற்குத்தான் விளக்கம் சொன்னார்கள் முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலிருந்து ஏன் நீக்குகிறீர்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) மணி, உட்காருங்கள். தாங்கள் குறிப்பிட்ட அந்த வாசகம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உட்காருங்கள். திரு. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஏன் நீக்குகிறீர்கள்?...

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 ஜனவரி 23]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோடு இதை முடித்துக்கொண்டு, அடுத்து நான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய அனுமதி இல்லாமல் எழுந்து பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) திரு. மணி, திரு. ஐ. கணேசன் குரல் கொடுத்துப் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, நான் சட்டத்தினுடைய ஆட்சியை நிலைநிறுத்த வேண்டும் என்று சொன்னால், லஞ்ச லாவண்யம் இல்லாத ஒரு சமுதாயத்தை நாம் எல்லா இடத்திலும் படைத்தாக வேண்டும். அது தாலுகா அலுவலகமாக இருந்தாலும் சரி, அல்லது காவல் நிலையமாக இருந்தாலும் சரி, அல்லது Commercial Tax Office, R.T.O. Office என்று இருக்கக்கூடிய இடங்களிலேயும் லஞ்சம் என்ற சொல்லுக்கே இடம் இல்லை என்கிற வரலாற்றை நாம் படைத்தால்தான் நாம் இயற்றுகிற சட்டங்கள் நிச்சயமாகப் பொருள் உள்ள சட்டங்களாக இருக்கும். அதேபோல, சமுதாயம் முன்னேற்றப் பாதையிலே செல்லும். திட்டங்களும் மக்களைப் போய்ச் சென்றடையும். ஆகவே, லஞ்ச லாவண்யம் அற்ற ஒரு சமுதாயத்தைப் படைப்பதற்கு நாம் இன்னும் பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டம்–ஒழுங்கைப் பற்றி ...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்ச லாவண்யம் அற்ற அரசைப் படைக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஞானசேகரன் எங்களுக்கு உபதேசம் செய்கிறார், அறிவுரை கூறுகிறார். லஞ்ச லாவண்யத்தை அகற்ற வேண்டும்; லஞ்ச லாவண்யம் இல்லாத அரசைப் படைக்க வேண்டுமென்ற நம்பிக்கை உள்ளதால்தான் மத்தியில் இருக்கிற காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி Additional Solicitor General–ஐ யாருக்கும் தெரியாமல் கள்ளத்தனமாக லண்டனுக்கு அனுப்பி, அங்கே லண்டன் வங்கிகளில் இருந்த Ottavio Quottrochi–யின் கணக்குகளை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2006 ஜனவரி 23

de-freeze செய்தார்களா, விடுவித்தார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–15*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வரை நான் கேட்டுக்கொள்வதெல்லாம்—இப்போது நீதிமன்றத்திலே அந்த வழக்கு இருக்கிறது. அதைப் பற்றிச் சொல்லவில்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அம்மா அவர்களுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வாசகம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** நீதிமன்றம் முடிவெடுக்கும். (குறுக்கீடுகள்) நீதிமன்றத்திலே இருக்கிறது. பிறகு வரும்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அது நீதிமன்றத்தில் இருக்கிறது என்று அவரே ஏற்றுக்கொண்டிருக்கிறார். நீதிமன்றத்திலே ஒரு வழக்கு இருக்கின்றபோது, நீதிமன்றம், ஒன்று அந்த வழக்கிலே இறுதித் தீர்ப்பு வழங்கியிருக்க வேண்டும், அல்லது அவர் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும். அது நிலுவையிலே இருக்கின்றது. நீதிமன்ற உத்தரவு பெறாமலேயே, அம்மா அவர்கள் கூறியதுபோல, அரசு வழக்கறிஞரை யாருக்கும் தெரியாமல், இன்னும் சொல்லப் போனால், அது பிரதமருடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஒரு துறை. அவருக்கே தெரியாமல் லண்டனுக்குச் சென்று அந்த 40 கோடி ரூபாய் account de-freeze செய்யப்பட்டு, உடனடியாக அந்தப் பணம் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது என்னவென்றால், ஏற்கெனவே சொல்லி வைத்து, நான் இந்தத் தேதியிலே இத்தனை மணிக்கு வருகின்றேன், de-freeze செய்தவுடனே அடுத்த ஐந்தாவது நிமிடம் நீங்கள் வந்து, அந்தப் பணத்தை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்கின்றார்கள். இப்போது உச்ச

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 ஜனவரி 23] [திரு. சி.வி. சண்முகம்]

நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது, அந்த account–ஐ freeze செய்ய வேண்டுமென்று. அதற்கு இவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்ச லாவண்யத்தைப் பற்றி திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே பேசக் கூடாது. குறிப்பாக, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எவரும் அதைப் பற்றிப் பேசுகின்ற தார்மீக உரிமையை இப்போது இழந்துவிட்டார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்ட, இத்தால் நாட்டைச் சேர்ந்த Ottavio Quottrochi அவர்கள்மீது டெல்லி கோர்ட்டில் கிரிமினல் வழக்கு இன்னும் அப்படியே இருக்கிறது. அந்த கிரிமினல் வழக்கிலிருந்து அவர் விடுவிக்கப்படவில்லை. அவர் நிரபராதி என்று தீர்ப்பாகவில்லை. அப்படியிருக்கின்றபோது, ஒருவர்மீது கிரிமினல் வழக்கு இந்த நாட்டில் இருக்கின்றபோது, இந்த நாட்டில் முக்கியமான கிரிமினல் புலனாய்வை மேற்கொள்கின்ற C.B.I. போன்ற ஓர் அமைப்பு, அந்த அமைப்பு விசாரித்துக்கொண்டிருக்கின்ற ஒரு வழக்கில், அந்த C.B.I. முடக்கி வைத்திருந்த Ottavio Quottrochi–யின் வங்கிக் கணக்குகளை முடக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும், அந்தப் பணத்தை அவர் எடுக்க அனுமதிக்க வேண்டும், அவர்மீது எந்த ஆதாரமும் இல்லை என்று மத்திய அரசின் Additional Solicitor General–ஐ லண்டனுக்கு அனுப்பி காங்கிரஸ் ஆட்சி சொல்ல வைத்திருக்கிறதே? அப்படி இருக்கின்றபோது இதற்கு என்ன அர்த்தம்? நீங்களா லஞ்ச லாவண்யத்தைப் பற்றிப் பேசுவது?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய லஞ்ச லாவண்யத்தைப் பற்றிப் பேசுவதற்காகத்தான் நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன், இந்த அவைக்கு வந்திருக்கிறேனேயொழிய, தமிழகத்தினுடைய எந்தெந்தத் துறைகளிலே, எங்கெங்கே லஞ்சம் நடமாடுகிறதோ, அதைப் பற்றி இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்கிற வகையிலே நான் செய்துகொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் ஒரு அருமையான தத்துவத்தைச் சொல்லியிருக்கிறார். பீகாரிலே வெறும் புல்லிலே லொள்ளு செய்து லல்லுவைக் கூட்டணியிலே வைத்துக்கொண்டு நீங்கள் இதைப் பேசலாமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இலவச வேட்டி–சேலை இப்போது 3.28 கோடி பேருக்கு தமிழகத்தில் இந்தப் பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்பட்டிருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இன்னும் ஒரு 5 மணித் துளிகள் பேச எடுத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், திரு. ஐ. கணேசன் பேச வேண்டும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அரசன் அவர்கள் கூறியது மாட்டுத் தீவன ஊழல் என்றே நான் கருதுகின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இன்று தமிழகத்திலே பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 3.28 கோடி பேர்களுக்கு இந்த இலவச வேட்டி–சேலை, தமிழக அரசு அறிவித்திருக்கிறது. நம்முடைய தமிழகத்தினுடைய ஜனத்தொகையை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், கிட்டத்தட்ட 6 ¾ கோடி இருக்கும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6¾ கோடி அல்ல, 6.24 கோடி.

பிற்பகல் 12–20

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய திருத்தத்திற்கு நன்றி. 6.24 கோடியிலேயே இன்று 3.28 கோடி பேருக்கு இந்த இலவச வேட்டி–சேலை கொடுக்கிறோம் என்று சொன்னால் அப்போது வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குத்தான் இலவச வேட்டி–சேலை. 50 சதவிகிதத்திற்கு மேலே உள்ளவர்கள் தமிழகத்திலே இன்று வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பார்கள் என்று சொன்னால் எப்படித் தமிழகம் முன்னணி மாநிலமாக இருக்க முடியும் என்கிற வினாவினை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் இன்று இந்த அளவிற்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடியவர்களுடைய எண்ணிக்கை பெருகிக் கொண்டு போகிறபோது, நாம் பின்னுக்குப் போகிறோமோ என்கிற ஒரு எண்ணம்





நிச்சயமாக நம்முடைய உள்ளத்தில் எழுகிறது. ஆகவே, நான் மாண்புமிகு முதல்வரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், வறுமைக் கோட்டிற்குக் கீழே ஏன் இவ்வளவு பேர்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவைக்குத் தவறான தகவலைச் சொல்லுகிறார். வறுமைக் கோட்டினுடைய எல்லைக்கு, below poverty line என்ற base–ல் அந்த இலவச வேட்டி–சேலைகள் தரப்படவில்லை. அரிசி ரேஷன் கார்டு வைத்திருக்கிற அனைவரும், அவர்களுக்கு 2,000 ரூபாய்க்குக் குறைவான வருமானம் என்று தாங்களாகவே statement கொடுக்கின்ற அனைவருக்கும் அது தரப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** வசதி படைத்தவர்களுக்கும் நீங்கள் கொடுக்கிறீர்களா என்பதையும் நீங்கள் தெரிவிக்க வேண்டும். அப்போது என்ன அர்த்தம்? அதாவது, எப்போதும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குத்தான் இலவச வேட்டி–சேலை என்பது எம்.ஜி.ஆர். காலத்தில் இருந்து நடந்துகொண்டிருக்கிறது. திடீரென்று அதை நீங்கள் பணக்காரர்களுக்கும் கொடுப்போம் என்று சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** 2,000 ரூபாய்க்குக் கீழே வருமானம் வருபவர்களாக உள்ளோம் என்று self-declaration கொடுக்கின்றவர்கள், மாதா மாதம் 2,000 ரூபாய்க்குக் கீழே வருமானம் பெறுபவர்களாக உள்ளோம் என்று self declaration கொடுக்கின்ற அனைவருக்கும் தரப்படுகிறது. உதாரணமாக, ஞானசேகரன் அவர்களைப் போன்ற வசதி படைத்தவர்கள், எங்களுக்கு ரூ. 2,000/–க்குக் கீழேதான் வருமானம் என்று ஒரு வேளை நீங்கள் self declaration கொடுத்தால், அதற்கு என்ன செய்வது?

**திரு. சி. ஞானசேகரன்:** எனக்கு வேண்டாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பேச்சை நிறைவுக் கட்டத்திற்குக் கொண்டு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சட்டம்–ஒழுங்கைப் பற்றிப் பேசுவதற்கு முன்னாலே, காவலர் பற்றி ஒரு கோரிக்கை வைத்து விடுகிறேன். காவலர்கள் 650 பேர் SSI–Special Sub-Inspectors ஆக நியமிக்கப்படுவார்கள் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த

[திரு. சி. ஞானசேகரன்] [2006 ஜனவரி 23

அவையிலே அறிவித்தார்கள். ஏனோ அது பூர்த்தி அடையாமலேயே-G.O. வந்தது, ஆனால் அவர்கள் யாருமே நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். பெண் தலைமைக் காவலர்களுக்கு எந்தவிதமான test-ம் இல்லாமல் அவர்கள் S.I. ஆகிவிடுகிறார்கள். ஆணுக்குப் பெண் சமம் என்று இருப்பதுபோல, நாம் ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்து, பிறகு இப்பொழுது ஆண்களுக்கு மட்டும் test-ஐ வைத்துவிட்ட காரணத்தினால், பல Head Constables, S.I. ஆக முடியாத ஒரு சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், அவர்களுக்கு 10 ஆண்டுகள் இருந்தால்தான் Special Sub-Inspector என்று ஒரு வரையறை வைத்திருக்கிறீர்கள். ஆனால், இப்போது அந்த மாதிரி யாருமே இல்லை, 8 ஆண்டுகள்தான் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே, அந்த 650 பேருக்கும் seniority அடிப்படையில் நீங்கள் promotion கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜவ்வாது மலை—ஏனென்றால், நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் இங்கே அவையிலே சொல்லுகிறபோது, TASMAC-லே நமக்கு ரூ. 7,000 கோடிக்கும் மேலே இப்போது வரவு வந்துகொண்டிருக்கிறது, கள்ளச் சாராயம் இப்போது அறவே ஒழிக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு கருத்தை இந்த அவையிலே கூறியிருக்கிறார்கள். ஆனால், திருவண்ணாமலை, ஜவ்வாது மலையிலே கள்ளத் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு ஒரு கூட்டம் சாராயத்தைக் காய்ச்சி அவர்கள் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்கப் போன ஜமுனாமுத்தூர் போலீஸ் ஸ்டேஷனுடைய தலைமைக் காவலர் மாதேஸ்வரன் அவர்களை, அவர்கள் துப்பாக்கியால் சுட்டு விடு என்று, விரட்டி, விரட்டி அடித்து, அது குறித்து அவர் வழக்கும் கொடுத்து, அது பதிவும் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், அணைக்கட்டு தொகுதி. அந்த மலையிலிருந்து அப்படியே கீழே இறங்கினால் அணைக்கட்டு தொகுதி, எங்கள் மாவட்டத்தில் வந்து விடுகிறது. அணைக்கட்டு தொகுதியில் நாராயணபுரம் என்ற இடத்திலே கள்ளச் சாராயப் பேர்வழிகள், தடுத்துக் கேட்ட ஒரு நபரைச் சுட்டும் தள்ளிவிட்டார்கள் போன கூட்டத் தொடரின்போது. பிறகு, இப்போது இலவம்பாடி தலைவரை அவர்கள் அடித்த காரணத்தினாலே, அவ்வூர்க்காரர்களே 3 பேர்களைப் பிடித்துக் கொண்டு போய் விரிஞ்சிபுரம் காவல் நிலையத்திலே ஒப்படைத்திருக்கிறார்கள். ஆகவே, நான் பணிவன்போடு



2006 ஜனவரி 23] [திரு. சி. ஞானசேகரன்]

கேட்டுக்கொள்வதெல்லாம், அமைதிப் பூங்கா என்று நாம் எவ்வளவுதான் சொல்லிக்கொண்டிருந்தாலும்கூட, இன்னும் சில பேர் கள்ளத் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு, திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் வைத்து சாராயத்தைக் காய்ச்சிக் கொண்டிருக்கிற கூட்டம் இருந்துகொண்டிருக்கிறது. அதேபோல, விஷச் சாராயம் அருந்தி விழுப்புரம் மருத்துவமனையிலே அண்ணாமலை என்ற ஒருவர்கூட இறந்துவிட்டிருக்கிறார். 10 பேர் விழுப்புரம் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, சாராயத்தை இன்னும் நாம் முழுமையாகத் தடுக்கவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டதிலிருந்து, ஒரு பக்கம் கள்ளச் சாராயத்தை முழுவதுமாகக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டு, அதில் நாம் முழுமையான வெற்றியை அடைந்திருக்கின்றோம். நாம் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து மதுபானத்தினுடைய விற்பனையினுடைய அளவு படிப்படியாக உயர்ந்து, ஒரு மாதத்திற்கு 11 இலட்சம் கேஸ் பெட்டிகள் என்ற நிலையிலிருந்து மாறி, தற்போது ஒரு மாதத்திற்கு 20 இலட்சம் கேஸ் பெட்டிகள் விற்பனையாகக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதை நான் ஏற்கெனவே இந்த அவையில் விளக்கிக் கூறியிருக்கின்றேன். அந்த இடைப்பட்ட—11 இலட்சத்திலிருந்து 20 இலட்சமாக—கிட்டத்தட்ட 9 இலட்சம் கேஸ் பெட்டிகள் என்ற அளவிற்கு ஏற்கெனவே கள்ளச் சாராயம் இந்த நாட்டில் உலா வந்துகொண்டிருந்தது. அவை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கையின் காரணமாக முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டு, எல்லாம் முறைப்படியாக இப்போது அரசினுடைய விற்பனைக்கு வந்து, முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருக்கின்றது. மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள் ஏதோ, அங்கொன்றும், இங்கொன்றும் சம்பவம் நடைபெற்றதை இங்கே குறிப்பிட்டுச் சொல்கின்றார்கள். அவற்றையும் நம்முடைய அரசு தடுப்பதற்குரிய நடவடிக்கைகளைக் கண்டிப்பாக எடுக்கும் என்பதனை இந்த அவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை பல பேருக்கு நிறுத்தப்பட்டுவிட்டது. ஏதாவது ஒரு பெற்றோருக்கு, அதாவது வயதானவருக்கு ஆண் குழந்தை இருந்தாலும்கூட, அவர்கள் பெற்றோர்களைக் கவனிக்கவில்லை என்று சொன்னாலும்கூட, அவர்களுக்கு முதியோர் உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே G.O. வந்துவிட்டிருந்தது. அந்த G.O.-வைப் பாராமல் சில பேர் cancel செய்துவிட்டார்கள். எங்களுடைய மாவட்டத்தில் 3,000, 4,000 பேருக்கு முதியோர் உதவித் தொகை cancel செய்யப்பட்டதை இப்போது உடனடியாக நீங்கள் restore செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரேஷன் கார்டைப் பொறுத்த அளவிலே, அதாவது renewal card-க்கு application கொடுத்து, என்னுடைய வேலூர் தொகுதியிலே மட்டும் 6,000 கார்டுகள் வராமலே நின்றுவிட்டன. அதே மாதிரிப் பல பகுதிகளிலே இந்தப் பிரச்சினை இருந்துகொண்டிருக்கின்றது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதைக் கவனித்து உடனடியாக renewal card-களைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ள நிவாரணத்தைப் பொறுத்த அளவிலே, தேவக்கோட்டையிலேகூட கடந்த 5 ஆம் தேதி பார்த்தோம் என்று சொன்னால், தாசில்தார் அலுவலகத்திற்கு முன்னாலே, அதாவது முதலமைச்சர் அவர்கள், வெள்ளம் ஒரு வீட்டைச் சுற்றித் தேங்கியிருந்தால், அந்தப் பகுதியிலே அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலே, அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று ஓர் அறிவிப்பை ஏற்கெனவே கொடுத்தார்கள். அப்படிப் பாதிக்கப்பட்டவர்கள் தேவக்கோட்டை, அதேபோல, பேராவூரணி தொகுதி; எங்களுடைய வேலூரிலேகூட பார்த்தோம் என்று சொன்னால் 365 வீடுகள்; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்கூட வந்திருந்தார். திடீர் நகர், வனவாசம் நகர், இந்திரா நகர் போன்ற பகுதிகளிலே தண்ணீர் ஒரு வாரம் சூழ்ந்துகொண்டு, பாதிக்கப்பட்ட 365 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இப்போது



நிவாரணத்தைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். அதேபோல, அரக்கோணத்தை எடுத்துக்கொண்டீர்கள் என்று சொன்னால், 9,000 பேர் அங்கே பாதிக்கப்பட்டார்கள். ஆனால், குடிசை வீட்டிற்கு மட்டும்தான் அது பொருந்தும் என்று சொல்லி, 144 பேருக்கு மட்டும் அங்கே கொடுத்தார்கள். ஆகவே, முதல்வர் அறிவித்த இந்த வெள்ள நிவாரணம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, தண்ணீரால் அந்த வீடு, அந்தத் தெரு எல்லாம் சூழ்ந்துகொண்டு, மக்கள் வெளியே செல்ல முடியாமல், பாதிப்புக்கு எங்கெங்கெல்லாம் உள்ளானார்களோ அனைவருக்கும் வழங்க வேண்டும். கடலூர் மாவட்டத்திலேகூட நேற்றைக்கு முன் தினம் போராட்டம். இப்படித் தமிழகத்தில் பல மாவட்டங்களில் பல பகுதிகளிலே இருந்துகொண்டிருக்கிறது. இந்த வெள்ள நிவாரணத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தவண்ணம்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசை வீடுகளுக்கு மட்டும் என்று இப்போதும் மாவட்ட ஆட்சித் தலைவர்—பழைய நிபந்தனை அதுதான். அதே நிபந்தனையை இப்போது follow பண்ணுகிறார்கள். ஆனால், முதலமைச்சருடைய விளக்கம் வேறு. ஆகவே, பாதிக்கப்பட்ட அத்தனை பேருக்கும் நீங்கள் உடனடியாக வெள்ள நிவாரணத்தைக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு) முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதேபோல, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் பணிவன்பான வேண்டுகோளை வைத்து, பேச்சை முடித்துவிடுகிறேன். பஸ் கட்டண உயர்வு. அதாவது, நாம் பழைய பஸ் கட்டணத்தையே வைத்திருக்கிறோம் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், முதல்வர் அவர்களும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இங்கே இந்த அவையிலேகூட சொன்னார்கள். ஆனால், திடீரென்று பார்த்தீர்கள் என்றால், எங்களுடைய திருப்பத்தூரிலிருந்து பெங்களூர் செல்லக்கூடிய தமிழ்நாடு போக்குவரத்துக் கழகப் பேருந்தில் 50 ரூபாய் டிக்கெட்டை 60 ரூபாய் என்று அடித்து, இப்போது 60 ரூபாய், திடீரென்று 10 ரூபாயை உயர்த்தியிருக்கிறார்கள். அது ஏனென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்...



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22-7-006
சென்னை-600 008
நூலகம்

[2006 ஜனவரி 23

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எந்த நிலையிலும், எந்த ஒரு சூழ்நிலையிலும் ஒரு பைசாவைக்கூட பேருந்துக் கட்டணத்தை ஏற்றவேயில்லை. ஆனால், அப்படி ஏதாவது தவறு நடந்திருக்குமானால், குறிப்பிட்ட இடங்களில் ஏதாவது தவறு நடந்திருக்குமானால்—குறிப்பிட்ட நிகழ்ச்சி, தவறு ஏதாவது நடந்திருக்கக் கூடும்—அப்படியிருந்தால், எங்களுடைய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 'சத்தம் இல்லாத கட்டண உயர்வு; அரசு பஸ்ஸில்தான் இந்தக் கூத்து' என்று டிக்கெட்டோடு போட்டு, ஏற்கெனவே பயணிகளிடம் விளம்பரம் எல்லாம் கொடுத்து...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. சி. ஞானசேகரன்:** அதாவது 10 ரூபாய். தினமலர் பத்திரிகையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இருங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடு) இல்லை, ஞானசேகரன். நீங்கள் அது பற்றி விசாரித்து, அது உண்மையாக இருந்தால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்.

**திரு. சி. ஞானசேகரன்:** அரசின் கவனத்திற்குத்தான் இப்போது கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நாங்கள் கட்டணத்தை ஏற்றவேயில்லை. மாறாக, அங்கு ஏதாவது தவறுகள் நடந்திருக்குமானால், அரசுக்குச் சுட்டிக்காட்டினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. திரு. ஞானசேகரன், பேச்சை முடித்துவிடுங்கள். அடுத்து, திரு. ஐ. கணேசன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரம். என்னுடைய எம்.எல்.ஏ. நிதியிலிருந்து சுகாதார வளாகத்தை வேலூர் நகரத்திற்கும், அதேபோல் தொகுதியிலே பல இடங்களிலேயும் கட்டியிருக்கிறோம். வேலூர் நகரத்திற்குள் மட்டும் 5 சுகாதார வளாகங்கள் அப்படியே மூடிக் கிடக்கின்றன. நாம் கட்டி முடித்திருக்கிறோம். கட்டி முடித்திருந்தாலும்கூட, அவற்றை நாம் உள்ளாட்சிக்கு ஒப்படைக்கிறபோது, அந்த உள்ளாட்சிகள் அதிலே அக்கறை செலுத்தி, அவற்றைத் திறந்து வைக்காமல் மூடி வைத்திருப்பதால், நாம் கொண்டு வந்திருக்கக்கூடிய அந்தத் திட்டங்கள் நிச்சயமாகப் பலனை மக்களுக்குத் தரக்கூடிய ஒன்றாக இல்லை. ஆகவே, நான் அந்த சம்பந்தப்பட்ட துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்படிப்பட்ட—அதாவது வேலூர் நகராட்சியினுடைய ஆணையர், அப்படியே மூடியே வைத்திருக்கிறார்கள். ஆகவே, உங்களுடைய திட்டம் நிறைவேற வேண்டும் என்று சொன்னால், எம்.எல்.ஏ. நிதியிலிருந்து கட்டப்பட்டு, அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கக்கூடிய சுகாதார வளாகங்களை எல்லாம் மீண்டும் அவர்கள் திறப்பதற்கான நடவடிக்கையை நீங்கள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல— தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிராமப்புறங்களிலும் சுகாதார வளாகங்கள் தேவை, அவை முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு 12,618 கிராம ஊராட்சிகளிலே 13,064 சுகாதார வளாகங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு, அவை முறையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோல்தான், நகரப் பகுதிகளிலும் ஆங்காங்கே கட்டிக் கொடுக்கப்பட்ட சுகாதார வளாகங்கள், முறையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல,

[திரு. கே.பி. அன்பழகன்] [2006 ஜனவரி 23

அங்கே ஏதேனும் பயன்படுத்தப்படாமல் இருந்தால், அதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசானது உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதைப் பயன்படுத்துவதற்குண்டான வாய்ப்பினை உருவாக்கித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

***திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12-வது சட்டமன்றக் கடைசி நிதிநிலை அறிக்கையிலே என்னைப் பேச அழைத்த தங்களுக்கும், எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், நாங்கள் சின்னவர் என்று அன்புடன் அழைக்கும் மாண்புமிகு அன்புமணி அவர்களுக்கும், என் பாசமிகு அருமை நண்பர் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும், அதேபோல... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி இல்லை, திரு. கோ.க. மணி.

**திரு. ஐ. கணேசன்:** திரு. கோ.க. மணி அவர்களுக்கும், அதேபோல என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அதேபோல தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய அன்பு கனிந்த மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, இந்த 12-வது சட்டமன்றக் கடைசித் தொடரிலே, இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு முன்னால், பத்திரிகையாளர்கள், அரசு அதிகாரிகள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

2006-2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட அறிக்கையை இந்த அவையிலே நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே புதிய தொழிற்சாலைகளோ, தடுப்பணைகளோ, நாட்டிற்கு வளம் சேர்க்கும் நல்ல திட்டங்களோ இல்லை. 54 இலட்சம் இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பு தடைச் சட்டம் என்ற ஒரு கறுப்புச் சட்டத்தை இந்த அரசு 2001-வது ஆண்டில் கொண்டு வந்து, இந்தக் கடைசி நேரத்திலே இந்தச் சட்டத்தை நீக்கியுள்ளது. ஏற்கெனவே முதுமை அடைந்து ஓய்வு பெற்றிருப்போர், வேலையில் இருக்கும் காலத்திலே இறந்தவர்கள் ஆகியோரைச் சேர்த்து அவர்களுடைய எண்ணிக்கை சுமார் 2 இலட்சத்தைத் தாண்டும். அவர்களுக்குப் பதிலாக, இந்த நான்கு ஆண்டுகளாக வேலை அளிப்பதிலே அக்கறை காட்டாத அரசு, இப்போது



2006 ஜனவரி 23] [திரு. ஐ. கணேசன்]

இந்தக் கடைசி நேரத்திலே, இந்தக் கறுப்புச் சட்டத்தைத் திரும்பப் பெற்றிருக்கிறது. இதற்காக எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்கள் பல முறை போராடியிருக்கிறார்கள் என்பது இந்த அவைக்குத் தெரியும்.

உலக உத்தமன் மகாத்மா காந்தி அவர்கள் சொன்ன பொன்மொழி ஒன்று எனது நினைவுக்கு வருகிறது. "தனது அம்மா புகழையே பாடிக் கொண்டிருக்கும் எந்த அரசாங்கமும், அரசாங்கமாக இருக்கத் தகுதியுடையது அல்ல. உண்மையான அரசாங்கம் மக்களுக்காக உழைக்க வேண்டுமே தவிர, ஆசைக்காகவோ, அதிகாரத்திற்காகவோ ஒரு அரசாங்கம் இருக்கக் கூடாது" என்று மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். "பசித்திருப்பவன் வயிற்றுக்குக் காய்ந்த ஒரு துண்டு ரொட்டி போதும்" என்று மேலை நாட்டு அறிஞர் சொன்னார். அதுபோல அரசு ஊழியர்களுக்கு, அதுவும், மத்திய அரசு வழங்கியதுபோல ஒரு சலுகையை மட்டும் வழங்கியிருக்கிறது. அதோடு, வரக்கூடிய பொதுத் தேர்தலை மனதிலே வைத்துக்கொண்டு, சுமார் 1,200 கோடி ரூபாய்க்கு அரசு இந்த நிதிநிலை அறிக்கையிலே அரசு ஊழியர்களுக்கு வழங்கியிருக்கிறது. இது ஒரு தேர்தல் ஆண்டு என்பதனை நாம் அனைவரும் அறிவோம். இந்த அரசுக்கு உண்மையாகவே அரசு ஊழியர்கள்மீது அக்கறையிருந்தால், அவர்களிடத்திலிருந்து பறித்துக்கொண்ட சலுகைகளை மீண்டும் வழங்கியிருக்க வேண்டும். ஆனால், அவர்களிடமிருந்து பிடுங்கிய சலுகைகள்—ஒன்று முழு ஓய்வூதிய தகுதிபெறு பணிக்காலம்—நிதி அமைச்சர் அவர்கள் பார்க்கவும்—முழு ஓய்வூதிய தகுதிபெறு பணிக்காலம் 30 ஆண்டுகளாக இருந்ததை 33 ஆண்டுகளாக ஆக்கியது, அதை மீண்டும் இந்த அரசு 30 ஆண்டுகளாகக் கொண்டுவர வேண்டும்.

பிற்பகல் 12-35

ஈட்டிய விடுப்பு சரண் 15 நாட்களாக இருந்ததை, தற்போது இந்த அரசு 7 நாட்களாகக் குறைத்தது. அது மீண்டும் 15 நாட்களாக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

ஓய்வூதியம் தொகுப்புப் பெறுதல்—முன்பு 40 சதவிகிதமாக இருந்ததை இந்த அரசு 33.3 சதவிகிதமாகக் குறைத்துள்ளது. மீண்டும் அரசு ஊழியர்களுக்கு 40 சதவிகிதம் வழங்க வேண்டும்.

அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் கணக்கிடும்போது, கடைசி மாதத்தில் பெற்ற ஊதியத்தின் அடிப்படையில்தான் கணக்கிட்டு முன்பு வழங்குவார்கள். அதேபோல, இந்த அரசும் அரசு ஊழியர்கள் பெற்ற கடைசி மாதச் சம்பளத்தின் அடிப்படையிலே ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

அரசு ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பு தற்சமயம் 240 நாட்கள் வரை கணக்கில் சேமிக்கலாம் என்பதனை மாற்றி, முன்பிருந்ததைப்போல 300 நாட்கள் வரை சேமிக்கலாம் என்ற ஆணையை இந்த அரசு வழங்க வேண்டும்.

அதேபோல, அரசு ஊழியர்களுக்கு முந்தைய அரசால் வழங்கப்பட்ட பொங்கல் போனஸை இந்த அரசாங்கம் நிறுத்தியிருக்கிறது. பொங்கல் போனஸையும் உடனடியாக அரசு ஊழியர்களுக்கு வழங்க வேண்டும்.

தற்பொழுது தொகுப்பு ஊதியத்திலே பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களுக்கு ஊதிய விகிதாச்சார அடிப்படையிலே ஊதியம் வழங்கப்பட வேண்டும். அரசு மேல்நிலைப் பள்ளிகளிலே தற்போது பணிபுரிந்து வரும் கணினி ஆசிரியர்களுக்கு முறையான பணி நியமன ஆணை அரசால் வழங்கப்பட வேண்டும். அதைப்போல... (குறுக்கீடு) இதெல்லாம் ஒன்றும் அதிகத் தொகை வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல சாலைப் பணியாளர்கள். தமிழகத்திலே 10,000-க்கும் மேற்பட்ட சாலைப் பணியாளர்களை வேலை நீக்கம் செய்தது இந்த அரசு. அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டும் என்று இந்தச் சட்டமன்றத்தில் பா.ம.க. உறுப்பினர்கள் முதற்கொண்டு, அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வேண்டிக் கேட்டுக்கொண்டோம். உயர் நீதிமன்றத்தில், சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுங்கள் என்று சொல்லியும், சாலைப் பணியாளர்கள் சுமார் 72 பேர் தங்கள் இன்னுயிரை மாய்த்தும், இந்த அரசு மனம் இரங்காமல் இருப்பது ஏன் என்றுதான் எனக்குப் புரியவில்லை. ஏனென்றால், இதை எண்ணிப் பார்க்கும்போது என்னுடைய நினைவிற்கு வருவது, வேகாத மண்ணைக் கொண்டு குயவன் சட்டியை, பானையை, அழகிய உருவங்களைச் செய்கிறான். ஒரு தரம் சுடப்பட்ட மண்பாண்டம் உடைந்துவிட்டால், அதை வைத்து அந்தக் குயவன் மீண்டும் அழகான உருவங்களைச் செய்ய முடியாது. அரசு ஊழியர்களிடமிருந்து நீங்கள் பிடுங்கிய சலுகைகளை அளித்தும், சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை அளித்தும், அழகிய பொம்மைகளை உடையாமல்



பாதுகாத்துக்கொள்ள வேண்டும்—அழகிய பொம்மைகளை உடையாமல் இந்த அரசு பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

விவசாயிகள். தமிழ்நாடு ஒரு விவசாய நாடு. சுமார் 70 மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். மக்கள் வாழும்... (குறுக்கீடு) (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஒரு விவசாய நாடு. சுமார் 70 சதவிகித மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். மக்கள் வாழ, உணவு உற்பத்தி செய்து கொடுப்பவர்கள் விவசாயிகள். ஆனால், அவர்களோ வறுமையிலும், கடனிலும் தத்தளித்துத் தங்களை மாய்த்துக்கொள்ளும் அவலத்துக்கு, பரிதாப நிலைக்குச் செல்வதற்குக் காரணம், அவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்குக் கட்டுப்படியாகும் விலை கிடைக்காததேயாகும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்குக் கட்டுப்படியாகும் விலை கிடைக்காததேயாகும். விலையை எப்படித் தருவது, எவ்வாறு விவசாயிகளுக்கு நேரடியாகச் சென்றடையச் செய்வது என்பதைப் பற்றி அரசு தீவிரமாக ஆலோசனை செய்ய வேண்டும்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் வறுமைச் சாவு என்பது தமிழகத்தில் எதுவுமே இதுகாறும் ஏற்படவில்லை, இனியும் ஏற்படாது.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, விவசாயிகள் மாய்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்கின்ற தவறான தகவலை இந்த மன்றத்திலே பதிய வைத்திருக்கின்றார். நான் உறுதியாகக் கோடிட்டுக் காட்ட விரும்புவது, தமிழகத்தில் எந்த ஒரு நிலையிலும் அதுபோன்ற நிலை இல்லை என்பதை நான் மகிழ்ச்சியோடு—மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அதுபோன்ற நிலையில்லை என்பதை நான் மகிழ்ச்சியோடு— தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்றை உங்களுக்கு நான் பணிவோடு நினைவுபடுத்த விரும்புவதெல்லாம், இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த ஒரு மாநிலத்திலும் வேளாண் பெருமக்களுக்காக இந்த நான்கரை ஆண்டு காலத்திலே வழங்கப்பட்ட சலுகைகளைப் போன்று, இந்தியாவிலே

[திரு. கே. பாண்டுரங்கன்] [2006 ஜனவரி 23

எந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரும் வழங்கவில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும்கூட, வேளாண் பெருமக்களால் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே பெறப்பட்ட கடன்களுக்குக் கூட்டு வட்டியாக, அபராத வட்டியாக 2001 ஆம் ஆண்டு 310 கோடியே 51 இலட்சம் ரூபாயைத் தள்ளுபடி செய்த வரலாற்றை நான் உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தொடர்ந்து வறட்சி வந்தபோது, 2001 ஆம் ஆண்டு 61 கோடியே 5 இலட்சம் ரூபாய் வட்டியைத் தள்ளுபடி செய்ததையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 2003 ஆம் ஆண்டு தொடர் வறட்சியை முன்னிட்டு 62 கோடி ரூபாய் வட்டியைத் தள்ளுபடி செய்த வரலாற்றையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமின்றி, வறட்சியாலே தொடர்ந்து 3 ஆண்டுகள் பாதிக்கப்பட்டபோது, வேளாண் பெருமக்களுக்கும், விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கும் 30 கிலோ அரிசி இலவசமாக வழங்குவதற்காக ரூ.109 கோடியே 45 இலட்சம் வழங்கிய அன்னமிட்ட தாய்தான் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதையும், தொடர்ந்து மூன்றாண்டு காலமாக வறட்சி இருந்தபோதிலும்கூட, கர்நாடக அரசு காவிரியிலே நமக்குத் தண்ணீர் திறந்துவிட மறுத்துவிட்டபோதிலும்கூட, தமிழகத்தினுடைய கழனிகள் எல்லாம் காய்ந்துவிட்டபோதிலும்கூட, தமிழகத்திலே வாழ்கின்ற ஆறரைக் கோடி மக்களுடைய வயிறு காயாமல் பார்த்துக்கொண்ட உத்தமத் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதையும் நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு 2,598 கோடி ரூபாய் நீண்ட காலக் கடனை குறுகிய காலக் கடனாக மாற்றி, இரண்டாண்டுகள் கட்ட வேண்டாம் என்றும், மூன்றாண்டு காலத்திற்குத் தவணை முறையிலே, சம தவணையிலே கட்டப்பட வேண்டுமென்ற உன்னத வாய்ப்பை உருவாக்கித் தந்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதையும், 22 மாவட்டங்களிலே பெருமழை பெய்ததன் காரணமாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—மத்திய அரசு கொடுக்க மறுத்தபோதும்கூட, தன்னுடைய சொந்த நிதியைப் பயன்படுத்தி சுமார் 360 கோடி ரூபாயை, பெருமழையாலே பாதிக்கப்பட்ட வேளாண் பெருமக்களுக்காக வழங்கிய தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதையும், விவசாயிகள் உற்பத்தி



2006 ஜனவரி 23] [திரு. கே. பாண்டுரங்கன்]

செய்கின்ற பொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக, (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் பேசுகிறேன், உட்காருங்கள் தலைவரே, நான் பேசி முடிக்கும்வரை கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல் முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேளாண்மைத் துறை அமைச்சர், பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற நீங்கள், எந்த அளவுக்கு நடுங்கிப் போய் இருக்கின்றீர்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள் தலைவரே, சொன்ன புள்ளிவிவரங்களில் ஏதேனும் தவறு இருந்தால் சொல்லுங்கள். நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். சொல்லுகின்ற புள்ளிவிவரங்களிலே...(குறுக்கீடு)

**திரு. தி. வேல் முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** தவறு இருந்தால், நீங்கள் சுட்டிக்காட்டுங்கள். அந்தத் தவறுக்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல் முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். நான் அவரைப் பேச அனுமதிக்கவில்லை.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** நான் சொல்வதைக் கேளுங்கள் அண்ணே! நான் சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள் நீங்கள். நான் சொல்வதற்கு விளக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** அதோடு மட்டுமல்ல. வேளாண் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்குக் கட்டுப்படியான

விலை கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வந்து, தமிழகத்திலே இருக்கின்ற 385 வட்டாரங்களிலும் வேளாண் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டுமென்பதற்காகப் புதிய தொழிற்சாலைகளை உருவாக்கி, பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கிக் கொண்டிருப்பவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டம் மட்டுமல்ல, உலகமே வியக்கத்தக்க அளவுக்குப் பாராட்டுகின்ற உழவர் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்து, இன்றைக்கு 51 இலட்சம் சிறு, குறு விவசாயிகளுக்காக, 86 இலட்சம் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்காக, ஒட்டுமொத்தமாக 1 கோடியே 37 இலட்சம் குடும்பங்களுக்கு இன்றைக்கு சமூகப் பொருளாதார அந்தஸ்தைக் கொடுத்திருப்பவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு, பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், ஐந்து மணித் துளிகளிலே பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) வேளாண்மைத் துறை அமைச்சரை நீங்கள்தானே கிளப்பிவிட்டீர்கள் ? (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் ஐந்து நிமிடத்திற்கு முன்னால்தான் சொன்னார், தமிழகத்தினுடைய மொத்த ஜனத் தொகை 6.24 கோடி என்று. ஆனால், அமைச்சர் அவர்கள் அதையே தப்பாகச் சொல்லிவிட்டு, தப்பு இருந்தால்...

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (குறுக்கீடு) ஒரு நிமிடம், எங்கள் அம்மா அவர்கள் துல்லியமாகக் கணக்கைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள், சுமார்



என்றுதான் சொல்லியிருக்கின்றோம். எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துல்லியமாகக் கணக்கிட்டுச் சொன்னார்கள். நாங்கள் சுமார் என்றுதான் சொல்லியிருக்கின்றோம். மீண்டும் நான் சொல்கின்றேன். எங்கள் அம்மா அவர்கள் சொன்ன புள்ளிவிவரத்தையே எடுத்துக்கொள்ளுங்கள் என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே விவசாய அமைச்சராக இருந்தீர்கள். கிட்டத்தட்ட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்போது நீங்கள் எங்களுடன் இருந்தீர்கள். (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** ஆனால், விவசாயத்திற்கான விதை நெல்லைக் கொள்முதல் செய்யும்போது, விவசாயிகள்மூலம் உற்பத்தி செய்ததைக் கொள்முதல் செய்யும்போது, அந்த விதை நெல்லுக்குக் கூடுதலாக விலை கொடுத்து வாங்குவது, காலங்காலமாக உள்ள வழக்கம். சென்ற ஆண்டு, ஒரு கிலோ விதை நெல்—குறுவை—10 ரூபாய் 35 பைசாவுக்கு அமைச்சர் அவர்களுடைய இலாகா வாங்கியது. ஆனால், இந்த ஆண்டு எவ்வளவுக்கு வாங்கியது என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கணேசன் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு உங்களை அனுமதிக்கிறேன். நீங்கள் விளக்கம் சொல்லுங்கள். திரு. கணேசன், ஐந்து நிமிடங்களிலே பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** முடித்துவிடுகிறேன். ஆகையாலே, அந்த விதை நெல்லுக்கெல்லாம் விலையில்லாமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். விவசாயிகள் உற்பத்தி செய்ததை வாங்க ஆளில்லை, அல்லது இடைத்தரகர்கள்மூலம் குறைந்த விலைக்கு விற்பனை செய்யக்கூடிய நிலை விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. உற்பத்தி செய்து 'அழிந்து போ' என்ற நிலை உருவாகாமல், இந்த நாட்டைக் காக்கக்கூடிய விவசாயி, அவன் தலை நிமிர்ந்து நிற்பதற்காக இந்த அரசாங்கம் ஒரு வழியினைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. ஐ. கணேசன்] [2006 ஜனவரி 23

என்னுடைய எடப்பாடி தொகுதியிலே—நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரியும்—ஒரு சில முக்கியமான கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். எடப்பாடி தொகுதியில் உள்ள வேம்பனேரியிலிருந்து தாராபுரம் வழியாகச் செல்லும் சரபங்கா நதியின் குறுக்கே, அந்த இடத்திலே ஒரு சிறிய பாலம். வேம்பனேரியிலே ஆரம்பப் பள்ளியும், தாராபுரத்திலே உயர்நிலைப் பள்ளியும் இருக்கிறது. நடுவே சரபங்கா நதி ஓடுகிறது. மழைக் காலத்திலே, அங்குள்ள குழந்தைகள், 10 கிலோ மீட்டர் வரை சுற்றிச் செல்ல வேண்டிய அவல நிலை இருக்கிறது. அதற்காக ஒரு சிறிய தரைப் பாலம் கட்ட வேண்டும். அதேபோல, எடப்பாடி நகரிலே உள்ள வெள்ளாண்டிவலசு, கவுண்டன்பட்டி இடையிலே சரபங்கா நதி செல்கிறது. அதன் குறுக்கே ஒரு பாலம் கட்டினால், அங்கே இருக்கக்கூடிய விசைத்தறித் தொழிலாளர்கள் மிகவும் பயனடைவார்கள். அதேபோல, எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்திலுள்ள திருமாலூரிலிருந்து வெள்ளாளபுரம்–பனங்குடி வரை செல்லும் சாலை அடியோடு நாசமாகிவிட்டது. பஞ்சாயத்து சாலையில், pipe line-களும், over-tank-களும், மின் கம்பங்களும் உள்ளதால், அந்தப் பாதையைப் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. அதற்குப் பதிலாக, சேலம் இரும்பாலைக்குத் தானமாக ஒப்படைத்த சாலையை, 20 ஆண்டு காலமாக இரும்பாலை பராமரிக்கப்படாததால், அந்தப் பகுதியிலிருந்து, பூலாம்பட்டியிலிருந்து கிட்டத்தட்ட வெள்ளாளபுரம் வரை, ஒரு இலட்சம் மக்கள் அவதியுறுகிறார்கள். இதை வேடிக்கைக்காகவோ, விளையாட்டுக்காகவோ சொல்லவில்லை. அந்த மக்களுடைய குமுறலை இங்கு எடுத்து வைக்கிறேன். அந்தப் பாதை அடியோடு நாசமாகிவிட்டது. நம்முடைய மதிப்பீட்டுக் குழுகூட, அந்த இடத்தைச் சென்று பார்த்து, உடனடியாக சாலை அமைக்க வேண்டுமென்று பரிந்துரை செய்தும் இதுவரை அந்தச் சாலை போடப்படவில்லை. இந்த அரசாங்கம் இனிமேலாவது—அரசு அதிகாரிகள் மதிப்பீடு எல்லாம் செய்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்—உடனடியாக அந்தப் பாதையைப் போட்டுக் கொடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12-50*

அதேபோல, எடப்பாடியிலிருந்து ஜலகண்டாபுரம் செல்லும் பாதை. ஓமலூர் இரயில்வே கேட் மேம்பாலம் கட்டுவதனால் அந்தப் பாதை வழியாக வரக்கூடிய அவ்வளவு வாகனங்களும் எடப்பாடி வழியாக வருவதனால், எடப்பாடி–ஜலகண்டாபுரம் சாலை முழுவதும் மோசமாகிவிட்டது. இரு சக்கர வாகனங்களிலோ, சைக்கிளிலோ, நடந்தோ



2006 ஜனவரி 23] [திரு. ஐ. கணேசன்]

எப்படியும் செல்ல முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சுற்றுக் கிராமங்கள் அனைத்திலும் அந்தப் போக்குவரத்தைச் சேர்ந்த அனைத்துச் சாலைகளும் வீணாகப் போய்விட்டன. பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் நிதி அமைச்சர் அவர்கள் மனமுவந்து அந்தச் சாலைகளையெல்லாம் செப்பனிட்டுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

எடப்பாடியிலே வெள்ளாளபுரம் என்ற பகுதியிலே, 140 ஏக்கர் அளவில் பெரிய ஏரி இருக்கிறது. அதன்மூலமாக 8 பெரிய ஏரிகளுக்குத் தண்ணீர் நிரம்ப வேண்டும். அது குறித்து நிதி அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். (வரைபடம் ஒன்றை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் அவர் கொடுத்தார்) அந்த ஏரியிலிருந்து இரண்டு மதகுகள் வழியாக வரக்கூடிய தண்ணீர், மதகுகள் சரியாக இல்லாததன் காரணமாக, இவ்வளவு பெரிய மழையிலும் 8 ஏரிகளும் நிரம்பவில்லை. அந்த ஏரியினுடைய வழித்தடங்கள் அத்தனையும் முட்புதர்களால் அடைக்கப்பட்டுவிட்டன. ஆகையினால், அந்த ஏரியிலே தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் அத்தனை பேரும் கஷ்டப்படுகிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு... (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை, ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கின்றேன். "ஆட்சி எனும் இந்த வைர மோதிரத்திற்குச் சொந்தக்காரர்கள் நாம் அல்ல, மக்கள்தான் இதற்குச் சொந்தக்காரர்கள். நாம் மூன்று பாடங்களைப் பெற்றாக வேண்டும்; (1) மக்கள் தந்தது இந்த ஆட்சிப் பொறுப்பு என்பது. (2) ஆட்சிப் பொறுப்பு கிடைத்தவுடன், அடக்கத்தைக் கைவிட்டுவிட்டு, ஆணவப் போக்கை மேற்கொண்டால், இந்த ஆட்சி என்ற வைர மோதிரம் பறிக்கப்பட்டுவிடும். பகைமை...(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பொன்மொழியோடு முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** முடித்துக்கொள்கிறேன். பகைமை, குரோதம், கட்சி விருப்பு–வெறுப்பு இல்லாத பண்பு அரசாள்பவர்களுக்கு இருக்க வேண்டும். ஆனால், இன்று அரசாள்பவர்களுக்கு ஆணவப் போக்கு

ஒன்றே–எதற்கெடுத்தாலும், நான், நான் என்ற போக்கினால், இந்த ஆட்சியினுடைய வைர மோதிரம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அறிஞர் அண்ணா அவர்கள் அப்போதிருந்த அரசைப் பற்றிச் சொன்னது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். செல்வி க. பாலபாரதி. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) அதோடு முடியுங்கள். (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு) அறிஞர் அண்ணா அவர்கள் அப்போதிருந்த அரசைப் பற்றிச் சொன்னது. (குறுக்கீடு) உட்காருங்கள் கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** அண்ணா அவர்களுடைய வார்த்தைகள்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உங்களுடைய பேச்சு நிறைவுற்றது. (குறுக்கீடு) உங்களுடைய பேச்சு நிறைவுற்றது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேளாண் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதை நான் நன்கு அறிவேன். அந்த வகையிலே அவருக்கு நான் மீண்டும் நினைவுபடுத்துவது, விதை நெல்களைப் பொறுத்தமட்டிலே பலவிதமான விதை நெல்கள் இருக்கின்றன. அந்தப் பலவிதமான விதை நெல்களுக்கு, அவற்றினுடைய தரத்திற்கு ஏற்ப வேளாண்மைத் துறை அவற்றிற்குரிய விலையைக் கொடுக்கும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொண்டு, வேளாண் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காத காரணத்தினாலே அந்தப் பொருட்கள் வீணாகிவிடுகின்றன என்ற ஒரு தகவலை உறுப்பினர் இங்கே சொல்லி அமர்ந்திருக்கின்றார். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புவது எல்லாம், இன்றைக்கு வேளாண் விற்பனைக் குழுக்கள்மூலமாக வேளாண் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்கு, அவர்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காதபட்சத்திலே அந்த விளைபொருட்களுக்குரிய மொத்த மதிப்பீட்டிலே ஏறக்குறைய 75 சதவிகிதம், இன்றைக்கு, 15 நாட்களுக்கு வட்டி இல்லாமலும், 15 நாட்களுக்கு மேலாக 6 மாத காலம் வரையில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகக் குறைந்த வட்டி விகிதத்திலே, 8 சதவிகிதம் என்கின்ற வட்டி விகிதத்திலே உடனடியாக அவர்களுக்குப்



பணம் கொடுப்பதோடு மட்டுமல்ல, அவர்கள் அந்தப் பொருட்களை இருப்பு வைப்பதற்குக் கிடங்கும் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி. (குறுக்கீடு) இல்லை, இல்லை. முடித்துவிட்டீர்கள். நீங்கள் ஏற்கெனவே முடித்தாகிவிட்டது. கடைசி வாக்கியத்தை முடியுங்கள். வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) திரு. கணேசன், இங்கே பார்த்துப் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** உங்களைப் பார்த்துத்தான் பேசுகிறேன். குறுக்கே வந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அங்கே ஏன் விவகாரம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்? இங்கே பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** சென்ற ஆண்டு அளித்த விலையைவிட இந்த ஆண்டு அரசு ஒரு ரூபாய் குறைத்துக் கொடுக்கிறது அதே நெல்லுக்கு. 43 என்ற ரகத்திற்கு சென்ற ஆண்டு கொடுத்த அதே விலையிலே ஒரு ரூபாய்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடியுங்கள். செல்வி பாலபாரதி. (குறுக்கீடு), செல்வி பாலபாரதி. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. முடித்துவிட்டீர்கள், முடித்துவிட்டீர்கள், உட்காருங்கள், உட்காருங்கள், செல்வி பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசி முடித்தாகிவிட்டது.

**செல்வி க. பாலபாரதி:** 2006-2007–க்கான இடைக்கால வரவு-செலவு அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தொடர்ந்து 3 ஆண்டுகள் கடுமையான அயற்சியூட்டும் வறட்சி நிலவியது. 2004–ல் சுனாமி பேரழிவுத் தாக்குதல் வந்தது. 2005–ல் புயல், மழை, பெருவெள்ளம் வந்தன. இத்தகைய இயற்கைச் சீற்றங்கள் தமிழகத்து விவசாயிகளை நிலை குலைய வைத்துள்ளன. அவர்களது வாழ்க்கை மேலும் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறது. இத்தகைய இயற்கைச் சீற்றங்கள் மட்டுமல்லாது, உலகமய, தாராளமயக்

கொள்கையும் கிராமப்புற மக்களினுடைய வாழ்க்கையைச் சின்னாபின்னம் ஆக்கி வருகிறது. கடந்த கால மத்திய B.J.P. அரசும், தற்போதைய மத்திய அரசாங்கமும் வேளாண்மைப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதி வழங்கின. மத்திய பட்ஜெட்டில் வேளாண்மைக்குக் குறைந்த நிதி ஒதுக்கீடு செய்திருப்பது, உரம், பூச்சி மருந்துக்கான மானியம் குறைக்கப்பட்டது, காப்புரிமைச் சட்டம், விதைகள் சட்டம், வேளாண் பொருட்கள் சந்தைச் சட்டம், ஹாங்காங்கில் நடைபெற்ற உலக வர்த்தக மாநாட்டில் இந்திய விவசாயிகள் நலன் பாதிக்கிற ஒப்பந்தங்கள். இவை யாவும் தமிழகத்து விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் கடுமையாகப் பாதித்து வருகின்றன, உங்களது சாதனைகளுக்கு மத்தியில். வாழ்க்கையின் விளிம்பில் நின்று போராடிக்கொண்டிருக்கும் தமிழகத்து விவசாயிகளின் வேதனைகளை வார்த்தைகளால் வடித்தெடுக்க இயலாது. இந்தியாவிலேயே தமிழகம்தான் நகர்ப்புற மக்கள்தொகை அதிகரித்த மாநிலமாக இருக்கிறது என்று புள்ளிவிவரம் கூறிக்கொண்டிருக்கிறது. தமிழகத்தினுடைய 434 நகர்ப்புறங்களில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை, நம்முடைய மாநிலத்திலேதான் இருக்கிறது. இந்தியாவின் மற்ற நகரங்களிலே 27.76 சதம்தான் மக்கள்தொகை இருக்கிறது. தமிழகத்தில் அது 43.86 சதமாக உயர்ந்து இருப்பதற்கான காரணம் என்ன என்பதனைக் கனிவோடு பரிசீலிக்க நான் கேட்டுக்கொள்கின்றேன். விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை இல்லை; கடுமையான விலை வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. காப்பி, தேயிலை, முந்திரி, ஏலக்காய் போன்ற பணப் பயிர்களினுடைய விலை கடுமையாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. மிளகாய், தக்காளி, கடலை, கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற பொருட்களுக்கும் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. அரசு கொள்முதல் நிலையங்களை உருவாக்கவில்லை. **

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, ம்ாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இதுபோன்ற ஒரு குற்றச்சாட்டு, **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) தாங்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ஆதாரம் இல்லாமல் இதுபோன்ற குற்றச்சாட்டுக்களைச் சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. ** ஒரு குற்றச்சாட்டைச் சொல்வதற்கு முன்னாலே ஆதாரம் வேண்டும். ஆதாரம் இல்லாமல் இப்படிக் குற்றச்சாட்டைச் சொல்லக் கூடாது. தாங்கள் குறிப்பிட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்த point-க்குப் போங்கள். (குறுக்கீடுகள்) செல்வி பாலபாரதி, அடுத்த point-க்குப் போங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற மக்கள் நகரத்தை நோக்கிச் செல்வதற்கான 3-வது காரணம், நிலமற்ற கூலித் தொழிலாளிகள், 80 சதமான மக்கள் கிராமங்களிலே இருக்கிறார்கள். **

பிற்பகல் 1-00

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பல கருத்துகளைச் சொன்னார்கள்; காலையில்தான் பெரும் முதலாளிகளுக்கு ஆதரவு தெரிவித்து, நீங்கள்தான் வெளிநடப்புச் செய்தீர்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற ஏழை கூலித் தொழிலாளிகளுக்கு ஒரு துண்டு நிலம்கூட கொடுக்கப்படவில்லை. சுய உதவிப் பெண்கள் குழுக்களுக்கு செல்ஃபோன்தான் வழங்குகிறீர்களே தவிர, தரிசு நிலங்களை வழங்கி, அவர்களுக்கு வங்கிமூலம் பண உதவி செய்து தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் முன்வரவில்லை என்பதையும் எங்களுடைய விமர்சனமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,-இவர்கள் ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டை அடுக்கடுக்காக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

அடுக்கிக் கொண்டே போய்க்கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்டு ஏதாவது ஒரு சம்பவத்தைச் சொல்லி, ஆதாரத்துடன் நீங்கள் குறிப்பிடுவீர்களேயானால், தக்க பதில் உங்களுக்குத் தரப்படும். தேவையில்லாமல், நீங்கள் குற்றச்சாட்டை, ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டை அடுக்கிக் கொண்டே போவது சபை மரபை மீறிய செயலாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பாலபாரதி, பேசுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருணாகரன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் கருத்துச் சொன்னார்கள். பாலபாரதி அதற்கு விளக்கம் சொல்வார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லையென்றால், பாலபாரதியினுடைய பேச்சு இத்தோடு முடிந்துவிடும். உட்காருங்கள். பாலபாரதி, பேசுங்கள். (குறுக்கீடு) பாலபாரதி, பேசுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஆகவே, நம்முடைய இந்த வரவு-செலவுத் திட்டத்திலேகூட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. என்ன குற்றச்சாட்டைச் சொல்கிறீர்கள்? ** என்ன, ஏது என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள். ஏதாவது ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ** விவரம் சொல்லுங்கள். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்த point-க்குப் போங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, **

**செல்வி க. பாலபாரதி:** அதை நீங்கள்தான் சொல்ல வேண்டும், ** என்று. எனக்கு என்ன தெரியும்? **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுகிறீர்கள், நீங்கள் ஒரு கருத்தைச் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது, ** இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எல்லாவற்றையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கினாலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் இல்லாமல் சொன்னால், எல்லாவற்றையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கித்தான் தீர வேண்டும்.

**செல்வி க. பாலபாரதி:** பரவாயில்லை. நீங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரவாயில்லை என்றால் உட்காருங்கள். அடுத்து, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் பேச விடமாட்டேன் என்கிறீர்கள்? ஏன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசுவது, ஆதாரம் இல்லாமல் பொத்தாம் பொதுவாக, ஒட்டுமொத்தமாகச் சொல்லப்படக்கூடிய குற்றச்சாட்டு. ஒரு குற்றச்சாட்டு என்கிற வகையிலே சொன்னால், அதற்குரிய ஆதாரத்தைச் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) அப்படியில்லாமல் அடுக்கிக்கொண்டே போகக் கூடாது. தொடர்ந்து உங்களை எச்சரித்துக்கொண்டேயிருக்கிறேன். மறுபடியும், மறுபடியும் அதே மாதிரிப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். திரு. ஏ.எஸ். கண்ணன். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Speaker Sir, அவர்கள் ஒரு கருத்துச் சொல்லி, அது நம்முடைய மாண்புமிகு Finance Minister அவர்களாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருத்து என்பது அல்ல. (குறுக்கீடு) கருத்து என்பது அல்ல. அரசாங்கத்தின் மேலே, (குறுக்கீடு) ஹேமச்சந்திரன், கருத்தாகச் சொல்லவில்லை. அரசாங்கத்தின் மேலே ஒரு குற்றச்சாட்டாகச் சொல்கிறார். ஒரு குற்றச்சாட்டாகச் சொல்கிறபோது அதற்குரிய ஆதாரத்தைக் கையிலே வைத்துக்கொண்டு சொல்ல வேண்டும். இல்லையென்றால், ஆதாரத்தை என்னிடத்திலே கொடுக்க வேண்டும். (குறுக்கீடு)

**செல்வி க. பாலபாரதி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதுவும் இல்லாமல் தொடர்ந்து வரிசையாக இதுபோன்ற குற்றச்சாட்டுகளைப் பொத்தாம்பொதுவாகச் சொல்லிக்கொண்டு போவது சரியல்ல. தாங்கள் சட்டமன்ற மரபுகளை நன்றாக அறிந்தவர்கள். தாங்களே பல முறை பேசியிருக்கிறீர்கள். தாங்களே பல முறை பல கருத்துகளைச் சொல்லியிருக்கிறீர்கள். இதுதான் நிலைமை. உறுப்பினர்களைக் கொஞ்சம் நீங்கள் பக்குவப்படுத்துங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

பிற்பகல் 1–05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் தற்சமயம் சில கருத்துகளை இந்தச் சட்டமன்றத்தில் எழுப்பி இருக்கின்றார்கள். அதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் விளக்கம் தரவேண்டும். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இப்போது பேசியது முழுவதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேறு கருத்து, வேறு ஏதாவது point இருந்தால் பேசுங்கள். இல்லை, இதே மாதிரிதான் வைத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களில் குத்தகை செய்கிற விவசாயிகள் ஐந்தரை இலட்சம் பேர் இருக்கிறார்கள். வறட்சியின்போது நில வரியைத் தள்ளுபடி செய்தது அரசாங்கம். அப்போது அவர்களுக்கு விவசாயம் நடக்கவில்லை. ஆனால், குத்தகையைக் கொடுங்கள் என்று இப்போது அரசாங்கம் கேட்டு, அவர்களை நில வெளியேற்றம் செய்துகொண்டிருக்கிறார்கள். இது எப்படி உழவர்களைப் பாதுகாப்பதாக இருக்கும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. எந்த ஊரில் இது நடந்தது?

**செல்வி க. பாலபாரதி:** இது கடலூரில், தொட்டி என்கிற கிராமத்தில் ஆறுமுகம் என்ற விவசாயி நில வெளியேற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி இருந்தால் குற்றச்சாட்டைச் சொல்லுங்கள். அமைச்சர் அவர்களிடத்திலே கொடுங்கள். குறிப்பிட்ட ஒரு ஆளுக்குச் சொல்வதற்கு ஒட்டுமொத்தமாகச் சொன்னால் என்ன அர்த்தம் அது?

**செல்வி க. பாலபாரதி:** அடுத்ததாக, வட்டித் தள்ளுபடி செய்வதாக அறிவித்திருக்கிறீர்கள். 2006 வரை கால அவகாசம் என்று சொல்கிறீர்கள். ஆனால், அசல் முழுவதையும் செலுத்தினால்தான் வட்டித் தள்ளுபடி செய்யப்படுகிறது. அப்போது, ஒரு சேலை எடுத்தால் ஒரு சேலை இலவசம். ஒரு சேலை எடுப்பதற்கே வழியில்லை என்பதுதானே பிரச்சினை? அதனாலே, ஒன்று, கடனை முழுவதுமாகத் தள்ளுபடி செய்யுங்கள், அல்லது அசலைக் கட்டினால்தான்...

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, .மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள், சேலை வாங்குவதற்கே வழியில்லை என்று சொன்னார். அவர்களோடுகூட கூட்டணி வைத்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய அமைச்சர் மாண்புமிகு மணிசங்கர அய்யர் அவர்கள், பெண்கள் சேலை எடுப்பதை நிறுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அவர் எதை ஆதரிக்கிறார் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் ஒரு உதாரணமாகச் சொல்கிறார். பட்டுச் சேலை எல்லாம் எடுக்கக் கூடாது என்கிறார்.

**செல்வி க. பாலபாரதி:** ஒன்று, கடனைத் தள்ளுபடி செய்யுங்கள். அல்லது அசலைக் கட்டினால்தான் வட்டியைத் தள்ளுபடி செய்வோம் என்ற நிபந்தனையையாவது விதித்து குறைந்தபட்சம் தள்ளுபடி செய்து, விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு முன்வாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். 39,000 ஏரிகளைப் பராமரிப்பதற்கு இந்த பட்ஜெட்டில் திட்டமிடுதல் வேண்டும்.

அதேபோன்று, காவல் துறைக்கு 1,575 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதன்மைத் துறையான வேளாண்மைத் துறைக்கு ரூ.861.23 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. காவல் துறை முதன்மைத் துறையா, வேளாண்மை முதன்மைத் துறையா என்பதற்கு, அறிக்கையிலிருந்து முரண்பட்ட தகவல்களைத்தான் பெற முடிகிறது.

மாறுபட்ட பயிர்களைச் சாகுபடி...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்களுக்கு, வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி, வேளாண்மைத் துறை என்ற தலைப்பில் மட்டும் ஒதுக்கப்படுவதில்லை. கூட்டுறவுத் துறையிலே ஒதுக்கப்படுகிறது. பாசனத் துறையிலே ஒதுக்கப்படுகிறது. கால்நடை பராமரிப்புத் துறையிலே ஒதுக்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக நீங்கள் கூட்டிப் பார்த்தால் அதிகமான நிதியைப் பெறுகின்ற துறை Agriculture and its allied activities என்றுதான் வரும்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டாமணக்கு, மக்காச் சோளம், இனிப்புச் சோளம், இவற்றை எல்லாம் மாற்றுப் பயிர்களாகத் தயார் செய்வதற்கான, ஊக்கப்படுத்தக்கூடிய வகையில் பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு இந்தத் திட்டத்தில் அறிவிக்கப்படவில்லை. 5 ஆண்டுகள் முடிந்தால், காலையில் காட்டாமணக்கு டிஃபனும், மதியம் மக்காச் சோளச் சாப்பாடும், இரவு இனிப்புச் சோளத்தில் இடியாப்பமும்தான் கிடைக்கக்கூடிய அளவுக்கும், அரிசியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யக்கூடிய நிலைமையும் உருவாகிவிடும். ஆகவே, உணவு தானிய உற்பத்திக்கு அரசு இந்த அறிக்கையில் திட்டமிடவில்லை. அது திட்டமிடப்பட வேண்டும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டா, Housing Board-ல்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித் துளிகளில் உரையை முடியுங்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசியில் தமிழகம் தன்னிறைவு பெற்ற மாநிலம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறியாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்று. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், we have attained self-sufficiency in our food production. பிற மாநிலங்கள் எல்லாம் கண்டு ஆச்சரியப்படக்கூடிய அளவிற்கு 3 ஆண்டு காலத் தொடர் வறட்சி என்றாலும்கூட, 8 சதவிகித உற்பத்தி உயர்வை இந்தியாவில் எந்த மாநிலமும் பெற்றிராத அளவுக்குத் தமிழகம் பெற்றிருக்கிறது என்பதனை மைய அரசே பாராட்டுகிறது. நீங்கள் இதைப் புரியாமல் இருப்பது வேதனைக்குரிய ஒன்று.

பிற்பகல் 1-10

**செல்வி க. பாலபாரதி:** 25 இலட்சம் பேருக்குப் பட்டா என்பது இல்லை. Housing Board-ல் 20 ஆண்டுகளாகப் பத்திரம் தரவில்லை. நீதிமன்றத்தில் வழக்குகள் முடிந்த பின்னரும், வழக்கு இருப்பதாகக் கூறி, பத்திரம் தர மறுக்கப்படுகின்றது. 20 ஆண்டுகளுக்கு முன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தில் வழக்கு இல்லை, எந்த இடத்தில் பத்திரம் வழங்கப்படவில்லை என்பதை உறுப்பினர் குறிப்பிடுவாரா?

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும், எல்லோரிடமும் பல முறை பேசிக்கொண்டேயிருக்கின்றேன். அவர்களுடைய அறையில் போய்க் கேட்டால், 'போகலாமா, முடித்துக்கொள்ளலாமா, கொடுத்துவிடலாமா, நாளைக்கே வருமா' என்று அவர்தான் சொன்னார். அண்ணன்தான் சொன்னார். இப்போது வந்து எதுவுமே தெரியாதது மாதிரிச் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, மாண்புமிகு அமைச்சர் கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கலலில் உள்ள இராணி மங்கம்மாள் காலனியில், அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த இடத்தில் வழக்கு

இருக்கின்றது. வழக்கு இல்லாத இடங்களிலுள்ள பத்திரங்களை ஏறக்குறைய 349 பேரும், 224 பேரும், 84 பேரும், 3 திட்டங்களில் வாங்கியிருக்கின்றார்கள். அவர்கள் வழக்கு இருக்கின்ற இடத்தில் உடனடியாக எங்களுக்குப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்கின்றபோது, வழக்கு முடியட்டும், வழக்கு முடிந்தவுடன் தருகிறோம் என்று சொல்கின்றபோது, அதிகமான ஆட்கள் இருக்கின்ற மற்ற பகுதிகளிலும், நீங்களும் பணம் கட்டாதீர்கள், தேர்தல் வருகின்றது, உங்களுக்கும் குறைத்துத் தருகின்றேன் என்ற வகையில் அரசியல் பண்ணுவதற்காக அங்கே ஒரு கூட்டத்தைக் கூட்டி, அந்தப் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தி, இருக்கின்ற வழக்கை மறைத்து இன்றைக்குப் பேசுகின்ற நிலையை இந்த உறுப்பினர் பெற்றிருக்கின்றார் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி, எப்படிப்பட்ட மனசாட்சியோடு பேசுகிறார் என்பது எனக்குப் புரியவில்லை. அவர்தான் சொன்னார் எனக்கு. வந்து, பேசி முடித்துவிடலாமா, உறுதியாகக் கொடுத்துவிடலாமா என்று இவர் சொல்லிவிட்டு, இப்பொழுது என்மீது பழி போடுகின்றார் பாருங்கள். பத்திரத்தை நானா பத்திரமாக வைத்துக்கொண்டிருக்கின்றேன்? ஏதாவது ஒன்று முடிவு செய்து கொடுங்கள், இல்லை, விடுங்கள். ஏதாவது ஒன்றைச் செய்யுங்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** வழக்கு இருக்கிற பத்திரத்தைக் கொடுக்க முடியாத சூழ்நிலை. ஆனால், அதுதான் நியாயம் என்று பேசிவிட்டு, திண்டுக்கல் சென்றவுடன் மற்றவர்களைக் கூப்பிட்டு, உங்களுக்கும் பெற்றுத் தருகின்றேன் என்று அங்கே கூட்டத்தைப் போட்டு, தேர்தல் சமயத்தில் அரசியல் செய்தால் இந்த அரசு என்ன செய்யும்? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், இது திண்டுக்கல் பிரச்சினை. உங்களுக்குத் தெரியாது. அமைச்சருக்கும், அவருக்கும் மட்டும்தான் தெரியும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சரிடம் ஒரு விளக்கம் சொல்ல விரும்புகின்றேன். அதாவது, திண்டுக்கல்லில் மங்கம்மாள் காலனியில் 20 ஆண்டுகளுக்கு முன்னாலே பணம் கொடுத்து, இன்னும் அந்த



வீடுகளில் குடியிருப்பவர்களுக்குப் பத்திரம் கிடைக்கவில்லை. பத்திரம் கிடைக்கப்பெறாததன் காரணமாக, அவர்களால் இன்றைக்கு அரசால் அறிவிக்கப்படுகின்ற பல சலுகைகளைப் பெற முடியவில்லை. அவர்களால் சட்டபூர்வமாக அவர்களுடைய உரிமைகளைப் பெறுவதற்கு—வங்கிகளில் loan பெறவேண்டுமென்றால்கூட, அதற்குப் பத்திரம் தேவையாக இருக்கிறது. நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்ற காரணத்தால், அவர்களிடமிருந்து பெற்ற பணத்திற்குப் பத்திரம் கொடுக்கக் கூடாது என்று நீதிமன்றத்தில் சொல்லவில்லை. ஆகவே, வாங்கிய பணத்திற்கு அவர்களுக்கு ஒரு authority என்ற முறையில் ஏதாவது ஒரு பத்திரம் பதிவு செய்து கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திலே ஒரு இடத்தை வாங்குகின்றபோது, முழுவதுமாகப் பணம் கட்டினால்தான் அவர்களுக்குப் பத்திரம் வழங்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுத்த பணத்திற்கு ஏதாவது ஒரு பத்திரத்தைக் கொடுங்கள் என்று சொன்னால், எந்தப் பத்திரத்தைக் கொடுப்பது என்று எங்களுக்கே புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, பேச்சை முடியுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற வீட்டு வசதி வாரியத்தில் 20 வருடங்களுக்கு முன்னாலே வீடுகளைக் கொடுத்துவிட்டு, பத்திரத்தை இன்றைய விலைக்குக் கொடுங்கள், நிலத்தின் விலைக்குக் கொடுங்கள், அப்போதுதான் பத்திரம் கொடுப்போம் என்று சொல்வது, 20 ஆண்டு கால சாதனையை நாங்கள் நான்கு வருடத்தில் முடித்துவிட்டோம் என்று நீங்கள் சொன்னீர்கள் என்றால், அது சாதனையா, வேதனையா என்று புரியவில்லை. இதற்கு மக்கள் சரியான தீர்ப்பளிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, பேச்சை முடியுங்கள். திரு. ஏ.எஸ். கண்ணன். (குறுக்கீடு) பேசியது போதும், முடியுங்கள். திரு. ஏ.எஸ். கண்ணன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி மட்டும் சொல்லிவிட்டு முடித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லிவிட்டீர்கள், முடியுங்கள். திரு. ஏ.எஸ். கண்ணன்.

**செல்வி க. பாலபாரதி:** நன்றி மட்டும் சொல்லிவிட்டு முடித்துக்கொள்கின்றேன். ரூ.8,550 கோடி அயல் நாட்டு நிதியுதவி பெற்றுள்ளதாக இந்த அறிக்கையில் இருக்கிறது. அது என்ன தலைப்பின்கீழ் பெறப்பட்டது, என்ன நிபந்தனையோடு பெறப்பட்டது என்ற விவரங்கள் இல்லை. 5,570 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கிறது. இதை எப்படிச் சரி செய்யப் போகின்றீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கெல்லாம் நிதி அமைச்சர் பதிலுரையில் பதில் சொல்வார். திரு. ஏ.எஸ். கண்ணன்.

**செல்வி க. பாலபாரதி:** ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கின்றேன். ஒரே ஒரு கோரிக்கை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. **

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எனது நெஞ்சார்ந்த வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன். அறிக்கைமீது பேசுவதற்கு முன்னால் எனது தொகுதியில் இருக்கின்ற சில பிரச்சினைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னைப் பெருநகரத் திட்டம் என்பது ஏறக்குறைய என்னுடைய தொகுதி முழுவதும் வருகின்றது. பல்லாண்டு காலமாக வாழ்ந்து வருகின்ற சாதாரண மக்களுக்கு அங்கே பட்டா கிடைப்பதில் பிரச்சினை உள்ளது. ஆகலால் அரசு நிபந்தனைகளைத் தளர்த்தி, அந்த மக்களுக்குப் பட்டா வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு பகுதிகளில் தொழிற்சாலைகள் துவக்கப்படுகின்றன. விவசாயிகளிடம் நிலம் வாங்கப்படுகிறது. ஆனால், அந்தத் தொழிற்சாலை துவங்கப்பட்ட பிறகு அந்தப் பகுதியிலுள்ள படித்த வாலிபர்களுக்கோ, அல்லது நிலம் கொடுத்த விவசாயிகளுக்கோ வேலை என்பது மறுக்கப்படுகிறது. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



அடுத்து, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 52 அரசாணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த 52 அரசாணைகளும் முறையாக, சரியாக நிறைவேற்றப்படவில்லை. அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பழவேற்காடு பகுதியிலுள்ள அந்த மக்களுக்குப் பாலம் கட்டுவதற்காக இரண்டு பட்ஜெட்களில் அறிக்கை வந்தது. வேலைக்கு டெண்டர் விடப்பட்டது. ஆனால், பணி துவக்கப்படவில்லை. தற்போதுகூட 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தேர்தலுக்கு முன்பாவது அந்தப் பாலம் கட்டுகின்ற பணி துவக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருவள்ளுவர் பல்கலைக்கழகம் என்று, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சாதாரண மக்கள் பயன்பெறுகின்ற முறையில் அது உருவாக்கப்பட்டது. ஆனால், இதுவரைக்கும் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு Vice Chancellor-ஓ Registrar-ஓ நியமிக்கப்படவில்லை என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதே நேரத்தில், அப்படி நியமிக்கப்படுகின்றபோது, தாழ்த்தப்பட்ட ஒருவரை அந்தப் பல்கலைக்கழகத்திற்குத் துணை வேந்தராகவும், பதிவாளராகவும் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். Syndicate, Senate இருக்கின்றன. மத்திய அரசின் சட்டம் அங்கு இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களை நியமிக்க வேண்டும் என்று இருந்தும், சிண்டிகேட்டுகளுக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் நியமிக்கப்படவில்லை, அவர்களை நியமிக்க வேண்டும் என்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு மாவட்டங்களில் அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய சிலைக்கு அங்கே வளையம் போடப்பட்டிருக்கிறது. இதை ஏற்கெனவே சட்டமன்றத்தில் பேசியிருக்கிறோம். ஆனால், இதுவரையிலும் அந்த வளையங்கள் நீக்கப்படவில்லை. ஏதோ அது அண்ணல் அம்பேத்கர் அவர்களை அவமதிக்கின்ற ஒரு நிலையாகவே பொது மக்கள் பார்வைக்கு இருக்கிறது. அது உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். புதிய வேலைவாய்ப்புகளை அதிகமாக உருவாக்கியிருக்கிறோம் என்ற வகையில் இங்கே நிதிநிலை அறிக்கையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சிறு தொழில்களுக்காகக் கொடுக்கப்பட்ட கோடானு கோடி மானியங்கள்

இந்தப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்குத் திருப்பி விடப்பட்டும், இன்றைக்கு 216 கோடி ரூபாய் மூலதனத்தில் 212 வட்டங்களில் 336 தொழில்கள் துவக்கப்பட்டிருக்கின்றன. ஆக, 8,906 பெண்கள் உட்பட 12,000 பேருக்குத்தான் வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், இந்தப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுவிடவில்லை. இதை மாற்றுவதற்காக இந்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். வேலையற்ற வாலிபர்கள் இன்றைக்கும் தமிழகத்தில், ஏற்கெனவே சொல்லியபடி, 44 இலட்சம் பேர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

கட்டடத் தொழிலாளர் நல வாரியம். இதில் இன்றைக்கு 9,50,000 பேர் பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் 40 இலட்சம் கட்டடத் தொழிலாளர்கள் தமிழகத்தில் இன்றைக்கு இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியும். இன்றைக்கு இந்த வாரியத்திற்குக் கட்டடம் கட்டுபவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்ற பணம், 0.3 சதவீதம்தான் வசூலிக்கப்படுகிறது. ஆனால் மத்திய அரசும், கடந்த காலத்தில் முன்னாள் முதலமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்களும் ஒரு சதவீதம் நிதியே வசூலிக்கப்பட வேண்டும் என்று சட்டம் இயற்றியிருக்கிறார்கள். ஏனோ தெரியவில்லை, மாநில அரசால் தொடர்ந்து 0.3 சதவீதம்தான் வசூலிக்கப்படுகிறது. ஆனால், சட்டங்கள் இயற்றியிருப்பதைப்போல ஒரு சதவீதம் வசூலித்தால் குறைந்தபட்சம் வருடத்திற்கு 100 கோடி ரூபாய் வருமானம் கட்டடத் தொழிலாளர் நல வாரியத்திற்கு வரும். அப்படி வருகின்றபோது, அந்தத் தொழிலாளர்களுக்கு மருத்துவம், இ.எஸ்.ஐ. போன்ற வசதிகளும், அல்லது தற்போது கொடுக்கின்ற 200 ரூபாய் பென்ஷன் என்பது மிகக் குறைவு என்பதை ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறோம், அதை 1,000 ரூபாயாக நிச்சயம் அரசு தர முடியும். ஆதலால், கட்டடம் கட்டுபவர்களிடமிருந்து வசூலிக்கின்ற பணத்தை, 1 சதவிகிதம் வசூலிக்க வேண்டும். அதே நேரத்தில், மத்திய அரசைக் குறை கூறிக்கொண்டிருக்கிற மாநில அரசு, மத்திய அரசு கட்டுகின்ற கட்டுமானப் பணிகளுக்கெல்லாம் 1 சதவிகிதம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது; இப்படிக் கோடிக்கணக்கான பணம் மத்திய அரசின் நிலுவையிலே உள்ளது; ஏன் இதை மாநில அரசு வாங்கவில்லை என்பது எங்களுக்குப் புரியவில்லை. ஆதலால் மாநில அரசு, மத்திய அரசு தரவேண்டிய அந்த 1 சதவிகித நிதியை வாங்க வேண்டும். வாங்குகின்ற அதே நேரத்தில், மத்திய அரசு நிதி 1 சதவிகிதம் பாக்கி வைத்தால், மாநில அரசும் தர வேண்டும் என்ற நிலையில், நீங்கள் அதை வாங்காமல் இருக்கின்றீர்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.



பிற்பகல் 1–20

கூட்டுறவுத் தேர்தல். இதைச் சொல்கிறபோது அமைச்சர் அவர்கள் தயாராகிவிட்டார், இடைக்காலத் தடை என்பார், நீதிமன்றத்தில் இருக்கிறது என்பார்கள். ஆனால், அந்தத் தடையை நீக்குவது மட்டுமல்லாமல், அங்கே கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், தற்போது அங்கே தனி அதிகாரிகளுடைய ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது. ஜனநாயக முறையில் கூட்டுறவு அமைப்புகள் இயங்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே நேரத்திலே, மத்திய அரசு கூட்டுறவு அமைப்புகளை எல்லாம் சீர்திருத்த, புனரமைக்க 12 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. அந்த 12 ஆயிரம் கோடி ரூபாயில் மாநில அரசு எவ்வளவு நிதியைப் பெற்றிருக்கிறார்கள், பெறவில்லையா என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு மொத்தத்தில் 13 ஆயிரத்து சில்லறை கோடி ரூபாய் பணத்தை ஒதுக்கி இருக்கிறார்கள். அது இந்தியா முழுவதும் இருக்கிற அனைத்துக் கூட்டுறவு அமைப்புகளுக்கும் சேர்த்துத்தான் என்பதையும், அதை எவ்வாறு பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கான வரைமுறை ஆணைகள் இன்னும் தமிழக அரசுக்கு வந்து சேரவில்லை; கூட்டுறவு இயக்கத்திலே தமிழகம் சிறப்பான வகையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதையும் கூறி அமர்கிறேன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** நாங்களும் ஒப்புக்கொள்கிறோம். ஆக, வழிவகை என்பது அதில் சொல்லப்பட்டிருக்கிறது. எங்களுக்குத் தெரியும். குறைந்தபட்சம் 50 சதவிகிதம் மத்திய அரசு நிதி தருகிறது. மாநில அரசு 30 சதவிகிதம் தர வேண்டும். கூட்டுறவு அமைப்புகள் 20 சதவிகிதம் தர வேண்டும். இந்த நிபந்தனையில் ஒதுக்கப்பட்ட பணம் என்பதை நாங்கள் தெரிந்து வைத்திருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புரிந்துகொள்ளாமல்

சொல்கிறார்கள். வைத்தியநாதன் கமிட்டியின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டால், அதன்படி மத்திய அரசு ஒதுக்கி இருக்கிற தொகை 13,400 கோடி ரூபாய். இதை இந்தியா முழுவதும் இருக்கிற அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களும் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த கமிட்டியிலே சொல்லியிருக்கிற கொள்கைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளும்போது தமிழகத்திலே இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிற 4,500 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே பாதிக்கு மேற்பட்ட கூட்டுறவு வங்கிகளை நாம் மூடக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கிற 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே 7, 8 மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும் நாம் கைவிடக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர் ஏற்றுக்கொள்கிறாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் பிரச்சினையை முழுவதும் தெரியாத வகையில் தயவுசெய்து குறிப்பிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** பிரச்சினையைப் புரிந்துதான் பேசுகிறோம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தை அளித்தார்கள். வைத்தியநாதன் குழுவினுடைய பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டால் தமிழகத்திலே 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகள், ஆயிரக்கணக்கான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூடப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது என்று சொல்கிறார். அதற்குரிய காரணங்களைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்று தொடர்ந்து இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இந்தக் காரணம் எப்படி நடவடிக்கையாக மாறுகிறது என்பதைப் பற்றி இங்கே நான் விவாதிக்க விரும்பவில்லை. அவை வேறு விஷயங்கள். ஆனால், இந்த வைத்தியநாதன் குழுவினுடைய பரிந்துரையை ஏற்றுக்கொள்கிற காரணத்தினாலே மூடிவிடுகிற சூழ்நிலை வருகிறது என்ற காரணத்தைச் சொல்லி, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுடைய நிர்வாகங்கள் தொடர்ந்து நலிந்துகொண்டே இருப்பதற்குரிய அந்த நிர்வாகச் சீர்கேட்டை நிவர்த்தி செய்வதற்குரிய அந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாகத்தான் அர்த்தம். ஆகவே, இதனுடைய பரிந்துரையை முழுவதுமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம். அதே நேரத்திலே, இதிலிருக்கிற இடர்ப்பாடுகளைக் களைவதற்குரிய முயற்சி எடுக்கப்பட வேண்டும். ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் இந்தக் கூட்டுறவு



நிர்வாகங்கள் செயல்படாமல் சென்றுகொண்டே இருக்கிற அந்த மோசமான போக்குகளிலிருந்து மீளச்செய்து, அவை விவசாயிகளுக்கும், மக்களுக்கும் பயனடையச் செய்கிற வகையில் மக்கள் பிரதிநிதிகளுள்ள நிர்வாகமாக அதை மாற்றுவதற்குரிய முயற்சியைப் பற்றி இந்த அரசு என்ன கருத்துக் கொண்டிருக்கிறது?

பிற்பகல் 1–25

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், வைத்தியநாதன் கமிட்டியினுடைய, முழு கமிட்டியினுடைய அறிக்கையையும் படித்துப் பார்க்க வேண்டும். படித்துப் பார்க்காமல் எந்த வகையில் குறிப்பிடுகின்றார் என்று தெரியவில்லை. விவசாயிகளுக்குக் கொடுத்த பயிர்க் கடனானாலும், அல்லது கூட்டுறவு இயக்கத்தினுடைய அங்கத்தினர்களுக்குக் கொடுத்த கடனானாலும், கொடுத்த கடன் கேட்பில், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் கவனிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கவனிக்க வேண்டும் தயவுசெய்து. ஒரு பிரச்சினையைக் கிளப்பிவிட்டு, வேறு விவரத்தில் தலையிடக் கூடாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைத்தியநாதன் கமிட்டி சொல்லுகிற விவரம், உறுப்பினர்களுக்குக் கொடுத்த கடனில், பயிர்க் கடனானாலும், நெசவுக் கடனானாலும், எந்த வகையிலும் கொடுக்கப்பட்ட கடனில் 50 சதவிகிதம் கடன் தொகையானது திரும்ப வசூலிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அந்தக் குழுவினுடைய பிரதான அறிக்கை சொல்கிறது. அப்படியானால், கடந்த நான்கு ஆண்டு காலம், தொடர்ச்சியாக வறட்சி, சுனாமி, வெள்ளம் போன்ற காலங்களில் கொடுக்கப்பட்ட பயிர்க் கடனை வசூலிக்கக் கூடாது என்று நீங்கள் சொல்கிறீர்கள், கடனைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று நீங்கள் சொல்கிறீர்கள். இவையெல்லாவற்றையும் செயல்படுத்துகிற நேரத்தில், வைத்தியநாதன் கமிட்டியினுடைய அறிக்கைப்படி நான் எவ்வாறு செயல்பட முடியும் என்பதை நீங்கள் விளக்க வேண்டும். ஆகவே, கூட்டுறவு இயக்கம் ஏதோ இப்பொழுது நலிவுற்றிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவு இயக்கம் எப்பொழுது நலிவுற்றது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் இப்பொழுது யாரோடு கூட்டணி கொண்டிருக்கிறீர்களோ, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கூட்டுறவு இயக்கம் ஒரு கொள்ளைக் கூடாரமாக மாறியது. இன்றைக்குக் கூட்டுறவு இயக்கம் வலிவோடு, சீர்திருத்தம் செய்யப்பட்டு, மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

அறிவார்கள். நடைபெற்ற தவறுகள் இப்பொழுது சீர்திருத்தம் செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவு இயக்கத்தினுடைய ஓட்டை, உடைசல்கள் எல்லாம் இப்பொழுது அடைக்கப்பட்டு வருகின்றன.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திலே— நான் கேட்பது கூட்டுறவுத் துறையைப் பற்றி. நீங்கள் சொல்வது, கூட்டணியைப் பற்றி. நாம் அந்த விவாதத்திற்குள்ளே செல்ல வேண்டிய அவசியம் இல்லை. நான் நல்ல நிலையில், நல்ல கருத்தோடு விவாதிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். குறிப்பாக, இந்தக் கூட்டுறவுத் துறையைப் பற்றிய, வைத்தியநாதன் குழுவினுடைய பரிந்துரையை ஏற்றுச் செயல்படுத்துகிறபொழுது, வெள்ளம் வருகிறபொழுது, வறட்சி வருகிறபொழுது, புயல் வருகிறபொழுது தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறீர்கள் என்று கேட்கிறீர்கள். கண்டிப்பாகக் கோரிக்கை வைக்கிறோம். தள்ளுபடி செய்ய வேண்டிய பொறுப்பிலே அரசு இருக்க வேண்டும் என்பதிலே நான் அழுத்தமான கருத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், வைத்தியநாதன் குழுவினுடைய அறிக்கையை ஏற்கிற காரணத்தினாலே, இயற்கைச் சீற்றங்களிலே பாதிக்கப்படுகிற விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டாம் என்ற முடிவிற்குச் செல்ல முடியாது. அந்தப் பொறுப்பு அரசினுடையது என்ற காரணத்தினாலே, கூட்டுறவுத் துறை நலிவடையாமல், அதற்கு ஈடுகட்ட வேண்டிய நிதியை அரசு கொடுக்க வேண்டுமே தவிர, நிவாரணம் இல்லையென்று சொல்லக் கூடாது.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கொடுக்க வேண்டும். கொடுக்கிற நிலையிலே இருப்பது மத்திய அரசு. NABARD வங்கி. NABARD வங்கியினுடைய பணத்தைத்தான் மாநிலத்திலேயிருக்கக்கூடிய கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்குக் கடனாக வழங்கிக் கொண்டிருக்கின்றன. NABARD வங்கி என்ன சொல்கிறது என்று சொன்னால், கொடுத்த கடனில் *50* சதவிகிதத்திற்கு மேலாக வசூலானால் மட்டும்தான் மாநிலத்திலே இருக்கிற கூட்டுறவு இயக்கங்கள் செயல்பட முடியும் என்று வைத்தியநாதன் கமிட்டி சொல்லியிருக்கிறது. அதிலே சில மாறுதல்களை நம்முடைய மாநில அரசின் சார்பாக, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, வைத்தியநாதன் கமிட்டி சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்திலே நாங்கள் தெரிவித்திருக்கிறோம். அந்த மாறுதல்களை, வைத்தியநாதன் கமிட்டி எவ்வாறு ஏற்றுக்கொள்கிறது என்பதனைப் பொறுத்து, சில, பல



மாறுதல்களுக்குட்பட்டு நாம் அதைச் செயல்படுத்த உள்ளோம் என்கிற தகவலைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கண்ணன், இரண்டு மணித் துளிகளில் முடியுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி, சிறப்பு ஊராட்சிகளில் பணிபுரியும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட துப்புரவுப் பணியாளர்களைப் பற்றி அறிக்கையில் ஏதும் கூறப்படவில்லை. ஏற்கெனவே அரசாணை, *3* ஆண்டு காலம் பணிபுரிந்தால் அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று இருக்கின்றது. நீதிமன்றம் சென்றாலும், அரசாணையைக் காட்டி, *71*–ன்படி கால ஏற்ற ஊதியத்தை வழங்க வேண்டுமென்றால், மாநகராட்சி நிர்வாகம் இதுநாள் வரையிலும் மறுத்து வந்தது. வேலை நியமனத் தடைச் சட்டத்தை வாபஸ் வாங்கியுள்ளதால், அந்தப் பத்தாயிரம் துப்புரவுத் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்களைப் பணி நிரந்தரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *12,618* ஊராட்சிகளில் துப்புரவுத் தொழிலாளர்கள், Pumpset operator–கள் மற்றும் எழுத்தர்கள் ஒரு இலட்சம் பேர் பணிபுரிகிறார்கள். கோயில்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு pension வழங்கிய இந்த அரசு, *12,618* ஊராட்சிகளில் பணிபுரிகின்ற ஒரு இலட்சம் துப்புரவுத் தொழிலாளர்கள், எழுத்தர்கள், Pumpset operator–களுக்குக் குறைந்தபட்ச pension–ஐ வழங்கிட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அகவிலைப்படி *50* சதவிகிதத்தை அடிப்படைச் சம்பளத்தில் இணைப்பது குறித்து சட்டமன்றத்தில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது. ஆனால், அரசு சார்ந்த நிறுவனங்களான TUCS போன்றவற்றில், அரசு கொண்டு வருகின்ற இப்படிப்பட்ட சலுகைகள் உடனடியாக நடைமுறைக்கு வருவதில்லை. அதை TUCS போன்ற நிறுவனங்களுக்கும் நடைமுறைக்குக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

தொழிலாளர் நல வாரியம். அந்த வாரியத்தில் போதிய ஊழியர்கள் இல்லாததனால், தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறைந்தபட்ச சலுகைகூட அங்கே மனுச் செய்தால் பல ஆண்டு காலமாகக் கிடைக்காத ஒரு நிலை இருக்கின்றது. அதேபோல், தொழிற்சாலைகள்...

[2006 ஜனவரி 23

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. ஒரு மணித் துளியில் பேசி முடியுங்கள், கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** தொழிற்சாலைகள் இந்த ஆட்சியில் நலிவடைந்து கிடக்கின்றன. ஆனால், பாதுகாப்பு நடவடிக்கை இல்லை. அதே நேரத்தில், Dunlop, Metal Box போன்ற கம்பெனிகளில், இன்றைக்குத் திறக்கிறோம் என்று அறிக்கைகள் கொடுத்துக்கொண்டு, அதே நேரத்தில் அங்கே V.R.S. திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இது தொழிலாளர் நல வாரியத்திற்குத் தெரியுமா, அல்லது உடன்பாடா என்று இந்த நேரத்திலே நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். புதிய பஞ்சாலைகள் என்று இன்றைக்கு நவீனப் பஞ்சாலைகள் தொடங்கப்படுகின்றன. அந்தப் பஞ்சாலைகளில் கொத்தடிமை முறையை ஒழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கிறோம் என்று அரசு இன்றைக்குச் சொல்லிக்கொண்டிருக்கின்றது. ஆனால், பங்களாதேஷ், இலங்கை போன்ற நாடுகளுடன் ஜவுளித் துறையில் போட்டி போடுவதற்காக, இங்கே பஞ்சாலைகளில் 16 வயது முதல் 18 வயது வரை உள்ள பெண்களைக் கொத்தடிமைகள்போல வைத்து மூன்று வருட காலமாக அந்தப் பெண்கள் அங்கே பணிபுரிகின்ற ஒரு நிலையிருக்கின்றது. இந்தத் திட்டத்திற்குத் திருமாங்கல்யத் திட்டம் என்று அந்த ஆலை முதலாளிகள் பெயரிட்டிருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் மூன்று ஆண்டு காலம், நான்கு ஆண்டு காலம் பணிபுரிந்து வெளியே வருகின்றபோது, அவர்களிடம் ரூ.30 ஆயிரம், ரூ.40 ஆயிரம் கொடுத்து வெளியே அனுப்புகின்றார்கள். இப்படிப்பட்ட மோசமான நிலை குறித்து தொழிலாளர் நல வாரியத்திற்குத் தெரியுமா? அல்லது...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் சுற்று வட்டாரத்திலுள்ள பஞ்சாலைகளில் பெண்கள் பயிற்சியாளர்களாகப் பணியமர்த்தப்படுகிறார்கள். பயிற்சிக் காலம் அதிகபட்சம் மூன்று ஆண்டு காலமாக இருக்கிறது. பயிற்சிக்



2006 ஜனவரி 23] [திரு. ப. அண்ணாவி]

காலத்தில் அவர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் பஞ்சாலைக்குப் பஞ்சாலை வேறுபடுகிறது. பெண்களைக் கொத்தடிமைகளாக நடத்துவதாக இத்துறையில் புகார் ஏதும் பெறப்படவில்லை. குறிப்பிட்டுப் புகார் பெறப்பட்டால், நிர்வாகத்தின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** அமைச்சருடைய பதிலுக்கு நன்றி கூற விரும்புகிறேன். ஆனால், அதே நேரத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** முடித்துவிடுகிறேன். தொழில் முனைவோருக்குக் குறைந்தபட்ச வட்டியில் கடன் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது. இந்தக் கடன் வழங்குவதற்கு உத்தரவாதம் எந்த வகையில் என்று எங்களுக்குப் புரியவில்லை. இன்றைக்கு credit guarantee என்று ஒன்று இருக்கின்றது. அந்தத் திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்திருக்கின்றது. அந்தத் திட்டம்கூட இன்றைக்கு அந்த வங்கிகளில் முழுமையாக அமல்படுத்தப்படுவதில்லை. இங்கே மாநில அரசு, நம்முடைய TIIC போன்ற நிறுவனங்களில் இந்தத் திட்டத்தை எடுத்து, அந்தக் கடனை சிறு தொழில் முனைவோர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** S.M. Development Bill என்று மத்திய அரசு கொண்டு வந்தது. அதில் குறுந்தொழில்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தன. பல்வேறு தொழில் முனைவோர் சங்கங்கள் பல போராட்டங்களை நடத்திய பிறகு, இன்றைக்கு அந்த Bill-ஐ M.S.M. Bill என்று, அதாவது Micro, Small, Medium Development Bill என்று மாற்றியிருக்கின்றார்கள். ஆனால் ஏனோ தெரியவில்லை, நம்முடைய அறிக்கையில் இங்கே சிறு தொழில், மத்திய தரத் தொழில் என்றுதான் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. அங்கே கைத் தொழிலையும், குடிசைத் தொழிலையும் அல்லது வேலைவாய்ப்பளிக்கின்ற குறுந்தொழிலையும்—tiny sector-ஐயும் பட்ஜெட்டில் கண்டுகொள்ளவேயில்லை. இந்த

நிலைமை தொடர்ந்து நீடிக்கக் கூடாது என்று நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள். அவ்வளவுதான். நாளை (குறுக்கீடு) உட்காருங்கள், அறிவிப்பு. (குறுக்கீடு) முடித்துவிடுங்கள். நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகக் கருத்தினைக் கூற வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது நாளை 24–1–2006 (குறுக்கீடு) ஒரு அறிவிப்பை மட்டும் சொல்லிவிடுகிறேன். 24–1–2006 அன்று முன்வரிசைத் தலைவர்கள் பேசலாம். நாளை கேள்வி நேரம் வேண்டாம். நாளை மறுநாள் புதன்கிழமை கேள்வி நேரத்தை வைத்துக்கொள்ளலாம். வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றவுடன் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை வினாக்கள்–விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ, 24–1–2006 செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 24–1–2006 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24–1–2006) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

41. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

42. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம்) முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

43. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர்) முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

44. 2004–2005 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

45. 2004–2005 ஆம் ஆண்டிற்கான மாநகர்ப் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

46. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (சேலம்) முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

44. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து நான்காவது அறிக்கை. (2003–2006)

45. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து ஐந்தாவது அறிக்கை. (2003–2006)

46. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து ஆறாவது அறிக்கை. (2003–2006)

47. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து ஏழாவது அறிக்கை. (2003–2006)

48. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து எட்டாவது அறிக்கை. (2003–2006)

49. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2003–2006)

D
V21473 ...
006.87...
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22700b.
சென்னை-600 008
நூலகம்

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.